இயல்
இரண்டு

கதையியல்

9BKS7P

தமிழில் கதைஇலக்கியம் குறித்த சான்றுகள் தொல்காப்பியத்தில் கிடைப்பதன் மூலம், அதன் தொன்மையை நாம் அறியலாம். தமிழின் மரபுப்பண்புகளோடும் மேலைநாட்டினரிடமிருந்து பெறப்பட்ட வடிவநேர்த்தியோடும் தமிழ்ச்சிறுகதைகள் தோன்றி வளர்ந்தன.

இப்பாடப்பகுதியில் தமிழ்ச்சிறுகதைகளின் வளர்ச்சி குறித்தும், பல்வேறு காலகட்டங்களில் எழுதிய படைப்பாளர்கள் குறித்தும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. நல்ல கதை இலக்கியங்களை படிப்பதற்கும் திறனாய்வு செய்வதற்குமான வழிகாட்டல், பொருத்தமான எடுத்துக்காட்டுகளோடு அமைந்துள்ளது. சிறுகதை எழுதுவதற்காக வழங்கப்படும் பயிற்சி, சிறந்த படைப்பார்வத்தை உண்டாக்கும். மேலும், இப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள சிறுகதைகள், அயலக எழுத்தாளர் சிறுகதை, அயலகச் சிறுகதை, மொழிபெயர்ப்புச் சிறுகதை, குறுங்கதை, நுண்கதைகள் ஆகியன படிப்போருக்குப் புதிய திறப்புகளை ஏற்படுத்தும்.

கற்றல் நோக்கங்கள்

- தமிழ்ச் சிறுகதையின் தோற்றம், வரலாறு, இன்றைய வளர்ச்சிப்போக்கு ஆகியவற்றை அறிந்துகொள்ளுதல்.
- சிறுகதையின் வடிவம், கதைப்பின்னல் மற்றும் எழுதும்முறை ஆகியவற்றைப் புரிந்து கொள்ளுதல்.
- பல்வேறு வடிவங்களில் அமைந்த சிறுகதைகளை வாசித்தல்.
- சிறுகதைகளைத் திறனாய்வு செய்தல், சிறுகதை எழுதுதல் ஆகிய திறன்களைப் பெறுதல்.

பாடப் பகுதி

- தமிழ்ச்சிறுகதை – தோற்றமும் வளர்ச்சியும்
- சிறுகதை வாசிப்பும் திறனாய்வும்
- சிறுகதை எழுதும் கலை
- யானையின் சாவு – சார்வாகன்
- பூ உதிரும் – ஜெயகாந்தன்
- இறுக மூடிய கதவுகள் – ஆர். சூடாமணி
- நசுக்கம் – சோ. தர்மன்
- 'பேபி' குட்டி – கே. பாலமுருகன்
- பசி – தாமரைச்செல்வி
- அஷமஞ்சா பாபுவின் நாய் – சத்யஜித் ரே
- ரப்பர் பந்து – எஸ்.ராமகிருஷ்ணன்
- பனித்துளியின் பேச்சு– ஹெச்.ஜி.ரசூல்
- ஒற்றைக்குரல் – இளங்கோ கிருஷ்ணன்

11th Advance Tamil - FINAL.indd 31 14-02-2019 17:27:56

இயல் இரண்டு

1. தமிழ்ச்சிறுகதை – தோற்றமும் வளர்ச்சியும்

ஆதிமனிதன் தனது அனுபவத்தை அல்லது நடந்த நிகழ்வை அடுத்தவரிடம் விவரித்த போது கதைசொல்லுதல் என்னும் கலை ஆரம்பித்தது. அதைச் சொல்பவர் தமது சொல்லும் திறனுக்கேற்ப உவமைகளோடும் வருணனைகளோடும் சொன்னபோது, அது கேட்பவரைக் கவர்ந்திழுக்கிற ஒரு வலிமையான தொடர்பு வடிவமாக உருவானது.

தொடக்கத்தில் தமிழ்மரபில் கதைகள் வாய்மொழியாகவே சொல்லப்பட்டன. பின் உரைநடை கலந்த கதைப்பாடல்கள் கதைகளைத் தந்தன. மொழியின் வரிவடிவம் செழுமைப்பட்ட பிறகு, கதை இலக்கியம் எழுத்தில் பதிவானது.

தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின்

"பொருள் மரபில்லாப் பொய்ம்மொழியானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்"

(பொரு. செய். 1420)

என்ற அடிகளைத் தமிழின் உரைநடை மரபை உணர்த்தும் அடிகளாகக் கொள்ளலாம்.

பொருள் மரபில்லாப் பொய்ம்மொழியானும் என்பதற்கு, கற்பனை கலந்த புனைவு மொழியாக, அதாவது 'யானையும் குருவியும் தமக்குள் நட்புப் பாராட்டிப் பேசிக்கொள்வதைப் போல' எனவும், பொருளொடு புணர்ந்த நகைமொழியானும் என்பதற்கு, 'உண்மை கலந்த வேடிக்கைப் பேச்சு' எனவும் உரையாசிரியர் விளக்கம் தருவர்.

மரபிலிருந்து மேற்கூறிய இரு கூறுகளையும் எடுத்துக்கொண்டு பாரதியார் தமது கதையை உருவாக்கினார். அவரது 'காக்காய் பார்லிமெண்ட்' கதையில் காகங்களின் பேச்சு 'உண்மை கலந்த வேடிக்கைப் பேச்சாக' இருக்கின்றன. இந்த மரபுக்கூறுகளுடன் அமைந்த அவருடைய 'ஆறில் ஒரு பங்கு' (1910) கதை, தமிழின் தொடக்ககாலக் கதைகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

சிறுகதையை மேலைநாடுகளின் இலக்கிய வடிவமாகத் திறனாய்வாளர்கள் வரையறுக்கின்றனர். உலகச் சிறுகதைகள் அமைந்த வடிவத்தைப் பின்பற்றியே தமிழ்ச் சிறுகதைகளும் எழுதப்பட்டன. சிறுகதை என்பது ஒரு சம்பவம், ஒரு மனநிலை, ஒரு சிக்கல் என ஒரு பொருள் பற்றி மட்டுமே எழுதுவது. எந்த நோக்கத்தோடு கதை எழுதப்படுகிறதோ, அதை நோக்கியே கதையின் அனைத்துக் கூறுகளும் செல்லும் ஓர்மை கொண்டது. வாசகன் ஊகித்தறிய முடியாத ஒரு திருப்பத்தை இறுதியில் கொண்டு முடிவது. இந்த வரையறைக்கு உட்பட்டே திறனாய்வாளர்களால் சிறுகதையின் வடிவம் மதிப்பிடப்படுகிறது.

தமிழில் மேற்கூறிய சிறுகதைக்கான வடிவ அமைதியுடன் வெளிவந்த முதல் சிறுகதையாக, வ.வே.சு. என்றழைக்கப்பட்ட வரகனேரி வேங்கடேச சுப்ரமணியம் எழுதிய 'குளத்தங்கரை அரசமரம்' (1915) அறியப்படுகிறது. ஓர் அரசமரம் பேசுவதுபோல் அமைந்த இக்கதை, அதன் சமகாலச் சிக்கலை நுட்பமாகப் பேசிச்செல்கிறது. அ.மாதவையாவின் சிறுகதைகளும் தொடக்ககாலச் சிறுகதைகளாக அறியப்படுகின்றன.

தமிழ்ச்சிறுகதைப் படைப்பாளர்களைப் பொதுவாக ஐந்து தலைமுறையினராக நாம் பிரித்து மதிப்பிடலாம்.

முதல் தலைமுறை

தமிழ் நவீன இலக்கியத்தைத் தொடக்கத்திலேயே செழுமைப்படுத்தியவர் புதுமைப்பித்தன். அவரது சமகால

11th Advance Tamil - FINAL.indd 32 14-02-2019 17:27:56

புதுமைப்பித்தன்



ந. பிச்சமூர்த்தி

மௌனி

கு.ப. ரா.

எழுத்தாளர்களான ந. பிச்சமூர்த்தி, மௌனி, கு.ப. ராஜகோபாலன், பி.எஸ்.ராமையா, சிதம்பர சுப்பிரமணியன் ஆகியோரைத் தமிழ்ச்சிறுகதையின் முன்னோடிகளாகக் கொள்ளலாம். இவர்கள் அனைவரும் சிறுகதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த மணிக்கொடி இதழில் எழுதியவர்கள். இக்காலகட்டம் 'மணிக்கொடி காலம்' என்றே அழைக்கப்பட்டது. நா.பார்த்தசாரதி, அகிலன் ஆகியோர் புகழ்பெற்ற இலட்சியவாதக் கதைகளைப் படைத்தனர். இக்காலகட்டத்தில் எழுதிய கல்கி, பொழுதுபோக்குத் தன்மை கொண்ட கதைகளைத் தந்தார்.

இரண்டாம் தலைமுறை

புதுமைப்பித்தனைத் தொடர்ந்து லா.ச. ராமாமிர்தம், க.நா. சுப்ரமணியம், சி.சு. செல்லப்பா, எம்.வி. வெங்கட்ராம், ஆர். சண்முகசுந்தரம் போன்ற படைப்பாளிகளிடம் இருந்து சமரசமில்லாத சமூக விமர்சனக் கதைகள் எழுந்தன. பெண்களால் எழுதப்படும் பெண்ணுலகச் சித்திரிப்புக் கதைகள் குமுதினி, டி.பி. ராஜலெட்சுமி, கி. சரஸ்வதியம்மாள் போன்றவர்களால் எழுதப்பட்டன.



லா.ச. ரா.

மூன்றாம் தலைமுறை

இக்காலகட்டத்தில் முன்னோடிகள் போட்ட பாதையில் வேகம் பிடித்த தமிழ்ச் சிறுகதை, அதன் உச்சங்களைத் தொட்டது. எளிய மனிதர்களின் பண்புநலன்களை நுட்பமாகப் பதிவுசெய்த கு.அழகிரிசாமி, கவித்துவமான சொற்சித்திரங்களைப் படைத்த நகுலன், மனித உறவுகளையும் மனச்சலனங்களையும் சித்திரித்த தி. ஜானகிராமன், சிறந்த வடிவ ஓர்மையுடன் எழுதிய சுந்தர ராமசாமி, பெருநகர

அறிவோம் தெளிவோம்

உலக அளவில் சிறுகதையின் வடிவக் கூறுகளைக் கொண்ட கதைகள் 17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருந்தாலும், 19ஆம் நூற்றாண்டில்தான் முழுவீச்சில் வெளிப்படத் தொடங்கின.

அமெரிக்க எழுத்தாளர்களான எட்கர் ஆலன்போ, ஓ ஹென்றி, நதானியல் ஹாதர்ன், வாசிங்டன் இர்விங் போன்றோர் சிறுகதையின் முழுமையான வடிவச் சிறப்போடு அமைந்த சிறுகதைகளைத் தந்தனர். குறிப்பாக ஓ ஹென்றியின் கதைகளில் வரும் கடைசித் திருப்பம் இன்றுவரை உலகப்புகழ் பெற்று விளங்குகின்றது.

பிரெஞ்சு எழுத்தாளர்களான போம்பெவல், மாப்பஸான், மெரிமீ, பால்சால்க் போன்றோர் சிறுகதையின் தொடக்ககால நிலையில் அதன் அனைத்துச்

உலகச் சிறுகதை ஆசிரியர்கள்

சாத்தியங்களோடும் படைத்துக் காட்டியவர்கள். குறிப்பாக, இன்றளவும் மாப்பஸான் கதைகள் உலகப்புகழ் பெற்று விளங்குகின்றன. தமிழின் சிறந்த சிறுகதை எழுத்தாளரான புதுமைப்பித்தன் தமிழகத்தின் மாப்பஸான் என்று அழைக்கப்படுவது, மாப்பஸான் கதைகளின் வீச்சினைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

ரஷ்ய எழுத்தாளர்களான ஆண்டன் செகாவ், துர்கனேவ், கோகல் ஆகியோர் புகழ்பெற்ற சிறுகதைகளை எழுதியவர்கள். செகாவ் சிறுகதை வடிவத்தை மிகச்சிறந்த கலைவடிவமாக்கியவர். இவர் தம் சிறுகதைகள் நகைச்சுவையும் அங்கதமும் கலந்தவை. ரஷ்ய சிறுகதையின் தந்தை எனப் போற்றப்படும் கோகலின் 'மேலங்கி' என்னும் சிறுகதை எண்ணற்ற எழுத்தாளர்களை உருவாக்கிய கதை எனலாம்.

11th Advance Tamil - FINAL.indd 33 14-02-2019 17:27:56

நடுத்தர வாழ்வை எழுதிய அசோகமித்திரன் ஆகியோரின் படைப்புகள் வெளிவந்தன.

வலியும் அவமானமும் நிறைந்த வாழ்வியலைப் பதிவுசெய்த ஜி.நாகராஜன், தம் கிராமியப் பின்புலத்தைக் களமாக்கிக் கொண்டு வட்டார மொழியில் கதைசொல்லும் கி.ராஜநாராயணன், பெருநகர வாழ்வியலைப் பெரிதும் எழுதிய இந்திரா பார்த்தசாரதி, கற்பனை தவிர்த்த இயல்புவாதப் படைப்புகளைத் தந்த நீல.பத்மநாபன், குழந்தை உளவியலைக் கதைகளாக்கிய சார்வாகன், குறியீட்டுத் தன்மையுடன் எழுதிய ந.முத்துசாமி, வறுமையைச் சித்திரித்த ஆ. மாதவன், நாஞ்சில் நாட்டு (குமரி மாவட்டம்) மக்களின் வாழ்வை எழுத்தில் பதிவு செய்த மா.அரங்கநாதன், ஒரு பார்வையாளனாக வாழ்வை நேரடியாகப் பதிவுசெய்த கரிச்சான்குஞ்சு, எளிய மனிதர்களின் மனவோட்டங்களை எழுதிய சா. கந்தசாமி போன்றோரின் படைப்புகள் வெளிவந்தன.

முற்போக்கு எழுத்துகளால் மக்களுடன் நேரடியாக விவாதித்த ஜெயகாந்தன், தம் கூர்மையான படைப்புகளால் பெரும்புகழ்பெற்றார். தொ.மு.சி ரகுநாதன், கே. முத்தையா, டி. செல்வராஜ், சு. சமுத்திரம், பொன்னீலன்,பா.செயப்பிரகாசம்போன்றோரும் சிறந்த முற்போக்கு இலக்கியங்களைத் தந்தனர். ஆர். சூடாமணி, ராஜம்கிருஷ்ணன், கோமகள், லட்சுமி, அநுத்தம்மா போன்றோர் இக்காலகட்டத்தில் எழுதிய பெண் எழுத்தாளர்கள்.

ராஜம்கிருஷ்ணன்

நான்காம் தலைமுறை

இத்தலைமுறை எழுத்தாளர்களில் பெரும்பாலானோர் மென்மையான மொழியில் வாழ்வின் நுட்பமான தருணங்களை எழுதினர். வண்ணநிலவன், வண்ணதாசன், விட்டல்ராவ், பூமணி, நாஞ்சில்நாடன், ஆதவன், பிரபஞ்சன், திலீப்குமார், ஜெயந்தன், தஞ்சை பிரகாஷ், தோப்பில் முகமது மீரான், ராஜேந்திர சோழன், சூர்யகாந்தன், சி.ஆர். ரவீந்திரன், சி.எம்.முத்து போன்றோர் சிறந்த படைப்புகளைத் தந்தனர்.

மேலாண்மை பொன்னுச்சாமி

ஜெயகாந்தனுக்குப்பின் எழுதிய சிறந்த முற்போக்குப் படைப்பாளிகளாகக் கந்தர்வன், ச. தமிழ்ச்செல்வன், மேலாண்மை பொன்னுச்சாமி, தனுஷ்கோடி ராமசாமி, வேல. ராமமூர்த்தி, சோலை சுந்தரபெருமாள், தேனி சீருடையான் போன்றோரைக் குறிப்பிடலாம். மிகநவீனமான புனைவு நடையைக் கொண்டவர் சுஜாதா.

பெண்ணியவாத எழுத்தாளர்களாக அம்பை, திலகவதி போன்றோர் அறியப்பட்டனர். அவர்களைத் தொடர்ந்த வாஸந்தி, சிவசங்கரி, இந்துமதி ஆகியோரது படைப்புகளும் குறிப்பிடத்தக்கவை.

ஐந்தாம் தலைமுறை

எஸ். ராமகிருஷ்ணன், ஜெயமோகன் ஆகியோர் இலக்கிய வாசிப்பைப் பொது வாசகர்களுக்கும் கொண்டு சென்றவர்கள். பவா செல்லத்துரை, கோணங்கி, பெருமாள்முருகன், மு. சுயம்புலிங்கம், கோபிகிருஷ்ணன், இரா. முருகன், சுப்ரபாரதிமணியன், யூமாவாசுகி, சு.வேணுகோபாலன், கண்மணி குணசேகரன், போன்றோர் இக்காலக்கட்டத்தில் முக்கியமான படைப்பாளர்கள். தமிழில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியலை எழுதும் எழுத்தாளர்களில் சிவகாமி, பாமா, சோ. தர்மன், இமையம், அழகிய பெரியவன், ஆதவன் தீட்சண்யா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தற்காலத்தில், தமிழ்ச் சிறுகதைத் தளத்தில் வாழ்வின் தருணங்கள், நுட்பமாக இலக்கியத் தரமுடையதாக வெளிவந்துகொண்டிருக்கின்றன. இன்றைய தமிழ்ச் சிறுகதைகள் ஆங்கிலத்திலும் பல்வேறு இந்தியமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு உலகமெங்கும் வாசிக்கப்படுகின்றன. அதன்மூலம் உலகளாவிய இலக்கியத் தளத்தில் தமக்கென்று ஓர் உயர்ந்த இடத்தைத் தமிழ்ச்சிறுகதைகள் பெற்றிருப்பது பெருமைக்குரியதாகும்.

2. சிறுகதை வாசிப்பும் திறனாய்வும்

வாசிப்பு

வாசிப்பு என்பது, ஓர் உன்னதமான தனி அனுபவம். சமூக அனுபவங்கள் கூட்டுத்தொகுப்பாகப் படைப்புகளில் வெளிப்படுகின்றன. அவற்றை வாசிக்கும் ஒரு வாசகன் தன் வாசிப்பின் ஊடாக ஒட்டுமொத்த சமூக அனுபவக்களத்திற்குள் பயணிக்க முடியும். இடம், காலம், மொழி கடந்த அந்த மானுட வாழ்வியல் பதிவுகளிலிருந்து தனக்கான உன்னதங்களை அவன் எடுத்துக் கொள்கிறான். ஆக, வாசிப்பு நிறைந்த ஒரு சமுதாயமே மரபின் பண்பாட்டுக் கூறுகளோடு இயைந்த ஒரு நவீனத்தைத் தகவமைத்துக்கொள்ள முடியும்.

வாசிப்பின் படிநிலைகள்

இலக்கிய வாசிப்பு என்பது, ஒரே மையத்திலேயே எப்போதும் இயங்குவதில்லை. அது பல்வேறு வாசிப்புப் படிநிலைகளின் ஊடாகக் கடந்து கொண்டே இருக்கிறது. ஒரு நல்ல வாசகனின் வாசிப்புத்தரம் என்பது, குழந்தை இலக்கிய வாசிப்பிலிருந்து பொழுதுபோக்கு, சாகசம், குற்றவியல், மெல்லுணர்வு, இலட்சியவாதம் ஆகியவற்றின் வழியாகச் செவ்வியல் வாசிப்பை நோக்கி நாளும் வளர்ந்துகொண்டே செல்லும் தன்மையுடையது.

குழந்தை இலக்கியம்

குழந்தை இலக்கியமே வாசிப்பு அனுபவத்தின் தொடக்கம். சிறுவயதில் கேட்ட பாட்டி கதைகள், கிராமிய மரபுக்கதைகள் போன்றவையே நம் வாசிப்பைத் தொடங்கிவைக்கின்றன.

பொழுதுபோக்குக் கதைகள்

அச்சுத் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்த பிறகு, பொழுதுபோக்குக் கதைகள் நம்மை ஆக்கிரமித்துக் கொண்டன. பொழுதுபோக்கிற்காகக் கதைகள் எழுதும் வணிக எழுத்தாளனுக்கு நம்மிடம் பகிர்ந்து கொள்ள எந்தவொரு வாழ்வியல் பொருளும் இல்லை. நம்மை மகிழ்விப்பது மட்டுமே அவர்களது நோக்கம். நல்ல வாசகனால் இந்தப் பொழுதுபோக்குப் புள்ளியை எளிதில் கடக்க முடியும்.

சாகசக் கதைகள்

குழந்தைப்பருவ வாசிப்பிலிருந்து இளமையை நோக்கி நகரும் பருவத்தில் விசித்திரங்களை, சாகசங்களை நோக்கி மனம் விரிகிறது. வாழ்க்கையை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் மனநிலையின் கதைவடிவமே சாகசக்கதைகள். இம்மாதிரியான கதைகளே கனவுகளை உருவாக்கக் கூடியவை.

குற்றக் கதைகள்

இளம்பருவத்தினருக்கு நெருக்கமான சாகசத்திலிருக்கும் வீரத்தன்மையைக் கொச்சைப்படுத்திக் குற்றங்களைப் பேசும் கதைகள், துப்பறியும் போர்வையில் வலம் வருகின்றன. இவற்றின் மலினத்தன்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மெல்லுணர்வுக் கதைகள்

குமரப்பருவம் தொடங்கி, வளர்ந்து செல்லும் ஆண் பெண் ஈர்ப்பு சார்ந்த மெல்லுணர்வுகளை இவ்வகைக் கதைகள் கொண்டுள்ளன. இவை வாசிப்பு அனுபவமுள்ள அனைவரையும் கவரக்கூடிய தன்மை வாய்ந்தவை.

இலட்சியவாதக் கதைகள்

தன் மனவெழுச்சிகளுக்கு அப்பாற்பட்டு, சமூகப் பொறுப்புணர்வுமிக்க இலட்சியவாத

11th Advance Tamil - FINAL.indd 35 14-02-2019 17:27:56

எழுத்துகளை வாசிப்பதென்பது, வாசிப்பு மனநிலையின் முக்கியமான கட்டம். சமூகச்சிக்கல்கள் சார்ந்து வாசிப்பு இயங்குவது இந்நிலையில்தான். இதன் வழியாகத்தான் சீரிய செவ்விலக்கிய வாசிப்புக்கு வந்துசேர முடியும்.

செவ்விலக்கிய வாசிப்பு

குழந்தைப்பருவம் தொடங்கி தனது வாசிப்பு அனுபவத்திலிருந்து செவ்வியல் இலக்கிய வாசிப்பிற்கு வர, சமூக வாழ்வியல் இலட்சியவாதக் கதைகளே துணை புரிகின்றன.

இலட்சியவாதக் கதைகள் வாழ்வினை எளிமைப்படுத்திச் சொல்லிச் செல்பவை. சீரிய இலக்கியங்கள் வாழ்வின் அனைத்துச் சிக்கல்களையும் ஊடுருவி, தங்கள் கனவுகளை அடைபவை. இவ்வகையான வாசிப்புப் படிநிலைகளின் வழியாக நமது வாசிப்பு வளர்ந்து வந்துள்ளது.

திறனாய்வு

சிறுகதைகளைப் படைப்பது ஒரு தனிக்கலை. அதைப்போலவே அவற்றை வாசித்து ஆய்வு செய்வதும் அதன் படைப்புக்குச் சமமான ஒரு தனிக்கலை. ஒரு கதையை நாம் உள்வாங்கிக் கொள்ள, கீழ்க்காணும் கூறுகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

களமும் சூழலும்

ஒரு கதையின் வரலாற்றுச் சூழல் மற்றும் சமூகச்சூழல், அது நிகழும் களம் ஆகியவற்றைப் புரிந்துகொண்டால் மட்டுமே கதையின் தளத்திற்குள் சென்று நாம் அதை உணரமுடியும்.

கதையின் மையம்

கதை பல்வேறு நிகழ்வுகளின் தொகுப்பாகச் சென்றாலும், எந்த மையத்தை நோக்கி அது இயங்குகிறது என்பதைக் கண்டறிய வேண்டும். அப்போதுதான் அதன் நோக்கு, சார்பு ஆகியவற்றைப் புரிந்து கொள்ளமுடியும்.

நிறுவும் நோக்கு

கதைப்பின்னலின் இறுதியில் அக்கதை எந்நோக்கை நிறுவுகிறது என்ற அடிப்படையில்தான் அக்கதையின் இலக்கியத்தன்மையை மதிப்பிட இயலும்.

விளைவு

ஒரு கதையைப் படித்து முடித்தவுடன் அதனால் மகிழ்வோ கோபமோ ஏற்படவேண்டும். நம் உணர்வுகளைக் கிளறி நமக்குள் அதிர்வையோ ஒரு புதிய தூண்டுதலையோ அது ஏற்படுத்தவேண்டும்.

வாசகர், தம்வாழ்வின் நிகழ்வுகளோடு கதையை ஒப்பிட்டுப்பார்த்து, தம்மைக் கதைக்குள் காண்பவராகவோ, தாம் கதைக்குள் வாழ்பவராகவோ மாற வேண்டும். ஒரு சிறந்த சிறுகதை வாசிக்கப்பட்டபின் மனத்துக்குள் தங்கிவிடவேண்டும். ஒரு நல்ல சிறுகதை நல்ல விளைவுகளை ஏற்படுத்த வல்லது.

அழகியல்

ஒரு கதையை உவமை, உருவகங்களோடு சொல்வது வாசகரைக் கவர்ந்து ஆர்வமாக வாசிக்கச் செய்யும். ஒவ்வொரு வரியும் வாசகரைக் கைபிடித்துக் கதைக்களத்திற்குள் அழைத்துச் செல்லவேண்டும். கதையின் ஓர்மையோடு வாசகனை ஒன்றச்செய்ய, அழகியல் ஒரு சிறந்த கருவியாகும்.

திறனாய்வு – ஒரு திறந்த பார்வை

ஓர் இலக்கியத்தைத் திறனாய்வு செய்ய, எவ்வித முன்முடிவும் சார்பும் இல்லாத ஒரு திறந்த பார்வை ஆய்வாளருக்குத் தேவை. அவர் முதலில் ஆய்வு மனப்பான்மையைத் தவிர்த்து, ஒரு முழு வாசகனாக மட்டுமே படைப்பினை அணுக வேண்டும்.

படைப்புக் களத்தின் அனைத்துக் கூறுகளோடும் திளைத்தும் மருகியும் அனுபவித்த ஒரு வாசகனால் மட்டுமே படைப்பின் தன்மையை நேரிய முறையில் வெளிப்படுத்த இயலும்.

மேற்கண்ட கூறுகளின் அடிப்படையில் ஒரு சிறுகதையைத் திறனாய்வு செய்து, நம் இலக்கிய ரசனையை வளர்த்துக் கொள்ளலாம்.

3. சிறுகதை எழுதும் கலை

சிறுகதை என்பது ஒரு புத்திலக்கிய வடிவம். மரபான இலக்கியம் ஏற்கெனவே சமூகத்தில் உள்ள கருத்துகளையும் நம்பிக்கைகளையும் வலியுறுத்தும் போக்கு கொண்டது. ஆனால் புத்திலக்கியம் அவற்றை ஒட்டியோ, மறுத்தோ மறுபரிசீலனை செய்து பேசும் போக்கைக் கொண்டது.

சிறுகதைக்கென்று ஒரு தனித்த வடிவச்சிறப்பு உண்டு. சிறிய கதைகளாக இருப்பனவற்றை எல்லாம் நாம் சிறுகதைகள் என்று சொல்லிவிட முடியாது. நீதிக்கதைகள், உதாரணக்கதைகள், உருவகக்கதைகள், பஞ்சதந்திரக்கதைகள் மற்றும் ஈசாப் குட்டிக்கதைகள் போன்றவை எல்லாம் சிறிய கதைகள்தாம் என்றாலும் அவை சிறுகதைகள் அல்ல.

ஒரு சிறிய கதையைச் சிறுகதையாக்குவது கதையின் முடிவில் உள்ள திருப்பம் என்று சொல்லலாம். சிறுகதையின் நோக்கம் ஒரு கதையின் மையக்கருத்தைச் சொல்வது மட்டுமன்று. ஒரு திருப்பத்தைச் சொல்லி, அதன்மூலம் வாசகனைக் கதையனுபவத்தில் பங்கேற்கச் செய்வதும்தான்.

அச்சு ஊடகப் பெருக்கத்தினால் சிறுகதைகள் நிறைந்திருக்கின்ற இக்காலத்தில் வாசகனின் ஆர்வத்தைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, வாசகன் ஊகிக்க முடியாத அல்லது அவன் ஊகிப்பதற்கு மாறான ஒரு திருப்பத்தோடு சிறுகதை அமைவது அவசியமாகிறது.

சிறுகதையின் ஓர்மை

வாழ்க்கைச் சம்பவங்களில் நம் உணர்வுகளை வெகுவாகப் பாதித்த ஒரு நிகழ்வு, ஒரு பொருள், ஒரு சிக்கல், ஒரு கருத்து ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்துச் சிறுகதையின் கருப்பொருள் அமையலாம்.

எந்த நோக்கத்துடன் ஒரு கதை எழுதப்படுகிறதோ அதனை நோக்கியே கதையின் அனைத்து அம்சங்களும் அமைந்திருப்பதே ஓர்மை. ஒரு கதையின் எல்லாக் கூறுகளும் அதன் முடிவில் வரும் திருப்பத்தைச் சிறப்பாக நிகழ்த்த உதவினால் அதுவே ஓர்மையுள்ள சிறுகதை.

சிறுகதையின் வடிவம்

சிறுகதையின் வடிவம் பின்வரும் நான்கு அடிப்படைகளைக் கொண்டதெனக் கூறலாம்.

1. சிறுகதையின் போக்கு ஓர்மை கொண்டதாக இருக்கவேண்டும். தேவையில்லாத எந்தவொரு விவரமும் அதில் இருக்கவேண்டியதில்லை. அது நேராக ஒரு முடிவை நோக்கிச் செல்வது நன்று.
2. முடிவில் உள்ள திருப்பம், வாசிப்பவன் ஊகிக்கமுடியாத ஒன்றாக இருக்கவேண்டும். அத்திருப்பத்தில்தான் சிறுகதையின் வெற்றி உள்ளது.
3. வாசகனை எந்த அளவுக்குக் கற்பனை செய்ய வைக்கிறதோ அந்த அளவிற்குச் சிறுகதை வெற்றி பெறுகிறது.
4. ஒரு சிறந்த சிறுகதை அதன் கடைசிவரிக்குப் பிறகே வாசகனின் மனத்தில் மீண்டும் தொடங்குகிறது.

சிறுகதை வடிவத்தின் உறுப்புகள்

சிறுகதை வடிவத்தின் உறுப்புகளாகக் கீழ்க்காண்பவற்றை நாம் வரையறுக்கலாம்.

மையக்கதைப்பாத்திரம்

இது யாருடைய அல்லது யாரைப்பற்றிய கதை என்ற கேள்விக்கான விடையாக இருப்பது. மையக்கதைப்பாத்திரத்தை நோக்கி வாசகனின் கவனம் இருப்பதாகக் கதை அமையவேண்டும்.

11th Advance Tamil - FINAL.indd 37 14-02-2019 17:27:56

எதிர்க்கதைப்பாத்திரங்கள்

இவை மையக்கதைப்பாத்திரத்திற்கு எதிர்நிலையில் அமையும் பாத்திரங்கள். இவர்கள் அளிக்கும் பாதிப்பு மூலம்தான் கதையின் நெருக்கடி, சிக்கல் ஆகியவை உருவாகின்றன.

கதைக்களம்

கதை நடக்கும் சூழல், காலம் ஆகியவையே கதைக்களம். அக்கதை எங்கே நடக்கிறது, எப்படி நடக்கிறது என்ற கேள்விக்குக் கதையில் பதில் இருக்கவேண்டும். அதற்கேற்பக் கதையின் புனைவுகள் அமையவேண்டும். அச்சூழல் சமகாலமாகவோ இறந்தகாலமாகவோ எதிர்காலமாகவோ இருக்கலாம். கதையின் மையக்கருவையும் கதை மாந்தர்களையும் ஒரு வாழ்க்கைச் சூழலில் நம்பகமாகப் பொருத்திக் காட்டவேண்டியது அவசியம்.

கதைமுடிச்சு

கதை எதைப்பற்றியது என்பதுதான் கதைமுடிச்சின் அடிப்படை. கதையின் சிக்கல் உருவாகும் இடமாக இதைக்கொள்ளலாம்.

திருப்பம்

கதையின் சிக்கல் எவ்வாறு அவிழ்க்கப்படும் என்று வாசகன் ஊகிக்கிறானோ அதிலிருந்து விலகி, ஒரு புதியகோணத்தில் அதை அவிழ்ப்பதே திருப்பமாகும்.

சிறுகதை எழுதுவதற்கான கருவிகள்

சிறுகதை நேர்த்தியாக அமைவதற்குக் கதை சொல்லுவதில் கீழ்க்காணும் கருவிகளைப் பயன்படுத்துதல் நலம்.

1. சித்திரிப்பு

கதைநிகழும் களம், காலம், சூழல், கதைமாந்தரின் தோற்றம், குணம் ஆகியவற்றினை வாசகர் காட்சிப் படிமமாகத் தம்முள் புரிந்துகொள்ளும் வண்ணம் குறைந்த வரிகளில் பதிவுசெய்தல். இந்தச் சித்திரிப்புகளின் வழியாகத்தான் வாசகரின் மனத்தில் கதை நகர்ந்து செல்லும்.

அ. புறச்சித்திரிப்பு

சாலைவிபத்தில் மாட்டிக்கொண்டு, கையில் அடிபட்ட ஒருவர் அதை இவ்வாறு விவரிக்கலாம்.

"காலையில் நெடுஞ்சாலையில் யாருமே இல்லை. சன்னமான மழை ஒரு பாலிதீன் திரை போலக் கரிய தார்ப்பரப்பை மூடியிருந்தது. கார்களின் முன்வெளிச்சம் நீரின் அடியில் தெரிவதுபோலக் கலங்கித் தெரிந்தது. நான்

படிப்போம் சுவைப்போம்

சிறுகதையின் உயிர்

தமிழின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான தி. ஜானகிராமன் சிறுகதை எழுதுவது பற்றி இவ்வாறு எழுதுகிறார்.

'சிறுகதையில் வரும் கதையோ நிகழ்ச்சியோ ஒரு க்ஷணத்திலோ, நிமிஷத்திலோ, ஒரு நாளிலோ, பல வருடங்களிலோ நடக்கக்கூடியதாக இருக்கலாம். காலையில் தொடங்கி இரவிலோ, மறுநாள் காலையிலோ அல்லது அந்த மாதிரி ஒரு குறுகிய காலத்திலோ முடிந்துவிட வேண்டும் என்று அவசியமில்லை. சொல்லப்படவேண்டிய பொருளின் ஓர்மைதான் முக்கியமானது.

எட்டு நாளில் நடந்த சங்கதியை முதல் நாளிலிருந்து வரிசையாகச் சொல்லிக்கொண்டு போகலாம். இரண்டாவது, மூன்றாவது, நாலாவது நாளிலிருந்தோ அல்லது கடைசிக் கணத்திலிருந்தோ ஆரம்பித்து, பின்பார்வையாகப் பார்த்துச் சொல்லிக் கொண்டு போகலாம். நடந்தது, நடக்கப் போவது இரண்டுக்கும் இடையே ஒரு வசதியான காலகட்டத்தில் நின்று கொண்டு, நிகழ்ச்சியைச் சித்திரித்துக் கொண்டு போகலாம். எப்படிச் சொன்னாலும் ஒரு பிரச்சினை, ஒரு பொருள், ஓர் உணர்வு, ஒரு கருத்துதான் ஓங்கியிருக்கிறது' என்ற நிலைதான் சிறுகதைக்கு உயிர்.'

இருபக்கமும் பார்த்தேன். வண்டிகள் வரும் ஒலி கேட்கவில்லை."

இங்குப் புறக்காட்சி விவரிக்கப்படுகிறது. இந்த விவரிப்பில் சாலை குறித்த தகவல் மற்றும் சாலையின் தோற்றம் குறித்த உவமை அழகுறச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆ. அகச்சித்திரிப்பு

விபத்தின்போது அவரின் மனவோட்டத்தைக் கீழ்க்காணும் வரிகள் சித்திரிக்கின்றன.

'என் மனத்தில் காலைநேரக் கவலைகள். ஆபீஸில் ஒரு சின்ன நிதிச்சிக்கல். ஒரு தைரியத்தில் சட்டென்று சாலையைக் கடந்தேன். யாரோ கையை ஓங்கித் தட்டுவது போலிருந்தது. சுழன்று விழுந்தேன். ஒரு கார் என்னைத் தாண்டிச் சென்றது. அதன்பின் விளக்குகளின் சிவப்பு சீறிச்சீறி அணைவதை மட்டும்தான் கண்டேன். ஒருகணம் என் மனத்தில் எதுவுமே இல்லை.'

2. கதைமாந்தர் உரையாடல்

கதை நிகழ்வுகளின் போக்கிற்குப் பொருந்துவதாகவும் அந்தக் கதைமாந்தர் களின் மொழியிலும் உரையாடல் இயல்பாக அமையவேண்டும். கதைமாந்தர் பேச்சினை இரட்டை மேற்கோள் குறிக்குள் அடைத்துச் சொல்லவேண்டும்.

எ.கா. 1 "இப்ப நீ சொல்லப் போறியா இல்லையா?"

"முடியாது. என்ன பண்ணுவ?"

எ.கா. 2 "இப்ப நீ சொல்லப் போறியா இல்லையா?" – அவளை அவன் முறைத்துப் பார்த்தவாறே கேட்டான்.

"முடியாது. என்ன பண்ணுவ?" என்றவாறு சடக்கெனக் கழுத்தை வெட்டிக்கொண்டு அறைக்குள் சென்றாள் அவள்.

எடுத்துக்காட்டு 1-இல் கதைமாந்தர் பேச்சுமட்டும் இருக்க, எடுத்துக்காட்டு 2-இல் அவர்களது உரையாடல் உணர்வுகளோடு கலந்திருப்பதைக் காணலாம்.

3. குறியீடு

கதையின் நிகழ்ச்சிப் போக்கு, கதைமாந்தரின் உள்ள உணர்வு போன்றவற்றை நேரடிச் சொற்களில் உரைப்பதைவிட, அந்தக் களத்தில் கிடைக்கிற குறியீடுகளைப் பயன்படுத்திச் சொல்லுதல் வலிமையான வெளிப்பாட்டுக்கு உதவும்.

(எ.கா.) "அவன் கடற்கரையில் அமர்ந்திருந்தான். அவன் விரல்கள் புரிபடாத கோடுகளை மணலில் வரைந்து கொண்டிருந்தன. அலைகளின் பேரோசை காற்று வெளியெங்கும்."

இந்நிகழ்வில் கதைமாந்தரின் மனப்போராட்டத்தை மணலில் வரைந்த விரல்களும் எழுந்து ஆர்ப்பரிக்கும் கடலின் பேரோசையும் நுட்பமாய் வெளிப்படுத்துவதை அறியலாம். இதில் மணலில் வரையும் விரல்களும் கடலின் ஓசையும் குறியீடுகள்.

கதை சொல்லுதலின் நோக்குநிலை

கதையின் நிகழ்வுகள் யாருடைய பார்வையிலிருந்து சொல்லப்படுகின்றன என்பதே நோக்குநிலை.

1. கதைமாந்தர் நோக்கில் சொல்லிச் செல்லும் முறை

கதைமாந்தரின் பார்வையிலிருந்து அவர்களது போக்கிலும் மொழியிலும் கதையை நகர்த்திச் செல்லும் முறை. இம்முறையில் கதையில் வரும் ஓர் உறுப்பினரே 'நான்' 'எனது' என்ற பான்மையில் கதையினைச் சொல்லிச் செல்வார்.

நம் பாடப்பகுதியில் அமைந்துள்ள ஆர். சூடாமணியின் 'இறுக மூடிய கதவுகள்' கதை இம்முறையில் சொல்லப்படுகிறது.

2 கதையாசிரியரின் நோக்கில் சொல்லிச்செல்லும் முறை

கதைமாந்தர்களின் அகமன ஓட்டங்கள், புறச்செயல்பாடுகள் ஆகியவற்றின் மூலமும் கதைமாந்தர்களின் உரையாடல்கள் மற்றும் சூழல் வருணனைகள் மூலமும் கதையைக் கதாசிரியரே சொல்லிச் செல்லும் முறை.

நம் பாடப்பகுதியில் உள்ள 'யானையின் சாவு', 'நசுக்கம்', 'பூ உதிரும்', 'அஷமஞ்சா பாபுவின் நாய்' போன்ற கதைகள் இம்முறையில் அமைந்தவை.

கதை சொல்லுதலின் உத்திகள்

ஒரு கதையைச் சொல்லிச் செல்லும்போது கதை நிகழும் இடம், காலம், நிகழ்வுகளின் தன்மைகளுக்கேற்ப, வரிசைப்படியோ வரிசைகளை மாற்றியோ பின்வரும் உத்திகளைப் பயன்படுத்திக் கூறலாம்.

அ. இயல்பான வரிசையில் சொல்லும் முறை

கதை நிகழும் வரிசையிலேயே பகுதி பகுதியாகப் பிரித்துக் கொண்டு, இயல்பாகச் சொல்லிச் செல்லும் முறை.

நம் பாடப்பகுதியில் அமைந்துள்ள ஜெயகாந்தனின் 'பூ உதிரும்' கதையை இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

ஆ. இடையில் பிரித்துச் சொல்லும் முறை

கதையைச் சொல்லிச் செல்லும்போது, அதன் ஒரு புள்ளியில் உட்சென்று மற்றொரு துணைநிகழ்வைச் சொல்லி, மீண்டும் கதைக்கு வருவது.

(எ.கா.) கந்தர்வன் எழுதிய 'சாசனம்' கதையிலிருந்து ....

'சிமிண்டுத் திண்ணையில் பகல் பூராவும் அப்பா உட்கார்ந்திருப்பார். எப்போதாவது பர்மாக் குடையை விரித்து நடப்பார். ஒரு நாளைக்கு இத்தனை தடவை என்று எண்ணிவிடலாம் இறங்கி நடப்பதை.

அப்பா நடந்திருக்க வேண்டிய நடையெல்லாம் தாத்தா நடந்திருந்தார். சமஸ்தானத்தில் தாத்தா இந்தப் பிரதேசத்தின் பேஷ்கார்.

மஹாராஜா இந்தப் பக்கமாய் ஒரு முறை திக்விஜயம் செய்தபோது தாத்தா ஒவ்வொரு வேளை விருந்தையும் ஒரு உற்சவமாய் நடத்தியிருக்கிறார். மஹாராஜாவின் நாக்கு அது வரை அறிந்திராத ருசியும் பண்டமும் விருந்துகளில்.... மரியாதை காட்டி வெகுவாய்ப் பின்னால் வந்து கொண்டிருந்த தாத்தாவை அழைத்து விரலை அவ்வப்போது நீட்டிக் கொண்டே வந்தார் மஹாராஜா. பின்னால் அந்த நிலங்களெல்லாம் தாத்தாவுக்குச் சமானமாய் வந்தன.'

அப்பாவைப் பற்றி சொல்லப்படும் கதையில் ஒருபுள்ளியில் உள்ளே நுழைந்து தாத்தா குறித்த நிகழ்வுகள் சொல்லப்படுவதை இம்முறைக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

இ. பின்னோக்கு முறை

தற்போதைய கதைப்போக்கிற்குக் காரணமாக, ஏற்கெனவே நடந்த ஒன்றைக் காட்டிக் கதையின் வளர்ச்சியை வலிமையாகக் கொண்டு செல்வது.

(எ. கா.) நம் பாடப்பகுதியில் அமைந்துள்ள ஆர். சூடாமணியின் 'இறுக மூடிய கதவுகள்' கதையில் முன்னர் நடந்த காட்சியாகச் சொல்லப்படும் கீழ்க்காணும் வரிகளைப் பின்னோக்கு முறைக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

இளைய அம்மா. பயம் கலந்த ஒரு சந்தோசத்தில் உருவமே வேறாகி, ஒளியால் நிறைந்தது போன்ற அம்மா. அவள் அணைப்பினுள் எட்டு வயது பையன்.

"செல்லப்பா அங்கிளை உனக்குப் பிடிச்சிருக்குதா கேசவா?"

"ஓ, ரொம்பப் பிடிக்குமே"

"எனக்கு... எனக்குக் கூட அவரைப் பிடிக்குதுடா கண்ணா!"

"நல்ல அங்கிள் அவரு"

"அவரை... அந்த நல்ல அங்கிளை உனக்கு அப்பாவாய்ப் பண்ணட்டுமா?"

பையன் முகத்தில் ஒன்றும் புரியாத வெற்றுப்பார்வை. அது ஒரு தடை என்பதுபோல் அம்மாவின் முகத்தில் கணநேரத் தடுமாற்றம்.

"என்னம்மா?"

"அவரை நான் கல்யாணம் செய்துக்கட்டுமா?"

11th Advance Tamil - FINAL.indd 40 14-02-2019 17:27:57

இப்போது அதிர்ச்சியே வடிவாய் உருமாறும் மகன்.

"ஊஹூம், கூடாது, அது தப்பு!"

"உனக்கு ஒரு அப்பா கிடைப்பாருடா கண்ணா"

"என் அப்பா செத்துப்போயிட்டார். நீ என் அம்மா, அம்மால்லாம் தப்புச் செய்யக் கூடாது..."

மறுப்பில் தலையாட்டும் மகன்.

ஈ. முன்னோக்கு முறை

எதிர்வரும் காலத்தில் நடைபெறப்போகும் நிகழ்வுகளாகக் கற்பனையில் எண்ணிப் பார்த்தல். இது கதைமாந்தரின் பார்வையிலோ கதையாசிரியரின் பார்வையிலோ சொல்லப்படலாம்.

எ.கா. சுந்தர ராமசாமியின் 'பிரசாதம்' கதையிலிருந்து ...

அடுத்த நாள், குழந்தையைத் தூக்கிக்கொண்டு கோயிலுக்கு நடந்து போகிற காட்சியை ஒரு தாய் தன் கணவனிடம் விவரிக்கிறாள்.

'நாளை விடியக் கருக்கலில் எழுந்திருக்க வேண்டும். சுடு தண்ணீரில் குழந்தையைக் குளிப்பாட்ட வேண்டும். பட்டுச்சட்டை போட்டு, கலர்நூல் வைத்துப் பின்ன வேண்டும். அந்தப் பின்னலில் ஒரு ரோஜா – ஒன்றே ஒன்று – அதற்குத் தனி அழகு. நாம் இருவரும் குழந்தையைக் கோயிலுக்கு எடுத்துச் செல்கிறபொழுது தெருவில் சாணி தெளிக்கும் பெண்கள், கோலம் இழைக்கும் பெண்கள் எல்லோரும் தலைதூக்கித் தலைதூக்கிப் பார்க்க வேண்டும். அவர்கள் தலைதூக்கிப் பார்ப்பதை நான் பார்க்க வேண்டும். நான் பார்த்து, உங்களைப் பார்க்க வேண்டும். நீங்கள் எல்லோரும் பார்ப்பதைப் பார்க்கவேண்டும். பார்த்துவிட்டு என்னைப் பார்க்க வேண்டும்.'

உ. காட்சித்துணுக்கு முறை

கடந்தகால நிகழ்வுகளை அல்லது நினைவுகளை, புகைப்படப் பிரதிகளை அடுக்கிக் காட்டுவதுபோலக் காட்சித் துணுக்குகளாகச் சொல்லிச் செல்லும் முறை. இதை ஒரு விரைவான பின்னோக்குமுறை என்றும் கூறலாம்.

(எ.கா.) நம் பாடப்பகுதியில் அமைந்துள்ள ஆர். சூடாமணியின் 'இறுக மூடிய கதவுகள்' கதையில் மகனின் நினைவுக்காட்சிகளாகச் சொல்லப்படும் கீழ்க்காணும் வரிகளைக் காட்சித்துணுக்கு முறைக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

'புரண்டு படுத்தேன். மறுபடியும் அரைத்தூக்க நிலை. கண்களுள் மீண்டும் இளம் அம்மாவின் முகம். அதில் ஒருவித ஆவல். உதடுகள் ஏதோ சொல்கின்றன. சிறுவனின் கண்களில் அதிர்ச்சி. மறுப்புக்குறியில் தலை இடவலமாய் அசைகிறது'

சிறுகதையின் மொழிநடை

ஒரு சிறுகதை, அக்கதையின் மையப்பொருள், சூழல் மற்றும் கதைக்களம் ஆகியவற்றிற்குப் பொருந்தும்படியான மொழிநடையில் அமைதல் நலம்.

1. பொதுமொழியில் சொல்லும் முறை

அனைத்துப்பகுதிகளிலும் வாசிக்கப்படுகிற, பொதுமொழியில் கதை சொல்லும் முறை. இது எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் அமையலாம்.

நம் பாடப்பகுதியில் அமைந்துள்ள 'இறுக மூடிய கதவுகள்', 'பூ உதிரும்' போன்ற கதைகளை இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

2. வட்டாரமொழியில் சொல்லும் முறை

அந்தந்தப் பகுதிகளில் வழங்கும் வட்டார வழக்கு மொழியில் கதை சொல்லும் முறை. இம்முறையில் பெரும்பாலும் பேச்சு வழக்கே பயன்படுத்தப்படும்.

(எ.கா.) கி. ராஜ நாராயணனின் 'நிலைநிறுத்தல்' – கதையிலிருந்து ...

"மூதேய் மூதேய் வெறுவாக்கலங்கெட்ட மூதேய்." எப்பேர்க் கொத்தி வேலையாளாய் இருந்தாலும் வசவு வாங்காமல் தீராது அவரிடம்.

இது சாதாரணம்; பெரிய முதலாளிக்கேண்ணு உள்ள கெட்டவார்த்தை வசவுகள் இருக்கு. அதோடு எத்தனையோதயா அவரிட்டெ அடியும் வாங்கி இருக்கான் இந்த மாசாணம் பயல்.

இப்பொ அவன் வாங்கின வசவுக்கு ஒரு காரணமும் கிடையாது. "சுண்ணாம்பு எடுத்துட்டுவாலே மாசாணம்"ண்ணாரு எடுத்துட்டு வந்தான்.

ஒரு பிஞ்சு சுண்டைக்காய் அளவுதான் வெத்திலையில் வைத்துக் கொண்டாரனும்; மஞ்சாடி கூடரப்படாது, வசவுதான்.

3. பொது மற்றும் வட்டார மொழியில் சொல்லும் முறை

கதாசிரியரின் விவரிப்பைப் பொதுவான மொழியிலும் கதை மாந்தர்களின் உரையாடலை வட்டாரத்தின் பேச்சுவழக்கிலும் கலந்து அமைக்கலாம். பெரும்பாலான கதைகள் இம்முறையில் எழுதப்பட்டு வருகின்றன.

நம் பாடப்பகுதியில் அமைந்த 'நசுக்கம்' சிறுகதையை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

எழுத்தின் இரகசியம்

எழுத்தின் இரகசியம் எழுத்தில்தான் உள்ளது. எனவே, சிறுகதை வடிவத்தின் அனைத்துக் கூறுகளையும் தன்வயப்படுத்தி, சுயமான படைப்பூக்கத்துடன் கதைகள் வெளிப்படவேண்டும். எந்தவொரு படைப்பாக இருந்தாலும் அதன் களத்தில் நின்று, உணர்வுப்பூர்வமான மொழியில் சமூக உயர்வினை நோக்கி எழுதப்படும் போது அது வெற்றிகரமாக அமையும்.

படிப்போம் சுவைப்போம்

தமது சிறுகதைகள் பற்றிப் புதுமைப்பித்தன்

கதைகேட்பதும் கதைசொல்லுவதும் தொன்றுதொட்டு வந்தபழக்கம். 'ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா இருந்தான்' என்று ஆரம்பிக்கும் இளமை மாறாத கதைகள் முதல் இன்று இருக்கும் எழுத்தாசிரியர்களின் கனவுகளான சிறுகதைகள்வரை, எல்லாம் மனித உள்ளத்தின் அடையமுடியாத ஆசைகளின் எதிரொலி. கதை என்றால் என்ன? எதுதான் சிறுகதை? சிறுகதையின் எல்லை என்ன? சிறுகதைக்கென்று தனிப்பட்ட ரூபம் ஒன்று உண்டா? இதற்கெல்லாம் சூத்திரங்கள் ஒன்றும் கிடையாது. சிறுகதையின் எல்லை வளர்ந்துகொண்டே வருகிறது. ஒவ்வொரு கதை ஆசிரியனும் எடுத்தாண்ட ரூபங்கள் எண்ணிறந்தன.

அச்சுப்பிழை பார்க்கிறவர்களை ஒதுக்கிவிட்டால் என் கதையின் முதல் வாசகன் நான்தான். அவ்வளவு ரசித்துப் படிப்பேன். வேகமாக எழுதிக்கொண்டு போவதனால், எழுதியதில் அங்கொன்றும் இங்கொன்றும்தான் என் ஞாபகத்தில் இருக்கும்.

நான் இப்பொழுது பிரசுரித்துள்ளவற்றின் அளவுக்கு ஏறக்குறைய சமமான எண்ணிக்கையுள்ள கதைகள் அவை எழுதப்பட்ட காலத்திலிருந்த பத்திரிகை காரியாலயங்கள் எல்லாவற்றையும் சேத்திர தரிசனம் செய்துவிட்டு திரும்பியவை ஆகும். எழுத்துக்குப் பயிற்சி மிகவும் அவசியம். முடுக்கிவிட்ட எந்திரம் மாதிரி தானே ஓர் இடத்தில் வந்து நிற்கும். இது என் அனுபவம். இதுவரை நான் கையாண்டுவரும் இந்த முறை பிசகியதே இல்லை. என் கதைகளிலே ஏற்றத்தாழ்வு உண்டு. அவற்றிற்குக் காரணம் வார்ப்புப் பிசகு அல்ல. அதை எழுதத் தூண்டிய மன அவசரத்தின் உத்வேகத்தைப் பொறுத்தது கதையின் கவர்ச்சியில் காணும் ஏற்றத்தாழ்வு.

நான் முன்விசாரித்த உதாரணங்களே போதும் என் கதைகளில் நூற்றுக்குத் தொண்ணூறு எடுத்த எடுப்பில் எழுதியும் வெற்றி காணுவதற்குக் காரணம் என் நெஞ்சில் எழுதாக் கதைகளாகப் பல எப்பொழுதும் கிடந்துகொண்டே இருக்கும். அந்தக் கிடங்கில் இருந்து நான் எப்பொழுதும் எடுத்துக்கொள்ளுவேன். கதை எழுதும் சிலர் அவற்றை விவரப்பட்டியல் எழுதி ஒரு மூலையில் போட்டுவைப்பார்கள்; நான் அப்படியல்ல. ஞாபக மறதிக்கு அரிய வசதியளிப்பேன். எழுத்துரூபத்தில் அமையும்வரை மனதில் உறுத்திக்கொண்டுக் கிடக்கும் நிலையில் இருந்த கதைகள் யாவும் இவற்றைவிடச் சிறந்த ரூபத்தில் இருந்தன என்பது என் நம்பிக்கை.

கண்ணாடி

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சிறுகதைக்கான வடிவ அமைதியுடன் வெளிவந்த முதல் தமிழ்ச் சிறுகதை

   அ) காக்காய் பார்லிமெண்ட்   ஆ) குளத்தங்கரை அரசமரம்   இ) துன்பக்கேணி   ஈ) விடியுமா?

2. ஒரு சம்பவம், ஒரு மனநிலை, ஒரு சிக்கல் என ஒருபொருளைப் பற்றி மட்டுமே அமையும் ஓர்மை கொண்டது   அ) கவிதை   ஆ) சிறுகதை   இ) புதினம்   ஈ) கட்டுரை

3. பொருந்தாத இணையைக் கண்டறிக.

   அ) புதுமைப்பித்தன் – ந.பிச்சமூர்த்தி   ஆ) கந்தர்வன்–மேலாண்மை பொன்னுசாமி

   இ) ராஜம்கிருஷ்ணன் – கோமகள்   ஈ) கி. இராஜநாராயணன்–ஆதவன்தீட்சண்யா

4. பொருத்துக

ஆசிரியர் பெயர்	**எழுத்தின் தன்மை**
அ) தி. ஜானகிராமன்	– 1. குறியீடு
ஆ) ந. முத்துசாமி	– 2. விளிம்புநிலை
இ) பாமா	– 3. கரிசல்
ஈ) கி. இராஜநாராயணன்	– 4. மனச்சலனம்
	– 5. சொற்சித்திரம்

   அ) அ– 1 ஆ– 3 இ– 4 ஈ– 2

   ஆ) அ– 4 ஆ– 1 இ– 2 ஈ– 3

   இ) அ– 5 ஆ– 1 இ– 4 ஈ– 3

   ஈ) அ– 4 ஆ– 1 இ– 5 ஈ– 2

5. கூற்று : கதையின் நிகழ்வுகள் யாருடைய பார்வையிலிருந்து சொல்லப்படுகின்றன என்பதே நோக்குநிலை

   காரணம் : கதை சொல்லுதலின் நோக்கு நிலை சிறுகதைகளுக்கான உத்திகளுள் ஒன்று

   அ) கூற்று சரி, காரணம் தவறு

   ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்

   இ) கூற்று, காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமன்று

   ஈ) காரணம், கூற்று இரண்டும் தவறு

6. பின்வரும் கூற்றுகளில் தவறானவற்றைச் சுட்டுக.

   1. வாசகனை எந்த அளவிற்குக் கற்பனை செய்யவைக்கிறதோ அந்த அளவிற்குச் சிறுகதை வெற்றிபெறுகிறது.
   2. சிறுகதையின் போக்கு ஓர்மை கொண்டதாக இருக்கவேண்டியதில்லை.

11th Advance Tamil - FINAL.indd 43   14-02-2019 17:27:57

3. சிறுகதையின் முடிவில் உள்ள திருப்பம் வாசிப்பவன் ஊகித்து அறியும் ஒன்றாக இருக்கவேண்டும்.

4. ஒரு சிறந்த சிறுகதை அதன் கடைசி வரிக்குப் பிறகே வாசகனின் மனத்தில் மீண்டும் தொடங்குகிறது.

அ) 2, 3 ஆ) 1, 2 இ) 1, 3 ஈ) 2, 4

7. தொடக்ககாலத் தமிழ் மரபில் கதைகள் இவ்வாறு சொல்லப்பட்டன.

அ) எழுத்து வழியாக ஆ) அச்சுவழியாக இ) வாய்மொழியாக ஈ) சைகை வழியாக

8. தொடக்ககாலத்தில் சிறுகதைகளுக்கான முக்கியத்துவம் கொடுத்த இதழ்

அ) வானம்பாடி ஆ) கசடதபற இ) மணிக்கொடி ஈ) எழுத்து

9. வாசிப்பு அனுபவத்தின் தொடக்கமாக அமைவது

அ) சாகசக்கதைகள் ஆ) பொழுதுபோக்குக் கதைகள்

இ) குழந்தை இலக்கியம் ஈ) மெல்லுணர்வுக் கதைகள்

10. இவர்களில் யார் ஆண் எழுத்தாளர் இல்லை

அ) யூமாவாசுகி ஆ) பூமணி இ) அம்பை ஈ) சுஜாதா

குறுவினா

1. தமிழ்ச்சிறுகதைகளின் முன்னோடிகளாக அறியப்படுபவர்கள் யாவர்?
2. சிறுகதையில் 'ஓர்மை' என்றால் என்ன?
3. காட்சித்துணுக்கு முறை என்பது யாது?
4. இரண்டாம் தலைமுறை சிறுகதை ஆசிரியர்களாக அறியப்படுபவர்கள் யாவர்?
5. இப்ப அவன் வாங்கின வசவுக்கு ஒரு காரணமும் கெடயாது. "சுண்ணாம்பு எடுத்துட்டுவாலே மாசாணம்" ண்ணாரு. – இதைப் பொதுமொழி நடையில் எழுதுக.

சிறுவினா

1. சாகசக்கதைகளை வரையறு.
2. சிறுகதை வடிவத்தின் உறுப்புகளை எழுதுக.
3. கதை சொல்லுதலின் நோக்கு நிலையினை விளக்குக.
4. அகச்சித்திரிப்பு, புறச்சித்திரிப்பு வேறுபடுத்துக.
5. சிறுகதை வடிவத்தைக் கலை வடிவமாக்கிய ரஷ்ய எழுத்தாளர்கள் குறித்து எழுதுக.

நெடுவினா

1. கதைசொல்லுதலின் உத்திகளை விளக்குக.
2. சிறுகதையின் மொழிநடை குறித்து ஆய்க.

11th Advance Tamil - FINAL.indd 44 14-02-2019 17:27:57

சிறுகதை

யானையின் சாவு

– சார்வாகன்

ரங்கநாதனுக்குக் கோபமும் எரிச்சலும் அத்துமீறிக் கொண்டு வந்தது. குழந்தையின் முதுகில் அங்கேயே ஓர் அறை வைக்கக் கையை ஓங்கிவிட்டான். ஒருவரையொருவர் இடிச்சு மோதிக்கொண்டு வேர்வை நெடியும் தூசியும் பல்வேறு அழுகல் கறிகாய் வாசனைகளும் நிறைந்த நட்டநடுக் கடைத்தெருவில் செல்லுலாய்டு பிளாஸ்டிக் பொம்மைகளைப் பரப்பி வைத்திருந்த அந்தக் கிழவனை விட்டு நகரமாட்டேன் என்று சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருந்த குழந்தையின் கையை ஆத்திரத்துடன் அமுக்கிப் பிடித்தான். அகத்திலே உடைப்பெடுத்துவரும் கோபத்தினால் கண்களைச் சுருக்கி 'புஸ்புஸ்'ஸென்று மூச்சு விட்டுக்கொண்டு "நீ வரயா இல்லை நான் ஒன்னை இங்கியே விட்டுட்டுப் போயிடட்டுமா?" என்று சீறினான். குழந்தை அவனை நிமிர்ந்து பார்த்தது. தும்பியின் சிறகைப் போலிருந்த அதன் கண்கள் பளபளத்தன. ஈனக் குரலில், "எனக்கு யானை வேணும்ப்பா" என்று கெஞ்சியது.

அவன் காஞ்சிபுரம் கோவிலில் குழந்தைக்கு யானை காட்டினதிலேயிருந்து இரவும் பகலும் இதே பல்லவிதான். எனக்கு யானை வேணும்ப்பா! தன் பொருளாதார நிலையில் யானையைக் கட்டித் தீனி போட்டு மாளாது என்று குழந்தையைப் புரிந்து கொள்ள வைக்க அவனுக்கு ரெண்டு வாரங்கள் ஆச்சு. நாலு நாளாய்த்தான் யானையை மறந்திருந்தான். இப்போ மறுபடி பிடிச்சுக் கொண்டது.

நடைபாதையோரத்தில் வியாபாரம் செய்யும் கிழவனை வெறுப்போடு பார்த்துவிட்டு, "இங்கே யானை இல்லை. வா வீட்டுக்குப் போகலாம்" என்று குழந்தையின் கையை இழுத்தான். "அதோ இருக்கே" குழந்தை கையை நீட்டி ஒரு மூலையைக் காண்பித்தது. அது காட்டிய இடத்தில் நிசமாகவே ஒரு யானை இருந்தது. கிளிப்பச்சை நிறத்தில் உடம்பு, முதுகில் தங்கவர்ணத்தில் வேலைப்பாடுகளும், ரோஸ் நிற வாயும், நல்ல எலுமிச்சை மஞ்சளில் தந்தமும் கொண்டு தும்பிக்கை ரோஸ் நிறமான பின்பாகம் தெரியத் தூக்கி சலாம் போடும் நிலையில் நின்று கொண்டிருந்தது அந்த யானை. அத்தனை குப்பை சாமான்களுக்கிடையேயும் அதைக் கண்டுபிடித்து விட்ட குழந்தையின் கண் தீட்சண்யத்தை மனசில் சபித்துக்கொண்டே அதை வாங்கி விடலாம் என்று ஜேபியில் கைவிட்டான். அவன் பார்வை அந்த யானைமேல் பாய்ந்தது. அழகுணர்ச்சி மிக்க அவனுக்கு – அழகுணர்ச்சி தன்னிடம் நிறைய இருக்கிறது என்று பெருமைப்பட்டுக் கொண்டிருந்த அவனுக்கு – அந்தப் பிளாஸ்டிக் யானை துதிக்கையைத் தூக்கி ரோஸ் வாயைக் காட்டி அவனை ஏளனம் செய்வது போலிருந்தது. யானைக் குலத்தையோ ஐராவதம் முதல் வரதர்கோவில் யானைவரை இதுவரை உலகத்தில் இருந்த, இனிமேல் இருக்கப் போகிற அத்தனை யானைகளையும், அதோடு தன்னையும் பரிகாசம் செய்வது போலிருந்த அந்தப் பச்சையானை மேல் அவனுக்குத் திடீரென்று அளவுக்கு மிஞ்சின கோபமும் ஆத்திரமும் பொங்கிக்கொண்டு வந்தது.

" 'சீ' இது வாணாம், அசிங்கம், யானை எங்கியாவது பச்சையாவா இருக்கும்? நான் ஒனக்கு நல்ல கருப்பு யானை வாங்கித்தரேன், இப்போ வீட்டுக்குப் போலாம் வா'', என்று மறுபடியும் குழந்தையை இழுத்தான். குழந்தை நிமிர்ந்து கண்களை அகல விரித்துக்கொண்டு அவனைப் பார்த்தது.

"நெஜம்மா"

"நெஜம்மாத்தான், நீயே பாரு."

11th Advance Tamil - FINAL.indd 45 14-02-2019 17:27:57

அவன் வாக்குக் கொடுத்தபின் இருவரும் வீட்டைப் பார்க்க நடந்தனர்.

அவன் யானையை மறந்தாலும் அவனை மறக்க விடவில்லை அந்தக் குழந்தை. "எங்கே யானை? எங்கே யானை? வாங்கித்தரேன்னியே" என்று அவனை அரிச்சு எடுத்து விட்டது. "இந்த ஊர்லே நல்லதாக் காணும், நான் வெளியூர் போய் வரப்போ வாங்கி வரேன், ப்ராமிஸ்" என்று சத்தியம் செய்தபின் அதன் துளைச்சல் நின்றது.

சொன்ன வாக்கை அவன் நிறைவேற்றியும் விட்டான். அது மரயானை. அப்படியொண்ணும் பிரமாதக்கலாசிருஷ்டியாகப் பிரமிப்பூட்டும் வகையில் இல்லாது போனாலும் கருப்பாக, கிட்டத்தட்ட கருப்பாக இருந்தது. தும்பிக்கை இருந்தது. வெள்ளைத் தந்தமும் இருந்தது. ரோஸ் வாய் இல்லை. யானைக் குலத்தையும் அவனையும் ஏளனம் செய்யவில்லை.

அதை வாங்கி வந்தது முதல் வேறொரு விபரீதம். குழந்தை எப்போ பார்த்தாலும் யானையோடேதான். சாப்பிடும்போது அதுக்கும் சோறு வைக்க வேணும். அது தூங்கினப்புறந்தான் குழந்தை தூங்கமுடியும். அந்த யானையின் விருப்பு வெறுப்புகளும் பிடிவாதமும் கோபமும் விளையாட்டும் அந்த வீட்டின் நடைமுறை வாழ்க்கையையே உலுக்கி விட்டது.

அவனுக்கென்னமோ இது விபரீதமாகத்தான் பட்டது. என்னதான் குழந்தை யென்றாலும் ஆறு வயசாச்சே. அந்தப் பொம்மை யானை ஓர் உயிருள்ள யானை மாதிரி, அதுவும் செல்லம் கொடுத்துக் கெட்டுப்போன ஒரு குழந்தை யானை மாதிரி வீட்டில் லூட்டியடிப்பது அவனுக்குச் சரியானதாகப்படவில்லை. அது பொம்மை மரம். கல்கண்டு சாப்பிடாது; ஹார்லிக்ஸ் குடிக்காது; வேர்க்கடலையும்; கரும்பும் கேட்காது என்று ஒண்ணுக்குப் பத்துத்தரமாகச் சொல்லிப் பார்த்தான். இது யானைதான். பொம்மையில்லை என்று ஒருநாள் பூராவும் குழந்தை அழுது ஆர்ப்பாட்டம் செய்தது. மறுநாள் குழந்தையும் யானையும் அவனோடு பேசவில்லை.

அவனுக்கு மனது ரொம்பவும் கஷ்டமாகப் போய்விட்டது. மூணாவது நாள் அவன் குழந்தையைக் கூப்பிட்டு, "இது நெஜ யானைதான், நான்தான் இதுக்கு முன்னாலே சரியாப் பாக்கலை" என்று மன்னிப்புக் கேட்கும் முறையில் சொன்னவுடன் பார்க்க வேணுமே குழந்தையின் உற்சாகத்தை. "பாத்தியா நான் சொன்னா தெரியலியே, தும்பிக்கை இருக்கு, தந்தம் இருக்கு, காதைப் பாரு மொறமாட்டம், கருப்பு ஒடம்பு. இதைப் போயி ஆனை இல்லையின்னா – ஆனைக்கி ஒம் மேலே ரொம்ப ஆசையாம், எப்பிடித் தடவிக் குடுக்க வருது பாத்தியா...? என்று அடுக்கிக் கொண்டே போனது.

அன்று முதல் அந்த யானைக்கு ரெண்டு விளையாட்டுத் தோழர். குழந்தையும் ரங்கநாதனும். அதைக் குளிப்பாட்டுவார்கள். அதற்குச் சோறு போடுவார்கள். அதோடு காட்டில் வேட்டைக்குப் போவார்கள். காயம் பட்டால் கட்டுக் கட்டி விடுவார்கள். கோபம் வந்து அடிப்பார்கள். சோறு போடாமல் தண்டனை கொடுப்பார்கள். செய்த தப்புக்கு அது வருந்தி கெஞ்சி மன்னிப்புக் கேட்க வரும்போது அதற்குப் புத்தி சொல்வார்கள். அதுக்குக் கோபம் வரும்போது அதன் கையில் அகப்படாது ஒளிந்து கொள்வார்கள். அது சுமுகமாய் இருக்கும்போது சர்க்கஸ் வித்தைகள் கற்றுக் கொடுப்பார்கள். இப்படியாக எல்லாம் இருவரும் சேர்ந்தே செய்து வந்ததன் பலனாக ரங்கநாதனுக்கு அந்த யானை ரொம்ப ரொம்பப் பழக்கமாகிவிட்டது. அதனுடைய மனநிலைகள், விருப்புவெறுப்புகள் எல்லாம் அவனுக்கு அத்துபடியாகிவிட்டன. சிலசமயம் குழந்தை இல்லாதபோதுகூட அந்த யானை அவனோடு விளையாட வரும். அல்லது முரண்டிக்கொண்டு நிற்கும்.

மறுபடியும் அவன் வேலை நிமித்தமாக வெளியூர் போக வேண்டியிருந்தது. திரும்பி வரும்போது வழிநெடுக அவனுக்குக் 'குழந்தை யானை' ஞாபகம்தான். புது விளையாட்டு ஒன்றைக்கூட கற்பனை செய்து வைத்திருந்தான். யானையை மீன் பிடிக்க வைக்கவேணும். சேற்றிலிருந்து அசரை

11th Advance Tamil - FINAL.indd 46 14-02-2019 17:27:57

மீனை அது தும்பிக்கையால் துழாவித் துழாவி எடுத்துக் கொடுக்க வேணும். பிறகு அது பெரிய மடுக்கரையில் உட்கார்ந்தபடி தூண்டிலிக்குப் பதில் தும்பிக்கையில் புழுவை வைத்துப் பிடிக்கவேணும் இன்னும் எத்தனையோ.

ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வீடுபோய்ச் சேர்ந்தபோது குழந்தையையும் காணோம்! யானையையும் காணோம். வெளியே எங்கோ விளையாடப் போயிருக்கிறார்கள் என்று நினைத்துத் கொண்டான். சாயங்காலம் அவன் வெளியே போய்விட்டு வந்தபோது நேரம் அதிகம் ஆகிவிட்டிருந்தது. குழந்தையும் தூங்கப் போய்விட்டிருந்தது. புது விளையாட்டை நாளைக்குக் கற்றுக் கொடுக்கலாம் என்று ஆறுதல் சொல்லிக் கொண்டான்.

மறுநாள் காலை ரங்கநாதன் குழந்தையைப் பார்த்தவுடன் அவன் கேட்ட முதல் கேள்வி "யானை எங்கே"தான். ஏனென்றால் அதன் கையில் யானையைக் காணோம். "அது எங்கேயோ" என்று அசுவாரசியமாகப் பதில் சொன்னது குழந்தை. அவனுக்கு ஒண்ணும் புரியவில்லை. ஏமாற்றமும் கோபமுமாக வந்தன.

"காணாமே போக்கிட்டியா, இல்லே காட்டுக்கு ஓடிப்போயிடுச்சா?" என்று கேட்டான். அவன் காதுக்கு அது சாதாரணக் கேள்விபோல் தொனிக்கவில்லை. அதட்டலா? அழுகையா?

"ஊகும் இங்கேதான் எங்கேயாவது கெடக்கும்" என்று சொல்லிக்கொண்டே குழந்தை பல் தேய்க்கப் போய்விட்டது.

"ஏய், புது யானை வெளையாட்டு கண்டுபிடிச்சிருக்கிறேன், மீன் பிடிக்கிற வெளையாட்டு" என்று சொன்னபடியே ரங்கநாதன் குழந்தையைப் பின் தொடர்ந்தான்.

மூலையில் அழுக்குத் துணிகளிடையே யானை கேட்பாரற்றுக் கிடந்ததைக் கண்டான்.

"ஐயோ பாவம், ஒடம்பு சரியில்லை போலிருக்கே, காச்சல் வந்துட்டுதோ, ஆஸ்பத்திரிக்குப் போலாமா, மருந்து குடுக்கலாமா? ஏய்! இதோ, இங்கே இருக்கு பாரு!, யானை" எனப் பரிவுடன் சொல்லிக்கொண்டே யானையை எடுக்கக் குனிந்தவன் குழந்தையின் பதிலைக் கேட்டுச் சடாரென்று நிமிர்ந்தான்.

"நீ என்னப்பா, அதுக்கு ஒண்ணும் வராது.

அது என்ன நெஜ யானையா? பொம்மைக்குப் போயி காச்சலும் பேதியும் வருமா?" என்று சொல்லிவிட்டுக் குழந்தை அலமாரியைத் திறந்து, "அப்பா, நீ இதைப் பாத்தியா, நெஜ டயரு போட்டிருக்கே, எப்பிடி ஓடுது பாக்கறியா" என்று சொன்னபடியாகச் சிவப்பு நிறமான, குட்டி டயர் போட்ட தகரக் கார் ஒண்ணை எடுத்து வெற்றிகரமாக அவனுக்குக் காண்பித்து, "நான் தரமாட்டேன், எதிர் வீட்டம்மா எனக்குத்தானே குடுத்தாங்க" என்று பெருமை பேசியது குழந்தை.

அவனுக்கு ஒண்ணும் புரியவில்லை. குழந்தையைப் பார்த்தான். குறும்புச் சிரிப்போடு பின்னம்புறம் ஒளிக்க முயன்றுகொண்டிருந்த அதன் கையிலிருந்து கார் எட்டிப் பார்த்து பளபளவென்று பல்லைக் காட்டி இவனை ஏமாளி செய்து கொண்டிருந்தது.

தலையைத் திருப்பிக் கீழே பார்த்தான். செத்துப்போன யானையின் சடலம், "நான் வெறும் மரம், யானையில்லை" என்று முனகிவிட்டு மறுபடியும் செத்துப்போச்சு. அவனுக்கு ஒண்ணும் புரியவில்லை.

"என்னப்பா சொல்றே?" என்று காரைத் தரையில் தேய்த்துக் கொண்டே கேட்டது குழந்தை.

அவனுக்கு ஒண்ணும் புரியவில்லை.

படைப்பு முகம்



சார்வாகன் (1929 – 2015): மருத்துவம், இலக்கியம் ஆகிய இரண்டு துறைகளிலும் சாதித்தவர். ஒரு சிறந்த எழுத்தாளராக அறியப்பட்ட பழைமையைக் கேள்விக்குள்ளாக்கும் அங்கத எழுத்துக்குச் சொந்தக்காரரான சார்வாகனின் கதைகள் தனித்தொகுப்பாக வெளிவந்துள்ளன.

படிப்போம் பகிர்வோம்

1. நீங்கள் சிறுவயதில் விளையாடிய ஒரு பாவனை விளையாட்டினைப் பற்றி எழுதுக.
2. கீழே கொடுக்கப்பட்டுள்ள அப்துல் ரகுமானின் பௌர்ணமிப்பிறை என்னும் கவிதையை யானையின் சாவு கதையோடு ஒப்பிட்டு எழுதுக.

   பௌர்ணமிப்பிறை
   குழந்தைகளே! உங்கள் விரல்களை
   நாங்கள் பிடித்துக் கொள்கிறோம்
   எங்களை உங்கள் தேவ தேசத்திற்கு
   அழைத்துச் செல்லுங்கள் – அப்துல் ரகுமான்

3. 'யானையின் சாவு' கதையில் ரங்கநாதனின் மனநிலையும் குழந்தையின் மனநிலையும் வேறுபடும் பாங்கினை எழுதுக.
4. யானையின் சாவு சிறுகதையினைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் ஒரு பக்க அளவில் சுருக்கி எழுதுக.
5. அவனுக்கு ஒண்ணும் புரியவில்லை … என்ற யானையின் சாவு கதையின் முடிவு வரியிலிருந்து ரங்கநாதனும் சிறுவனும் தொடர்ந்து பேசிக்கொள்வது போல் கற்பனை உரையாடலை அமைத்திடுக.

11th Advance Tamil - FINAL.indd 48 14-02-2019 17:27:57

பூ உதிரும்

– ஜெயகாந்தன்

பெரியசாமி வாயைத் திறந்து பேச ஆரம்பித்தால், அதுவும் அந்த நரைத்துப்போன, சுருட்டுப் புகையால் பழுப்பேறிய பெரிய மீசையை முறுக்கிக் கொண்டு பேச ஆரம்பித்துவிட்டால்..... நிச்சயம் அவர் பேசுகின்ற விஷயம் இந்த நூற்றாண்டில் நிகழ்ந்த இரண்டு உலக மகா யுத்தங்களிலும் நேச தேச ராணுவத்தினர் புரிந்த வீரதீரச் சாகசங்கள் பற்றியதாகத்தான் இருக்கும்.

அரும்பு மீசைப் பிராயத்தில் முதல் மகா யுத்தத்திலும், கரு கருவென முறுக்கு மீசை வளர்ந்த நடுத்தர வயதில் இரண்டாவது மகா யுத்தத்திலும் சமராடி வந்தவர் அவர். சுதந்திரமும் அமைதியும் நிலவும் ஒரு நாட்டின் பிரஜையாய் நரைத்த மீசையுடன் தளர்ந்த உடலுடன் இப்போது வாழ்ந்த போதிலும் அவரது பட்டாளத்துக்கார மனத்துக்கு அடிக்கடி பழைய நிகழ்ச்சிகளை ஞாபகப்படுத்திக் கொள்வதில் ஒரு போதை இருந்தது. அதில் ஒரு புத்துணர்ச்சியும் பிறந்தது.

தன் மகனை ராணுவ வீரனாக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கண்டு பயந்த அவர் மனைவி மரகதம் உறவினர்கள் மூலம் கிழவரின் முடிவை மாற்ற முயன்றாள்.....

"எதுக்குங்க பட்டாளமும்....கிட்டாளமும்? பையன் பத்து படிச்சி பாஸ் பண்ணி இருக்கு. ஏதாவது கெவுருமெண்டு உத்தியோகம் ஒண்ணு பாத்து வெச்சி, கலியாணம் காட்சி நடத்தி பேரன் பேத்தியைக் கொஞ்சிக்கிட்டிருக்காம––– பையனைப் பட்டாளத்துக்கு அனுப்பறது சரியில்லீங்க அவ்வளவுதான்......" என்று கூறிய அந்த உறவினர்களையும், அவர்கள் அவ்விதம் வந்து யோசனை கூறக் காரணமாயிருந்த மனைவியையும் பார்த்து மீசையை முறுக்கிக் கொண்டு லேசாய்ச் சிரித்தார் பெரியசாமி. பிறகு அவர்கள் சொல்வதைச் சற்று ஆழ்ந்து சிந்தித்தார். அதில் பொருளிருப்பதாகத் தோன்றவில்லை அவருக்கு. குறுகிய பாசம் என்பதைத் தவிர வேறு காரணமில்லை என்றே தோன்றியது.

அவர்களுக்கு அவர் சொன்னார்: "உங்களுக்குத் தெரியாது.... ம்.... நான் வாழ்நாள் பூராவும் வெள்ளைக்காரங்ககிட்டே அடிமைச் சிப்பாயாவே காலங் கழிச்சவன்.... அப்பல்லாம் ஒரு சாதாரண வெள்ளைக்கார சோல்ஜருக்கு இருந்த மதிப்புக்கூட ஒரு கறுப்பு மேஜருக்கு கிடையாது, ஒரு சுதந்திர நாட்டு ராணுவத்திலே ஒரு சாதாரண சிப்பாயாக இருக்க மாட்டோமான்னு ஏங்கினது எனக்கில்லே தெரியும்? இப்ப எம்மகனுக்கு அந்தச் சான்ஸ் கெடைக்கிறதுன்னா அதெ விடலாமா? பட்டாளத்துக்குப் போனா, சாகறது தான் தலை விதின்னு நெனச்சிக்காதீங்க. பட்டாளத்துக்குப் போகாதவங்களுக்கும் சாவு உண்டு... வாழ்கையிலே ஒரு 'பொறுப்பு' அநுபவம், தேசம்ங்கிற உணர்வு... ம்... ஒரு 'டிஸிப்ளின்' எல்லாம் உண்டாகும் பட்டாளத்திலே.. இதெல்லாமில்லாம சும்மா வெந்ததைத் தின்னுட்டு வேளை வந்தா சாகறதிலே என்னா பிரயோசனம்?... சொல்லுங்க" என்று அவர் கேட்கும் போது தந்தையின் அருகே நின்றிருந்த சோமநாதன், தந்தையின் இதயத்தையும் எண்ணத்தையும் சரியாகவும் முழுமையாகவும் புரிந்துகொண்டான். "அப்படிச் செத்துப் போனாத்தான் என்னப்பா? பட்டாளத்துக்குப் போறவன், ஊருக்கு லீவில் வந்து உடுப்பைக் காமிச்சுப்பிட்டுப் போனாப் போதுமா? சண்டைன்னு வந்தா சாகவும் தான் தயாராப் போகணும்" சோமநாதன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு, கிழவரின் சுருட்டுக் கறையேறிய கரிய உதடுகள் உணர்ச்சி மிகுந்து துடித்தன.

11th Advance Tamil - FINAL.indd 49 14-02-2019 17:27:58

"சபாஷ்' "என்று பெருமிதத்தோடு அவனைப் பாராட்டுகையில் அவர் கண்களில் அதீதமானதோர் ஒளி சுடர்விட்டது.

தந்தை தன் சொல் வலியால், தாயின் ஆசீர்வாதத்துடனும் பத்து வருஷங்களுக்கு முன் பட்டாளத்தில் சேர்ந்தான் சோமநாதன்.

முதன்முறை, லீவில் வீட்டுக்கு வந்திருக்கும்போதுகூட, காலையில் ஐந்தரை மணிக்குமேல் அவனால் படுக்கையில் படுத்திருக்க முடியாது. எங்கோ நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் தனது ராணுவ முகாமில் முழங்குகின்ற காலை நேர எக்காளத்தின் ஓசையைக் கேட்டவன் போன்று, அந்தப் பழக்கத்தால் படுக்கையிலிருந்து துள்ளி எழுந்து விடுவான் சோமநாதன். பின்னர், காலை நேர உலாப் போய்விட்டு, தேகப்பயிற்சி செய்து முடித்தபின் என்ன செய்வதென்று புரியாமல் நாள் முழுதும் பேப்பர் படித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது அவனுக்கு மிகவும் சிரமமாக இருந்தது.

இரண்டாவது முறை அவன் லீவில் வந்தபோது அதற்கொரு பரிகாரம் காண்பதுபோல் தோட்ட வேலை செய்ய ஆரம்பித்தான். அதன் விளைவாய் அவர்கள் வீட்டை சுற்றிலும் கட்டாந்தரையாகக் கிடந்த 'தோட்டம்' சண்பகமும், ரோஜாவும், மல்லிகையும் சொரியும் நந்தவனமாக மாறி, அவனது நினைவாய் இன்றும் மலர்களை உதிர்த்துக் கொண்டிருக்கிறது.....

"ம்...சும்மாக் கெடந்த தோட்டமெல்லாம் செம்பகமும் ரோஜாவும் வெச்சிப் பூ மண்டிப் போவுது...ஊரிலே இருக்கிற பொண்ணுங்க எல்லாம் வந்து அள்ளிக்கிட்டுப் போவுதுங்க... போறதுங்க சும்மா போவுதா? "பூ இருக்கிற வீட்டிலே பொண்ணு இல்லியான்னு" பரியாசம் பண்றா ஒரு குட்டி..."

"அதாரு அந்த வாயாடி?... பொண்ணு இல்லே, நீதான் வந்து இருவேன்னு சொல்றதுதானே?..." என்று நரைத்த மீசையில் வழக்கம்போல் கை போட்டார் பெரியசாமி.

"அப்பிடித்தான் நானும் நெனச்சிக்கிட்டேன். அதை அவகிட்டே எதுக்குச் சொல்வானேன்... நேத்து கோயில்லே அவ ஆயியைப் பார்த்துச் சொன்னேன்... அவளுக்கு வாயெல்லாம் பல்லாப் போச்சு... நம்ப பயலுக்குப் பொண்ணு கொடுக்கக் கசக்குமோ, பின்னே?..." என்று மலர்களின் நடுவே மலர்ந்த முகத்தோடு, பல இரவுகளாய்த் தூங்காமல் கட்டிய மனக் கனவுகளைக் கணவனிடம் உதிர்க்கும் மனைவியின் உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டார் பெரியசாமி.

"சரி, சரி' இந்தத் தடவை நம்ப வீட்டிலே கலியாணம் தான்... நீ போயி மசிக்கூடும் காகிதமும் எடுத்து வையி... பையனுக்குக் கடுதாசி எழுதணும்" என்று உற்சாகமாய்க் கூவினார் பெரியசாமி.

வழக்கமாய், தந்தையின் கடிதம் கண்ட ஓரிரு வாரங்களுக்குள்ளாகவே ஊருக்கு வந்துவிடும் சோமநாதன், அந்தத் தடவை இரண்டு மாதங்களுக்குப் பிறகே வர முடிந்தது.

அப்பனும் மகனும் பேசிக் கொண்டிருக்கையில் இடையில் வந்து கலந்துகொள்ளத் தைரியம் இல்லாத மரகதம் தூரத்திலோ, அறைவாயிலிலோ நின்று அவர்களைக் கவனித்துக் கொண்டிருப்பாள்.

சோமநாதன் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த நேரம்போக, தான் பேச நேர்ந்தபோதெல்லாம் மகனின் கலியாண விஷயமாகவே பேசினார் பெரியசாமி.

அவன் தனக்கொரு கலியாணம் என்பது பற்றி அதுவரை யோசித்ததில்லை. ஆனால், தகப்பனார் பேசுகிற தோரணையைப் பார்த்தால், தனக்கு யோசிக்க அவகாசமே தரமாட்டார் போலிருந்தது. இதில் யோசிக்கத்தான் அப்படி என்ன இருக்கிறது? சமாதானச் சூழ்நிலையில் வாழும் ஒரு தேசத்தின் ராணுவ உத்தியோகஸ்தன் கல்யாணம் செய்து கொள்ளலாம்... அவ்விதம் திருமணம் புரிந்துகொண்டு எத்தனையோ பேர் குடும்பத்தோடு அங்கேயே வந்து வாழ்கிறார்களே...என்பதையெல்லாம் நினைவு கூர்ந்து 'சரி' என்று ஒப்புக்கொண்டான்.

11th Advance Tamil - FINAL.indd 50 14-02-2019 17:27:58

... அந்தத் தடவை லீவிலேயே அவனுக்கும் அவளுக்கும் கலியாணம் நடந்தது.

பூப்பறிக்க வந்த கௌரி பூந்தோட்டத்தின் சொந்தக்காரியானாள். ஒரு பலனும் கருதாமல் சோமநாதன் தன் கையால் நட்டுத் தண்ணீர் பாய்ச்சியதற்குப் பிரதியாக மலர்களை மட்டுமில்லாமல் அவனுக்கொரு மனைவியையும் கொண்டுவரத் தூதாகியிருக்கும் மகிழ்ச்சியில் சண்பகமும் ரோஜாவும் பூத்துக் குலுங்கிச் சிரித்தன. எத்தனை காலைகள் எத்தனை மாலைகள், எத்தனை இரவுகள் இவர்கள் இருவரும் அங்கேயே கழித்து, என்னென்ன பேசி, என்னென்ன கனவுகளை வளர்த்தார்கள் என்று அந்தச் சண்பகத்துக்குத் தெரியும்; அந்த ரோஜாவும் மல்லிகையும் அறியும்.

கடைசியில் ஒரு நாள்......

இரண்டு மாதங்கள் அவள் இதயத்தோடு இணைந்திருந்து, கனவோடும் கற்பனையோடும் கலந்து உடலால் மட்டும் விலகும்போது 'அடுத்த தடவை லீவுக்கு வந்து திரும்பும்போது உன்னை என்னோட அழைச்சுக்கிட்டுப் போவேன்' என்று வாக்குறுதி தந்து அவன் அவளைப் பிரிந்து சென்றான்.

கௌரியைப் பிரிந்து சென்ற பதினைந்தாம் நாள் அவளுக்கு அவனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

அவனிடமிருந்து மறு கடிதம் வரும்வரை, தனது தனியறையின் ஏகாந்தத்தில்.... அவனே வந்து எட்டிப் பார்ப்பது போல், ஜன்னலருகே வளைந்திருக்கும் சண்பக மரக் கிளையில் பூத்துச் சிரிக்கும் மலர்களுக்கு அந்தக் கடிதத்தில் இருந்த ரகசியங்களைப் படித்துக் காட்டிக் கொண்டிருந்தாள் கௌரி.

சண்பகத்துக்குப் பக்கத்தில், மலர்ச்சியின் ரகசியத்தை மறைத்துக்கொண்டு,....முற்றாக மறைக்க முடியாமல்.... தாங்கொணாத் தவிப்புடன், கனத்துக் கிடக்கும் மொட்டுக்களைத் தாங்கி நிற்கும் ரோஜாவைப் பார்த்து அவள் சிரிக்கும் போது 'உன் கதை இன்னும் ஒரு மாதத்தில் தெரியும்? என்று 'பளீரென'ச் சிரித்துச் சிதறிய முல்லைக் கொடியிலிருந்து பூக்கள்

11th Advance Tamil - FINAL.indd 51 14-02-2019 17:27:58

உதிர்ந்த ரகசியம் அவளுக்கு அப்போது புரியவில்லை.

இரண்டு மாதங்களுக்குப் பின், சண்பகத்தையும் ரோஜாவையும் மடி கனக்கக் கட்டிக்கொண்டிருக்கும் உணர்வுடன் மனமும் உடலும் கூசிச் சிலிர்க்க அந்த விஷயத்தை அவனுக்கு அவள் எழுதும்போது..... சுவரில் தொங்கும் சோமுவின் படம் அவளைப் பார்த்துச் சிரிக்கும்போது அவன் படத்தைக்கூட பார்க்கமுடியாமல் அவள் முகத்தை மூடிக்கொண்டாள். முகத்தை மூடிய கரங்களையும் மீறி வழிந்த நாணம் அவள் காதோரத்தில் சிவந்து விளிம்பு கட்டி நின்றது.

அவள் கடிதம் எழுதுவதை நிறுத்திவிட்டு, அந்தப் படத்தைக் கையிலெடுத்தாள். அவனது மாயப் புன்னகை, அவள் இதயத்தை ஊடுருவியது.

திடீரென்று அவளுக்கு உடல் சிலிர்த்தது. நெஞ்சில் நிலைத்த அவன் நினைவு வயிற்றில் புரண்டது போலிருந்தது.....

"நீங்க எப்ப வருவீங்க?" என்று அந்தப் படத்தை முகத்தோடு அணைத்துக்கொண்டு அமைதியாய், சப்தமில்லாமல் தொண்டை அடைத்துக் கரகரக்க அவள் கேட்டபோது, தன் விழிகளில் சுரந்த கண்ணீரை அவளால் அடக்க முடியவில்லை.

"எப்ப வருவீங்க.... எப்ப வருவீங்க?" என்று துடித்துக் கொண்டிருந்த அவள் இதயத்திற்கு அவனிடமிருந்து பதில் வந்தது.

"........ ஏழாம் மாதம் பூச்சூட்டலுக்கு வருவேன். மூன்று மாதம் லீவு கிடைக்கும். உன்னோடயே இருந்து குழந்தை பிறந்த பிறகு, என் மகனின் பூமாதிரி இருக்கிற பாதத்திலே முத்தமிடணும்னு என் உதடுகள் துடிக்கிற துடிப்பு....' என்று தன் கணவன் தனக்கெழுதிய கடிதத்தைப் பெரியசாமிக்கும் மரகதத்துக்கும் படித்துக் காட்டிக்கொண்டிருந்த கௌரி "அவ்வளவுதான் முக்கிய விஷயம்" என்று கடிதத்தை மடித்துக்கொண்டு தன் அறைக்குள் ஓடி விட்டாள்.

அதில் தான் அவன் என்ன வெல்லாம் எழுதியிருந்தான்'

கௌரி..... ரொம்ப ஆச்சரியமா இல்லே? நமக்கு ஒரு குழந்தை பொறக்கப் போவுது.....' இப்பவே உன்கிட்டே ஓடி வரணும்னு மனசு துடிக்குது. சரி ஏழாம் மாதம் தான் நான் வரப் போறேனே; தாய்மைக் குரிய காணிக்கைகளைத் தராமலா விடுவேன்....?'

ஏழாம் மாதம் வந்துவிட்டது. பெரியசாமி எதிர்பார்த்ததுபோல் அந்தக் கடிதம் வந்தது.

'...எல்லையில் ஏற்பட்டிருக்கும் யுத்தமும் தேசத்திற்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியும் பத்திரிகை மூலம் அறிந்திருப்பீர்கள். போர் வீரனுக்குரிய கடமையை ஆற்ற வேண்டிய சந்தர்ப்பத்தில் நான் வரமுடியாது. வர விரும்புவது சரியுமில்லை. அதனாலென்ன? நம் வீட்டில் தான் கொள்ளைப் பூ இருக்கின்றது. பூ முடித்துக் கொள்ளப் பெண்ணும் இருக்கிறாள். மகிழ்ச்சியுடன் சுபகாரியங்களைச் சிறப்பாகச் செய்யவும். நான் வராததற்காக வருந்தாதீர்கள். அங்கு நீங்கள் எவ்வளவுக் கெவ்வளவு மகிழ்ச்சியுடனிருக்கிறீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு இங்கு நான் உற்சாகமாக இருப்பேன் என்று எண்ணிக் குதூகலமாய் இருக்கவும்...'

தந்தைக்கு எழுதிய கடிதத்தோடு கூட மனைவிக்குத் தனியாய் இன்னொரு கடிதம் எழுதியிருந்தான் அவன். அந்தக் கடிதம் பொய்மைகலந்த குதூகலத்தோடும், தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்ளும் விதத்தில் உற்சாகம் மிகுந்திருப்பது போலும் அமைந்திருந்தது.

சில மாத பந்தத்திலேயே அவனை நன்கு புரிந்து கொண்டவளாகையால், எந்தச் சூழ்நிலையில், எவ்வித மனோ நிலையில் இக்கடிதம் எழுதப்பட்டிருக்கும் என்பதை கௌரி உணர்ந்தாள். இதன் மூலம் அவள் மனம் ஆறுதலடையும் என்று நம்பி அவனால் எழுதப்பட்ட அந்தக் கடிதத்தை நெஞ்சோடு

அணைத்துக்கொண்டு--அவனதுசிறுபிள்ளைத் தனமான வார்த்தைப் பிரயோகங்களுக்காகச் சிரிக்க முயன்று, அதில் மறைந்திருக்கும் துயரத்தின் கனத்தைத் தாங்க மாட்டாதவளாய்--மனம் பொருமி அழுதாள் கௌரி..

சில நாட்களுக்குப் பின் அவனுடைய வேண்டுகோளின்படி அவர்கள் குதூகலமாகவே இருக்க முயன்று, அப்படி இருந்தும் வந்தார்கள்.

பெரியசாமி 'யுத்தம்' என்று தெரிவித்த அன்றிலிருந்தே மிகவும் துடிப்புடன் காணப்பட்டார். பக்கத்திலிருப்போரிடம் காலையிலும் மாலையிலும் பத்திரிகையைப் பார்த்துக் கொண்டு, ஒரு கையால் மீசையை முறுக்கியவாறே செய்தி விளக்கம் கூற ஆரம்பித்து, இரண்டாவது அல்லது முதல் மகா யுத்த காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கதையாகச் சொல்லத்தான் அவரால் முடிந்தது.

அவர் கொஞ்சங்கூடக் கவலை இல்லாமல் இப்படி இருப்பது கண்டு முணுமுணுத்துக் கொண்ட மரகதத்தின் குரல் அவர் காதில் விழுந்தது.

அவர் மனைவியைப்பார்த்துச் சிரித்தார்; "போடி...போ' போர் வீரனின் சங்கீதமே பீரங்கி முழக்கம் தான்' உனக்கெங்கே அது தெரியும்...உன் வம்சமே தொடை நடுங்கிக் கும்பல், உன் பையன் வருவான் சிங்கம் மாதிரி, அவனைக் கேளு, சொல்லுவான்..."என்று அவர் சொன்னதைக் கேட்டு சிரித்தவாறு அங்கு வந்த கௌரி, "அவங்க மகன் சிங்கமா இருந்தா, அந்தப் பெருமை அவங்களுக்கு இல்லையா?" என்றாள்.

"ம்... ம்... பெருமை இல்லேன்னு யாரு சொன்னா? அந்தப் பெருமைக்குக் காரணம் எங்க வம்சம்னேன்... நீ நாளைக்குப் பெத்துக்கப் போறியே அந்தப் பயலுக்காகவும் தான் சொல்றேன்...வீரன் மகன் வீரனாகத்தான் இருப்பான்"என்று அவர் சொன்னபோது, அவளுக்கு வயிற்றில் என்னவோ செய்தது... அந்த இன்பக்கிளுகிளுப்பில்தலை குனிந்தவாறு தன் அறைக்குப் போனாள் கௌரி.

நேற்று கௌரிக்குப் பூச்சூட்டல் . அடர்ந்து நீண்ட கூந்தலில் சண்பகத்தை அடுக்கடுக்காக வைத்துத் தைத்து, இடையிடையே மல்லிகையை விரவி ரோஜாவைப் பதித்து -- 'இந்த அலங்காரத்தில் கௌரியைப் பார்க்க அவன் இல்லையே' என்ற குறை

ஒவ்வொருவர் மனத்திலும் ஏதோ ஒரு விநாடியில் நெருடி மறைந்து கொண்டு தானிருந்தது.

...... தனியறையில் அமர்ந்து, தலையில் கசங்கிப் போன மலர்களைக் களைந்து கொண்டிருக்கிறாள் கௌரி.

அப்பொழுது ஜன்னலுக்கு வெளியே அவனே வந்து எட்டிப் பார்ப்பதுபோல் சண்பகமரக் கிளையின் பூவடர்ந்த கொப்பொன்று அவளுக்கு எதிரே தெரிந்து கொண்டு தானிருந்தது...

'நேற்று இந்நேரம் இதே போல் செடியிலும் மரத்திலும் மலர்ந்திருந்த பூக்கள் தானே இவையும்?...' என்ற எண்ணம் தொடர்பின்றி அவள் மனத்தில் முகிழ்த்தபோதிலும், அந்த எண்ணத்தைத் தொடர்ந்து பிறந்த அடுத்த விநாடியே சில மாதங்களுக்கு முன்பு சோமநாதன் தோட்டத்தில் அவளிடம் சொன்ன வார்த்தைகளின் தொடர்ச்சியே இது என்று அவளுக்கு விளங்கியது.

அன்று... சோமநாதன் கோவாவில் நடந்த யுத்த நிகழ்ச்சிகளை அவளிடம் வீரரசம் மிகுந்த கதையாகச் சொல்லிக்கொண்டிருந்தான். அந்தக் கதைக்குப் பின்னால் உள்ள எத்தனையோ தாய்மார்களின் கண்ணீரும், இளம் பெண்களின் சோகங்களும் அவளுக்குப் புலனாயின.

அவள் கெஞ்சுகின்ற குரலில் அவனிடம் கேட்டாள், "இந்தப் பட்டாளத்து உத்தியோகத்தை நீங்க விட்டுட்டா என்ன? கோரமான சண்டையிலே பொன்னான உயிரையும், இன்பமான வாழ்க்கையையும் எதுக்குப் பலியிடணும்?

அவள் சொல்லிக் கொண்டிருந்ததை எல்லாம் மௌனமான யோசனையுடன்

அவன் கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு பக்கத்திலிருந்த ரோஜாச்செடியிலிருந்து ஒரு பெரிய பூவைப் பறித்தவாறே அவன் சொன்னான், "சண்டை வேண்டாம்கிறதுதான் நம்மோட கொள்கை. ஆனா சண்டைன்னு வந்துட்டா, சண்டை போடாமே உயிருக்குப் பயந்து சமாதானம் பேசறது கோழைத்தனம். ஆனா, நீ கேக்கறது இந்தச் சண்டையிலே எதுக்குப் பொன்னான உயிரை இழக்கணும்கறது தானே?..." என்று கேட்டுவிட்டுக் கையிலிருந்த ரோஜாவை அவள் கூந்தலில் சூட்டிய பின், ஒரு விநாடி அமைதியாக அவள் முகத்தையும், மலர் சூடிய கூந்தலின் அழகையும் பார்த்தான்; தொடர்ந்துசொன்னான் அவன்; "இதோ இந்தப்பூ, செடியிலே இருக்கறப்போ நல்லாத்தான் இருந்தது. இது நல்லா இருக்கே பறிக்காம இருப்போம்னு விட்டுட்டா, அது உதிராம இருக்கப் போகுதா? இப்ப நான் அதைப்பறிச்சு உன் தலையிலே வெச்சிருக்கேன்...நீ அதைப் பறிச்சி உனக்கு இஷ்டமான ஒரு தெய்வத்துக்கு மாலை கட்டிப் போடறே... அதிலேதான் அந்தப் பூவுக்கு... உதிர்ந்து போகிற சாதாரணப் பூவுக்கு ஒரு மகத்தான அர்த்தம் இருக்கு... இல்லியா?... அது மாதிரிதான், மனுஷன்னுபொறந்தா.. பூத்திருக்கிறமலர் உதிர்ந்து போகிறமாதிரி... மனுஷனும் ஒரு நாளைக்கு செத்துத்தான் போவான்... அப்படி விதிமுடிஞ்சி, வியாதி வந்து சாகிற மனுஷன் அந்த உயிரை, தான் நேசிக்கிற தேசத்துக்காக, தான் விரும்பும் ஒரு லட்சியத்துக்காக அர்ப்பணம் பண்ணினா, அவன் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் இருக்கு இல்லியா?'

கௌரியின் கண்கள் கலங்குவதையும் உதடுகள் சிவந்து துடிப்பதையும் கண்ட சோமநாதன் 'பூ-உதிரும்' என்பது மட்டுமல்ல; புதிய புதிய பூக்கள் மலரும் என்பதும் உண்மை என்று கூறிவிட்டுப் பேச்சை வேறு விஷயங்களில் திருப்பினான்.

'ஐயோ இதை ஏன் இப்போது நான் நினைக்கிறேன்... அவர் போர் முனையில் இருக்கும் இந்த நேரத்திலா எனக்கு அந்த நினைவு வரவேண்டும்' என்று ஒரு விநாடி துணுக்குற்று, கட்டிலின் தலை மாட்டில் தொங்கும் கணவனின் படத்தைப் பார்க்கப் பார்க்க விகஸிக்கும் அந்த மாயப் புன்னகையைப் பார்ப்பதற்காகப் படத்தருகே போய் நின்றாள் கௌரி.

அப்போது அறைக்கு வெளியே...

"சொல்லுங்க, கடுதாசியிலே என்ன சேதி?.... பேச மாட்டீங்களா? ஐயோ தெய்வமே'..... கௌரி.... ஈ....." என்று தாய்மையின் சோகம் வெடித்துக் கிளம்பிய பேரோசை கேட்டுக் கௌரி அறைக் கதவை திறந்தாள்..... அப்படியே விழி பிதுங்கிச் சிலையாய் நின்றாள்.....

வராந்தா ஈஸிசேரில் கையில் பிரித்த கடிதத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்து கண்களை இறுக மூடிக்கொண்டிருக்கும் பெரியசாமியின் காலடியில், தரையில் நெற்றியை 'மடார் மடா'ரென முட்டிக்கொண்டு கதறுகிறாளே மரகதம்.

செம்பில் வார்த்து விட்ட சிலை மாதிரி உணர்ச்சி மிகுதியால் உப்பிக் கனத்து இறுகிச் சிவந்த அவர் முகத்தில் சருமம் துடித்தது. மூடிய இமைகளின் வழியே கோடாய் வழிந்த கண்ணீர் நரைத்துப்போன மீசையின் மேல் வடிந்து நின்றது.....

"மகனே, சோமு..." என்று வானத்தை நோக்கி இரண்டு கைகளையும் நீட்டிக்கொண்டு எழுந்தார். வராந்தாவில் சுவரில் தொங்கும் மகனின் போட்டோவை நோக்கி நடந்தார்.

"ஐயா, நீ வீரனய்யா'...." என்று ஒற்றை மரமாய் மகனின் படத்தின் முன் நிமிர்ந்து நின்று ராணுவ முறையில் 'சல்யூட்' வைத்தார்.

விறைத்து நின்று வீர வணக்கம் செய்த கரத்தைக் கீழிறக்கிய போது முதுமையின் தளர்ச்சி முழுவதையும் திடீரென அனுபவித்த உணர்வுடன் தளர்ந்து உட்கார்ந்தார் பெரியசாமி.

"எனக்கு வேறொருமகன் கூட இல்லையே..." என்று வாய்விட்டுப் புலம்பினார்....அந்த

11th Advance Tamil - FINAL.indd 54 14-02-2019 17:27:59

வார்த்தைகளைக்கேட்டு எரித்து விடுவது போல் பெரியசாமியைப் பார்த்த மரகதம், அவரைச் சபிப்பதுபோல் ஆங்காரத்துடன் இரண்டு கைகளையும் அவரை நோக்கி நீட்டியவாறு விரித்த கூந்தலும் வெறித்த விழிகளுமாய் அலறினாள்: "பாவி'....வேறே மகன் நமக்கு கிடையாது–வேண்டாம் பட்டாளத்துக்குன்னு அடிச்சிக்கிட்டேனே கேட்டீங்களா? பட்டாளம் பட்டாளம்ன்னு நின்னு என் அருமைப் புள்ளையெக் கொன்னுட்டீங்களே.... ஐயோ' உங்க பாவத்துக்கு வேறே ஒரு மகன் வேணுமா? பட்டாளத்துக்கு அனுப்பி வாரிக் குடுக்கறத்துக்குத் தானே இன்னொரு மகன் இல்லேன்னு அழறீங்க?" என்று பல்லைக் கடித்துக் கொண்டு அவர் இதயத்தில் குத்துவது போல் கேட்டாள்.

"ஆமாம்' அதற்குத்தான்...." என்று பெரியசாமி, சுருட்டுப் புகையால் பழுப்பேறிய மீசையை முறுக்கிக் கொண்டே மரகதத்தின் கண்களுக்குள் பார்த்தவாறு சொன்னார். அவர் கண்களில் சுரந்த கண்ணீர் இமை விளிம்பில் பாதரசம்போல் ஜொலித்தது....

அப்போது அறை வாசலில் 'தடா'லெனச் சப்தம் கேட்கவே திரும்பப் பார்த்து மயங்கி விழுந்த கௌரியைத் தூக்குவதற்காக ஓடினார் பெரியசாமி.

மரகதத்தின் அலறல் தெருவையே திரட்டியது'

பூவின் மேல் ஆசைப்பட்டுப் பூப்பறிக்க வந்த கௌரி, பூவிழந்து விட்டாள்....

ஆனால் சோமுவின் கைகளால் நட்டு வளர்க்கப்பட்ட அந்தச் செடிகளும் மரங்களும் அவன் நினைவாய் இப்போதும் மலர்களைச் சொரிந்து கொண்டு நிற்கின்றன.

அவற்றைப் பறித்து ஆரமாய்த் தொடுக்கவும் சோமுவின் படத்திற்கு அழகாய்ச் சூட்டவும் அவனது நினைவையே வழிபட்டு நிற்கவும் அவளிருக்கிறாள்.....

சோமுவின் படத்துக்கு மாலையிட்டு விளக்கேற்றி வணங்கிக் கொண்டிருந்தாள் கௌரி..... மாலை மாலையாய்க் கண்ணீர் வழிந்து, அவள் உடலை நனைக்கிறது.

"நான் வழிபடும் உங்கள் நினைவுக்கு அஞ்சலியாய்ச் சமர்ப்பித்த இந்தப் பூக்களுக்கு ஒரு அர்த்தமிருப்பதுபோல், உங்கள் மரணத்திற்கு ஒரு அர்த்தமிருப்பதுபோல், இரண்டு மாதங்களேயானாலும்

படிப்போம் சுவைப்போம்

களம் கண்டு வா மகனே!

புறநானூறு

இன்றும் செருப்பறை கேட்டு, விருப்புற்று மயங்கி,
வேல்கைக் கொடுத்து, வெளிதுவிரித்த உடீஇப்,
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி,
ஒருமகன் அல்லது இல்லோள்,
'செருமுக நோக்கிச் செல்க' என விடுமே!
'கெடுக சிந்தை ; கடிதுஇவள் துணிவே;
மூதின் மகளிர் ஆதல் தகுமே'

– புறநானூறு: 279

பாடியவர்: ஒக்கூர் மாசாத்தியார்

பாடற்பொருள்

ஒரு பெண்ணின் தந்தை முதல் நாள் போரில் இறந்தான். அடுத்த நாள், அவளுடைய கணவனும் போரில் வீரமரணம் அடைந்தான். அவர்கள் இருவரையும் போரில் இழந்த பெண், மூன்றாம் நாளும் போர் முரசின் ஒலி கேட்டு, தன்னுடைய ஒரே மகனையும் போர்க்களத்திற்குச் செல்லும்படி விருப்பத்துடன் அனுப்புகின்றாள். தன்மகனுக்கு ஆடையுடுத்தி, அவனுடையதலைமுடிக்கு எண்ணெய் தேய்த்து, வீரமொழிகளைக் கூறி வழியனுப்புகிறாள்.

11th Advance Tamil - FINAL.indd 55 14-02-2019 17:27:59

வீரபுருஷனோடு வாழ்ந்த எனது சாதாரண வாழ்க்கைக்கும் ஒரு மகத்தான அர்த்தம் காண்கிறேன் நான்...... நாளைப் பிறக்கப் போகும் நம் மகன் வாழ்க்கையும் அர்த்தம் நிறைந்திருக்கும்---- அவன் ஒரு வீரனின் மகன்' உங்கள் தகப்பனார் இன்னொரு மகன் இல்லையே என்று வருந்துகிறார். அந்தச் சிங்கம் குகைக்குள் இருந்து இன்னும் வெளியே வரவில்லை...... இந்த நாட்டின் பெண் குலம் உள்ளவரை வீரருக்கா பஞ்சம்'..... உங்கள் அம்மாவின் கண்ணீருக்குத்தான் மாற்றே இல்லை..... அவர்கள் எவ்வளவு பாக்கியசாலி...." என்று எவ்வளவு விஷயங்களை அவனோடு அவள் மௌனமாய்ப் பேசுகிறாள்.....

திடீரென்று அடிவயிற்றில், விலாப் புறத்தில் சுருக்கெனக் குத்தி வலிக்க கணவனின் படத்தின் முன் கைகூப்பி நின்றிருந்த கௌரி, கட்டிலின் மீது சாய்ந்து படுத்தாள்.....

அவள் கண் முன்னே நூறு வண்ணங்களில் ஆயிரக் கணக்கான பூக்கள் மலர்ந்து ஜொலிக்கின்றன.

வெளியே திண்ணையிலிருந்து மீசையை முறுக்கியவாறு பெரியசாமி தன் மகன் யுத்த களத்தில், மறைந்திருந்து குழியிலிருந்து மேலேறி வந்து, முன்னேறி வந்து கொண்டிருக்கும் எதிரிகளில் ஆறுபேரை ஒரே கணத்தில் சுட்டுக் கொன்றதையும், அப்போது தூரத்திலிருந்து வந்த குண்டொன்று அவன் உயிரைப் பறித்துச் சென்றதையும் பத்திரிகையில் படித்து யாருக்கோ விளக்கிக் கொண்டிருக்கிறார்.

ஆம்; ஒரு வீரனின் மரணத்தில் உள்ள சோகம் பனிப்படலம் போல் மறைந்து போகும். அவன் வாழ்ந்தபோது புரிந்த வீர சாகசமே, காலம் காலமாய்ச் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்.

படைப்பு முகம்

ஜெயகாந்தன் (1934–2015): 20ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவராய்ப் போற்றப்படுபவர். இலட்சக்கணக்கான வாசகர்களைத் தம் படைப்புகளின் வழியே சென்றடைந்தவர். இந்திய அரசின் மிக உயர்ந்த இலக்கிய விருதான ஞானபீட விருதினை (2002) தமது ஒட்டுமொத்தப் படைப்பிலக்கியங்களுக்காகப் பெற்றவர். சாகித்ய அகாதெமி, பத்மபூஷன் விருது ஆகிய விருதுகளையும் பெற்றவர். இவரது 'ஒரு மனிதன் ஒரு வீடு ஓர் உலகம்', 'சில நேரங்களில சில மனிதர்கள்', 'கங்கை எங்கே போகிறாள்?', 'சுந்தர காண்டம்', 'ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்' போன்ற படைப்புகள் குறிப்பிடத்தக்கவை.

படிப்போம் பகிர்வோம்

1. நீங்கள் அறிந்த, நாட்டுக்காகப் போராடி வீரமரணம் அடைந்த இராணுவ வீரர் ஒருவரைப் பற்றி எழுதுக.
2. பூ உதிரும் கதையில் வரும் பெரியசாமியின் மன உறுதிக்கும் கௌரியின் மன உறுதிக்கும் உள்ள ஒற்றுமையை விளக்குக.
3. பூ உதிரும் என்ற தலைப்பின் வழியாக ஜெயகாந்தன், வாழ்வின் பொருளை விளக்கும் பாங்கினை எழுதுக.
4. இராணுவ வீரரின் வாழ்வியல் ஒழுக்க நெறிகளைப் பட்டியலிடுக.

11th Advance Tamil - FINAL.indd 56 14-02-2019 17:27:59

இறுக மூடிய கதவுகள்

– ஆர். சூடாமணி

பார்வை மங்கியது. எதிரில் கிடந்த அம்மாவின் முகம் பனிப்படலத்தினூடே மொத்தையாய்த் தெளிவின்றித் தெரிந்தது. கண் டாக்டர், மருந்து போட்டுக் கண் பார்க்க விரித்து வைத்தால் இருக்குமே, அந்த மாதிரி.

கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

இந்தக் கண்ணீர் ஏதோ நிமோனியாவில் காய்ச்சல் தகிக்க ஆக்ஸிஜன் குழாயினால் மூச்சு விட்டுக் கொண்டு நினைவின்றிப் படுத்திருக்கும் அம்மாவுக்காக மட்டும்தானா?

எனக்காகவும்தான்.

மற்றவருக்காக அழும்போது அந்த அழுகை பெரும்பாலும் நமக்காகவேதான் இருக்கிறது. நாம் அவருக்குச் செய்யத் தவறிய கடமைகளுக்காக, அவரிடம் காட்டாத அனுதாபத்தக்காக, அவரைப் புரிந்துகொள்ளாமல் போனதற்காக.

அம்மாவுக்கு மாநிறம். இப்போது காய்ச்சல் வேகத்தில் கறுப்பாகவே தெரிந்தாள். கரிய முகத்தில் ஜுரப் பளபளப்பு. கரிய முடியில் தலை சாமான் வைத்துக் கட்டியது போல், வகிட்டையொட்டி நெற்றியின் மேல் விளிம்பில் இருபுறமும் வெள்ளை முடி. திலகமில்லாத வெறும் நெற்றி. எனக்கு நினைவு தெரிந்த நாளாக வெறுமையாய் இருந்து வரும் நெற்றி.

டாக்டர் இனி அதிக நம்பிக்கை இல்லை என்று சொல்லிவிட்டார். அதாவது, "பார்ப்போம் மிஸ்டர் கேசவன். நம்மாலான முயற்சியெல்லாம் செய்யறோம். காட் இஸ் க்ரேட்" என்று சொன்னார்.

அறைக் கதவிடை சலனம். வேகமாய்த் திரும்பிப் பார்த்தேன். என் மனைவிதான். என் முகம் விழுந்து விட்டதா? என் ஏமாற்றத்தை அவள் உணர்ந்திருக்க வேண்டும்.

"யாரை எதிர்பார்க்கிறீங்க?"

"ம்? யாரையுமில்லே"

"இந்த நேரத்துக்கு நான்தான் வருவேன்னு உங்களுக்குத் தெரியும்"

"ஆமாம்"

"பின்னே?"

"பின்னே? ஒண்ணுமில்லே"

"நாலுநாளா கவனிக்கிறேன். வீட்டிலேயும் சரி, இங்கேயும் சரி, அடிக்கடி வாசல் பக்கமே பாத்துக்கிட்டிருக்கீங்க. யாரை எதிர்பார்க்கறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கக் கூடாதா?"

அவள் குரலில் சற்று சூடு உறைத்தது. நியாயம் இருக்கும் இடத்தில் சூடு அவசியம் இருக்கும். அன்பான மனைவி. முகம்கோணாமல் என் தாயைக் கவனித்துக் கொள்பவள். நான் யாரை எதிர்பார்க்கிறேன். யாருக்கு அம்மா உடல்நிலைபற்றி எழுதி அனுப்பியிருக்கிறேன் என்று அறிந்துகொள்ள அவளுக்கு உரிமையில்லையா என்ன? ஆனால், அது அம்மாவின் உரிமையில் குறுக்கிடுவதாயிருந்தால்? யாருக்கும் தம் அந்தரங்கத்துக்கான உரிமை உண்டல்லவா?

"முக்கியப்பட்ட யாருமில்லை நீலா" என்று பொய் சொன்னேன்.

"இருந்தாலும் எனக்குச் சொல்றது! யாரது?"

"எங்களோட ஒரு பழங்காலக் குடும்ப நண்பர். அப்பாவுக்கு ரொம்ப வேண்டியவர். சொந்தமின்னு அதிகமா யாருமில்லாத எங்களுக்கு, அவரை ஒரு சொந்தக்காராய் நினைச்சு, அம்மா முடியாமல் படுத்திருக்கிறதைத் தெரிவிச்சிருக்கேன்.

அவ்வளவுதான்." என்றேன். அதில் அதிக சிரத்தை இல்லாதவன்போல்.

மிஸ்டர் செல்லப்பா இந்த ஊரில் இருந்ததே எனக்குத் தற்செயலாய்ச் சென்றமாதம்தான் தெரியவந்திருந்தது. அப்போதிலிருந்தே அம்மாவிடம் சொல்லலாமா என்ற எண்ணம். அவரை வீட்டுக்கு அழைக்கவேண்டும் என்ற துடிப்பு. என் நினைவில் தெரிந்த வாலிப செல்லப்பா வெளியூருக்கு மாற்றலாகிச் சென்று, இப்போது வயோதிகச் செல்லப்பா தம் இலாகாவின் தலைவராய்ச் சென்னைக்கே வந்து சேர்ந்திருக்கிறார். முடி பஞ்சாய் நரைத்திருக்குமோ? வழுக்கை? கைத்தடி? சேசே! அவருக்கு ஐம்பத்தைந்து ஐம்பத்தாறு வயதுக்குமேல் இருக்காது. நிமிர்ந்த உடலும் சுறுசுறுப்பான நடமாட்டமும் கருமை மாறாத தலைமுடியுமாய் நாற்பது என்று மதிக்கத்தக்க எத்தனையோ ஐம்பத்தைந்துகளை நான் பார்த்ததில்லையா என்ன? இது ஓர் அசட்டுத்தனம், நமக்கு முந்தைய தலைமுறை என்றதுமே தொண்டுக்கிழமாய்க் கற்பனை செய்து கொள்வது. குழந்தை கண்களுக்குத்தான் முப்பது என்றாலே முதுமை. என் வயதிலுமா?

அவரை நான் வீட்டுக்கு அழைக்கவில்லை. அம்மாவிடம் சொல்லக்கூட இல்லை. சொல்லவேண்டுமென்று நினைத்துக்கொண்டே இருக்கையில் அம்மா கடுமையான நிமோனியாவில் படுத்துவிட்டாள்.

அம்மா முகத்தைப்பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தேன். மனம் உணரும் உணர்ச்சிகளை எல்லாம் பேச நாவுக்குத் திறமையில்லை. ஆனால், கண்களுக்கு உண்டு. உணர்ச்சிகள் வெள்ளமிட்டு வரும்போது கண்களால் மட்டும்தான் பேசமுடிகிறது. புலன் ஆற்றல் ஒன்று இடம் மாறிப்போகிறது.

"என்ன அப்படியே உட்கார்ந்திருக்கீங்க? எழுந்து வீட்டுக்குக் கிளம்புங்க. நான்தான் வந்திட்டேனே !"

நான் மெல்ல எழுந்துகொண்டேன். "அப்பப்பா! இன்னிக்கு அந்த ரெண்டு வாலுங்களையும் ஸ்கூலுக்கு அனுப்பறதுக்குள் போதும்போதும்னு ஆயிடுச்சு. அப்பா லீவு போட்ருக்காரே, நாங்க மட்டும் போடக்கூடாதா?ன்னு ஒரேரகளை.சாயங்காலம் அதுங்க வர்றப்பக் கொஞ்சம் அதட்டி கொஞ்சம் நயமாய்ப் புத்திசொல்லி, டிபன் சாப்பிட்டிட்டுப் பாடம் படிக்கச்சொல்லுங்க" என்றாள் நீலா.

"ஆஸ்பத்திரிக்கு வந்து பாட்டியைப் பார்க்கணும்னு அருண் நேத்தே சொன்னான். சாயங்காலம் அழைச்சிட்டு வரட்டுமா? பார்த்திட்டு உன்கூட வீட்டுக்குத் திரும்பிடட்டுமே?"

அவள் கணநேரம் யோசித்தாள். "எதுக்கு... இப்ப எதுக்குங்க? சின்னப்பையன். இந்த ஆக்ஸிஜன் குழாயை எல்லாம் பார்த்துப் பயந்துப்பான். நாலுநாள் போகட்டுமே, அதுக்குள்ள அத்தைக்கும் கொஞ்சம் குணம் தெரிஞ்சு டாக்டர் ஆக்ஸிஜனை எடுத்திடலாமில்லையா?"

ஆக்ஸிஜன் எடுத்துவிடலாம் என்பது உண்மை. குணம் தெரிவதால்தானா? இன்னொரு சாத்தியக்கூறு பற்றி நாங்கள் பேசிக்கொள்ளவில்லை. எங்கள் மௌனத்துள் அது ஆயிரம் நாவுகளோடு பதுங்கியிருந்தது.

நீலா பகலுணவு சாப்பிட்டாகிவிட்டது. கையில் கொண்டுவந்திருந்த புத்தகத்தையும் பிற்பகல் காபி இருந்த பிளாஸ்க்கையும் மூலையிலிருந்த மேஜைமேல் வைத்துவிட்டுக் கட்டிலில் நெருங்கிக் குனிந்து, என் தாயின் பிரக்ஞையற்ற வடிவைச் சிலகணங்கள் உற்றுப் பார்த்தாள். நோயாளியின் உடலில் எவ்வித மாற்றமும் இல்லை. எங்கள் கண்கள் சந்தித்தபோது பேச இவ்வளவுதான் விஷயம்.

"அப்ப, நான் கிளம்புறேன் நீலா."

"ம், ஸிஸ்டர் வந்து இன்ஜெக்சன் போட்டுட்டாங்க, இல்லே?"

"ஆச்சு, டாக்டர் பன்னிரண்டு மணிக்குத் தான் வருவாராம்."

"நான் பாத்துக்கறேன்."

தெருவில் இறங்கினேன். முற்பகல் வெயில் சுள்ளென்று உறைத்தது. நான் வீடுவந்து



சேர்ந்தபோது மணி பத்தரை. ஆஸ்பத்திரியில் இருந்து நடக்கும் தூரத்தில்தான் வீடு. குளித்தேன். ஹாட்ஃபிளாஸ்கில் நீலா எனக்கு வைத்திருந்த உணவை உண்டுவிட்டு ஆயாசத்துடன் படுத்துக்கொண்டேன். ஆயாசம் வெயிலினால்; ஐந்துநாட்களாய் ஆபிசுக்கு லீவுபோட்டுவிட்டு ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்குமாய் அலைவதனால்; அம்மாவைப் பற்றிய கவலையினால்; மனபாரத்தால்.

இரவுமுடிய ஆஸ்பத்திரியில் அம்மாவின் பக்கத்தில் உட்கார்ந்து கண்விழித்து இருந்ததால் இப்போது கண்கள் எரிந்தன. மூடிக்கொண்டேன். விட்டு விட்டுத் தூக்கம். அதில் கனவென்று சொல்லமுடியாத தாறுமாறான பிம்பங்கள், அமுங்கிஅமுங்கி வெளிவரும் அம்மாவின் முகம். கூடவோர் எட்டுவயதுச் சிறுவன். ஒருவினாடி கண்களைத் திறந்துவிட்டு மூடினேன். மறுபடியும் தூக்கமா? இப்போது வேறொரு முகம். சிவந்த நீளவாட்டு முகம். இதமான புன்சிரிப்பு. பிரகாசக் கண்களில் ஆழமான பார்வை. சுருட்டை கிராப். நான் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அந்த முகமும் நழுவியது. திடுக்கிட்டு விழித்துக் கொண்டேன்.

புரண்டு படுத்தேன். மறுபடியும் அரைத்தூக்க நிலை. கண்களுள் மீண்டும் இளம் அம்மாவின் முகம். அதில் ஒருவித ஆவல். உதடுகள் ஏதோ சொல்கின்றன. சிறுவனின் கண்களில் அதிர்ச்சி. மறுப்புக்குறியில் தலை இடவலமாய் அசைகிறது. மறுபடியும் விழித்துக்கொண்டேன். உடல் முழுவதும் வியர்வை. ஆழ்ந்த, தொடர்ச்சியான உறக்கமில்லாததால் ஓய்வெடுத்த உணர்வே இல்லை. எழுந்து உட்கார்ந்து கடிகாரத்தைப் பார்த்தேன். பிற்பகல் மூன்று மணி. போய் முகம் கழுவிக்கொண்டு காஸ் அடுப்பை ஏற்றிப் பாலைக் காய்ச்சி உப்புமா செய்தேன்.

வாசல்மணி ஒலிப்பது கேட்டது. ஓடிப்போய்க் கதவைத்திறந்தேன். தபால்காரர். ஒரு நண்பர் வீட்டுத் திருமணத்துக்கு வந்திருந்த அழைப்பிதழைக் கொடுத்துவிட்டுப் போனார்.

நான் எதிர்பார்த்தவர் வரவே மாட்டாரா? என் அம்மாவின் உயிர் பிரியுமுன் அவள்

11th Advance Tamil - FINAL.indd 59 14-02-2019 17:27:59

முகத்தையாவது அவர் பார்க்கட்டும் என்று எண்ணி அவள் உடல்நிலை பற்றியும் மற்ற விவரங்களையும் அவருக்கு எழுதியிருந்தேனே, அந்த அற்பப்பணி செய்வதுகூட எனக்குக் கொடுத்து வைக்கவில்லையா? நேரில் போய்ச் சொல்லலாமென்றால் காலையும் மாலையும் அவர் வீட்டில் இருக்கும்போது நான் ஆஸ்பத்திரியில் அம்மாவுடன் இருக்கிறேன். பகல் முடிய எனக்கு நேரம் இருக்கும்போது அவர் அலுவலகம் போயிருப்பார். நீலாவைப்போய்ச் சொல்லச்சொல்லலாம் என்றால் அவளுக்கு இவ்விஷயத்தின் முக்கியத்துவம் தெரியாது. அதை அவளுக்கு விளக்க எனக்குத் தயக்கம்தான். இன்று மாலை ஆஸ்பத்திரிக்குப் போனபின் சிறிதுநேரம் பணிப்பெண் எவளையாவது அறைக்குள்ளேயே இருக்கச் சொல்லி விட்டு, நானேபோய் அவரிடம் சொல்லிவிட்டு வந்தால் என்ன? டாக்டரின் முகமோ 'இன்னும் அதிக காலம் இல்லை' என்று சொல்லிவிட்டது. இன்னும் இரண்டு நாள்கள் ஞாயிற்றுக் கிழமைக்காக காத்திருந்தால் காலம் கடந்துவிடலாம்.

மாலை நாலரை மணிக்கு என் குழந்தைகள் பத்மாவும் அருணும் பள்ளியிலிருந்து திரும்பினார்கள். அவர்களுக்குச் சிற்றுண்டியும் காப்பியும் கொடுத்துவிட்டு நீலாவிற்குத் தனியாய் எடுத்து வைத்துவிட்டு நானும் உட்கொண்டேன்.

"பாட்டி இன்னிக்கு எப்படிப்பா இருக்காங்க?" என்றான் அருண்.

"அப்படியே தான், புதுசா ஒன்னுமில்லை"

"நான் உங்கக்கூட ஆஸ்பத்திரிக்கு வந்து பாட்டியைப் பார்க்கறேம்ப்பா"

"அண்ணா வந்தா நானும் வருவேன்" என்றாள்.

"ரெண்டு பேருமே இப்ப வேண்டாம்டா கண்ணு". பத்மாவைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டேன்.

"ஒருநாள் ரெண்டுநாள் பாட்டிக்கு எப்படி இருக்குன்னு பார்த்துக்கிட்டு நானே உங்களை அழைச்சுக்கிட்டுப் போறேன்".

"இப்ப கொஞ்ச நேரத்தில் நீங்க ஆஸ்பத்திரிக்குப் போயிடுவீங்க. நாங்க ரெண்டு பேரும் தனியாத்தானே இருக்க வேண்டி இருக்குது?"

"தனியென்ன? ஒரு அரை மணிநேரம் பக்கத்து வீட்டு ஆன்டிகிட்டப் போய் இருக்கப் போறீங்க? அரை மணியில் அம்மா ஆஸ்பத்திரியிலிருந்த திரும்பி உங்களை வந்து அழைச்சுக்கிட்டு இங்கே வந்துடப் போறாங்க."

"நீங்க எப்பப்பா மறுபடியும் ராத்திரியிலே வீட்டிலே இருப்பீங்க? எனக்குக் கதை சொல்லுவீங்க?" என்றபடி என்மேல் நெருங்கி ஒன்றிக்கொண்டாள் பத்மா. அவள் தலைமுடியைக் கோதி முத்தமிட்டேன்.

"பாட்டி ஆஸ்பத்திரியில் இருக்கிற வரைக்கும் நான் அவங்கக்கூடத் துணைக்குத் தங்கி இருக்க வேணாமா கண்ணு? சொந்த மனுசங்க யாரானும் கூடவே இருக்கணும்னு டாக்டருங்க சொல்றாங்களே. அதனாலே தானே அம்மாவும் நானும் மாத்தி மாத்திப் பாட்டியோடு இருக்கோம்".

"ஊஹூம், நீங்க இங்க தான் இருக்கணும். ஆஸ்பத்திரிக்குப் போகக்கூடாது".

அழத்தொடங்கிய குழந்தையைத் தேற்றிச் சமாதானப்படுத்தினேன். "அழக் கூடாதும்மா கண்ணு, சமர்த்தில்ல? ராத்திரியில் பாட்டி கண்விழித்துப் பார்த்து, 'அய்யோ நம் மகன் இங்கே இல்லையே' அப்படினு வருத்தப்படக் கூடாதில்லையா? பாட்டி வீட்டுக்கு வந்ததுமே நானும் வந்துடுவேனே! அப்புறம் ராத்திரியெல்லாம் வீட்டில்தான் இருப்பேன். பத்மாவுக்கு ஒவ்வொரு ராத்திரியும் புதுபுதுக் கதையெல்லாம் சொல்லுவேன்..."

இந்தக் குழந்தை சொல்வதைக் கேட்டு நான் ஆஸ்பத்திரிக்குப் போகாமலே இருந்தால் எவ்வளவு தவறாக, அநியாயமாக இருக்கும்! குழந்தைகளுக்கு என்ன தெரியும்?

அவர்களுடைய பேச்சில் எதைப் பெரிதாய் எடுத்துக் கொண்டு மதிப்பளிக்க வேண்டும் என்னும் அறிவும் தெளிவும் பெரியவர்களுக்கல்லவா இருக்க வேண்டும்?

அம்மா ஏன் அந்த எட்டுவயது சிறுவனின் பேச்சைக் கேட்டாள்?

மறுபடியும் மாலையில் ஆஸ்பத்திரி. அம்மாவின் பிரக்ஞையற்ற உருவம்.

"டாக்டர் வந்தாரா நீலா?"

"ம்..."

"புதுசா ஏதானும் சொன்னாரா?"

"ஊஹூம், மருந்துகள், இன்ஜெக்ஸன், ஆக்ஸிஜன், காட் இஸ் கிரேட் எல்லாமே வழக்கம்போல்"

சற்று தயங்கிவிட்டு"அவர் வந்திருக்காரா? அதான், நான் சொல்லி அனுப்பினேன்னு சொன்னேனே, அந்தாளு" என்றேன்.

"யாரும் வரலே" என்றவள் என்னைக் கூர்ந்து பார்த்தாள். " முக்கியப்பட்டவரில்லை" என்கிற ஒருவருக்காகவா இப்படிப் பறக்கிறாய்? என்னை நம்பச்சொல்கிறாயா? என்று கேட்கும் பார்வை.

நான் தலையைத் திருப்பிக்கொண்டேன். நீலாவுக்குச் சொல்ல வேண்டியதுதான். ஆனால், அவளுக்குச் சம்பிரதாய மனம். அம்மாவைப் பற்றிக் குறைவாக நினைத்து விட்டால்?"

"அப்போ நான் வீட்டுக்குப் போகவா?"

"ம், கிளம்பு. குழந்தைங்க எதிர்பார்த்துக்கிட்டிருக்கும்"

அவள் போனபின் அம்மாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டேன். அம்மா சலனமின்றிப் படுத்திருந்தாள். செயற்கைச் சுவாசத்தில் நோயின் முனகல்கள் ஏதுமில்லை. மார்பு சீராய் ஏறி இறங்கியது. ஒருகால் இந்த மயக்கத்தின் திரைக்குப் பின்னே, ஆழ்மனத்தில், வேறேதோ ஒரு காலத்தில் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறாளா?"

நெற்றியின் கோடுகள். வாழ்வின் தடங்கள்.

அதில் ஒரு தடத்தில் நிற்கும் அம்மா. இளைய அம்மா. பயம் கலந்த ஒரு சந்தோசத்தில் உருவமே வேறாகி ஒளியால் நிறைந்தது போன்ற அம்மா. அவள் அணைப்பினுள் எட்டு வயதுப் பையன்.

"செல்லப்பா அங்கிளை உனக்குப் பிடிச்சிருக்குதா கேசவா?"

"ஓ, ரொம்பப் பிடிக்குமே"

"எனக்கு... எனக்குக் கூட அவரைப் பிடிக்குதுடா கண்ணா!"

"நல்ல அங்கிள் அவரு"

"அவரை... அந்த நல்ல அங்கிளை உனக்கு அப்பாவாய்ப் பண்ணட்டுமா?"

பையன் முகத்தில் ஒன்றும் புரியாத வெற்றுப்பார்வை. அது ஒரு தடை என்பதுபோல் அம்மாவின் முகத்தில் கணநேரத் தடுமாற்றம்.

"என்னம்மா?"

"அவரை நான் கல்யாணம் செய்துக்கட்டுமா?"

இப்போது அதிர்ச்சியே வடிவாய் உருமாறும் மகன்.

"ஊஹூம், கூடாது, அது தப்பு!"

"உனக்கு ஒரு அப்பா கிடைப்பாருடா கண்ணா"

"என் அப்பா செத்துப்போயிட்டார். நீ என் அம்மா, அம்மால்லாம் தப்புச் செய்யக் கூடாது..."

மறுப்பில் தலையாட்டும் மகன்.

அந்தத் தலையாட்டலில் ஒரு வாழ்க்கைக் கதையை இறுக மூடிப் பூட்டிவிட்டதை அந்தச் சிறுவன் அறியமாட்டான். நான்தான் அதை அறிந்து, உணர்ந்து, நொந்து, வெட்கி அதற்காகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தேன்.

11th Advance Tamil - FINAL.indd 61 14-02-2019 17:28:00

குழந்தைகளின் உலகம் சுயத்தில் தொடங்கிச் சுயத்தில் முடிகிறது. தம்முடன் சம்பந்தப்படுத்தித்தான் எதையும் அவர்களால் பார்க்கமுடியும். என் அம்மா, என் அப்பா, என் தம்பி, என் நண்பன், என் டீச்சர்.

மனிதர்களைத் தனிமனிதர்களாய்ப் பார்க்கும் ஆற்றல் ஒரு குழந்தைக்கு எப்படிச் சாத்தியமாகும்? அவனைப் பொறுத்தவரை அம்மா ஒரு பெரியவள். தன் அம்மா, தன்னைப் பார்த்துக் கொள்கிறவள், தன் பாதுகாப்பான பின்னணி.

அம்மாவை முப்பது வயதான வாலிப மங்கையாக, எதிர்பார்ப்புகள் நிறைந்தவளாக, வருங்காலம் தன்முன் நீண்டு கிடக்கக் காண்பவளாக, இனம் கண்டுகொள்கிற முதிர்ச்சியும் விலகி நின்று வெறும் பார்வையாளராய்ப் பார்க்கும் தெளிந்த கண்ணோட்டமும் ஒரு குழந்தைக்கு எப்படி வரும்?

அந்தக் குழந்தையின் பேச்சை நீ ஏனம்மா கேட்டாய்? தன் அம்மா என்பதற்குமேல் நினைக்கத் தெரியாத குழந்தையின் பேச்சை நீ ஏன் கேட்டாய்? விதவை மறுமணம் தவறு என்று கருதும் ஒரு மரபுச் சமுதாயத்தின் வார்ப்படமான குழந்தையின் பேச்சை ஏன் கேட்டாய்? முதலில் ஒரு குழந்தையிடம் யோசனை கேட்பதே தவறில்லையா? குழந்தையைக் குழந்தையாகவே வைத்துவிட்டு உன் இதயம் காட்டிய வழியில் நீ சென்றிருந்தால், அந்தக் குழந்தை முதலில் முரண்டிருக்கலாம். ஆனால், நான் புரிந்துகொண்டிருப்பேன். மகிழ்ந்திருப்பேன். இரண்டு பேரின் சந்தோஷ வாய்ப்பைக் கெடுத்துவிட்ட குற்றச்சுமையை நெஞ்சில் தாங்கி இப்படி வருஷக்கணக்காய்ப் பரிதவித்துக் கொண்டிருக்கமாட்டேன்.

எல்லாம் வேறுவிதமாய் நடந்திருந்தால்!

அம்மாவின் நெற்றியில் குங்குமம். சிரிப்பில் சந்தோஷம். முகத்தில் பிரகாசம். முதுமையும் மரணமும் யாருக்கும் நேர்வதுதான். ஆனால் தனிமை இருந்திருக்காது. நாளுக்குநாள் வளர்ந்து பெரியவனாகித் தன் வாழ்வை நோக்கிக் கிளை பிரிந்து போகும் மகன் – அடுத்த தலைமுறையினன் – எத்தனை பாசமிருந்தாலும் எந்த அளவுக்குத் தோழனாயிருக்க முடியும் பெற்றவளுக்கு?

அம்மாவின் தலைமுடியைத் தடவிக்கொடுத்தேன். கன்னத்தை மெல்லத் தீண்டினேன். கையைப் பற்றினேன். எதற்குமே அவளிடம் எதிர்விளைவு இல்லை. உடம்பில் அசைவில்லை.

அம்மா, அம்மா உன்னை எப்படி எட்டுவேன்? உன்னுடன்தான் எத்தனையோ பேசவேண்டும். எனினும், என் நாவு புரளவில்லை. நான் பேசினாலும் உனக்குக் கேட்காது. ஆனால், உன் மனம் உணர்கிறதா? என் அன்பை, என் துயரத்தை, என் கழிவிரக்கத்தைப் பேச்சின்றியே புரிந்துகொள்கிறாயா? இப்போது உடல் குலுங்க நான் மௌனமாய்க் கொட்டும் இந்தக் கண்ணீர் உனக்காக மட்டுமல்ல. எனக்காகவும்தான் என்பதை நீ உணர்கிறாயா அம்மா? உணர்ந்து என்னை மன்னிக்கிறாயா?

நெடுநேரம் ஆகியிருக்குமென்று நினைக்கிறேன். தலை நிமிர்ந்து, மூக்கை உறிஞ்சி கண்களைத் துடைத்துக் கொண்டேன். குளியலறைக்குச் சென்று வாளியிலிருந்து சிறிது நீரை முகத்தில் இறைத்துக் கழுவிக் கொண்டேன். மணி எட்டை நெருங்கியிருந்தது. ஒரு நர்ஸை அழைத்து அம்மாவின் பக்கத்தில் அமர்த்திவிட்டு, மிஸ்டர் செல்லப்பாவின் வீட்டுக்கே நான் போய்...

எண்ணம் முடியவில்லை. எதிரே அறைக்கதவுக்கு வெளியே நின்றிருந்தவரை என் கண்கள் கண்டுகொண்டன.

சிவந்த நீளவாட்டு முகத்தில் இப்போது சில சுருக்கங்கள். சுருள் முடியில் அங்கங்கே நரை. எனினும் அந்த முகத்தின் நேர்த்தியை இதமான புன்சிரிப்பை, ஒளிமிக்க விழிகளை, எட்டுவயதுப் பையனுக்குப் பரிச்சயமான அவன் அப்பாவின் நண்பரை, எனக்கும் அடையாளம் தெரிந்தது.

பேசத்தெரியாமல் அவரையே பார்த்துக் கொண்டு நின்றேன். வந்துவிட்டார். வந்துவிட்டார், வந்துவிட்டார்.

11th Advance Tamil - FINAL.indd 62 14-02-2019 17:28:00

"கேசவ்? கேசவன்தானே? நான் செல்லப்பா"

அந்தக் குரலும் மாறவில்லை.

"தெரியும்" என்று எப்படியோ தடுமாறிக் கூறினேன்.

"நான் ரெண்டு வாரமா ஊர்ல இல்லை. இன்னிக்குச் சாயங்காலம்தான் வந்தேன். உன்– உங்க – லெட்டரைப் பார்த்தேன். உடனே கிளம்பி வந்தேன்."

அவர் கண்கள் படுக்கைமீது கிடந்த உருவத்தில் சென்று நிலைத்தன. உதடுகள் லேசாய்த் துடிப்பது தெரிந்தது. அவர் பார்வையில் ஒரு வாழ்நாளின் உணர்ச்சிகள் அனைத்தும் ஒருங்கே கட்டவிழ்ந்து உடைந்தன. கணப்பொழுதில் அம்மாவுடன் அவர் அங்கே தனியாய் இருந்தார். இது அவ்விருவருடைய கணம். அவர்களுடையதாய் இருந்திருக்க வேண்டிய எத்தனையோ ஆண்டுகளின் ஒரு சின்னஞ்சிறு கடைசிப் பிரதி.

"உள்ளே வந்து உட்காருங்க சார். நான் இதோ வந்துடறேன்" என்றுகூறி அந்த அறையை விட்டு நான் வெளியேறினேன்.

படைப்பு முகம்

ஆர்.சூடாமணி (1931–2010): நடுத்தர மக்களின் வாழ்க்கையையும் குறிப்பாகப் பெண்களின் நிலையையும் தமது எளிமையான மொழியில் எழுதியவர். உளவியல் எழுத்தாளர் என்று போற்றப்படும் இவர், ஆங்கிலத்திலும் பல படைப்புகளைத் தந்துள்ளார்.

படிப்போம் பகிர்வோம்

1. இறுக மூடிய கதவுகள் என்னும் சிறுகதை கதை மாந்தர் நோக்கில் கதை சொல்லும் முறையில் அமைந்துள்ள பாங்கினை விளக்குக.
2. "பாடாத தேனீ பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ" என்ற பாரதிதாசனின் கவிதையோடு இறுக மூடிய கதவுகள் கதையின் கருப்பொருள் பொருந்தும் தன்மையை ஒப்பீடு செய்க.
3. கனவென்று சொல்லமுடியாத தாறுமாறான பிம்பங்கள், அமுங்கி அமுங்கி வெளிவரும் அம்மாவின் முகம். கூடவோர் எட்டுவயதுச் சிறுவன். ஒருவினாடி கண்களைத் திறந்துவிட்டு மூடினேன். மறுபடியும் தூக்கமா? இப்போது வேறொரு முகம். சிவந்த நீளவாட்டு முகம். இதமான புன்சிரிப்பு. பிரகாசக் கண்களில் ஆழமான பார்வை. சுருட்டை கிராப். நான் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அந்த முகமும் நழுவியது.

   ---இறுக மூடிய கதவுகள் கதையின் இப்பகுதியில் காட்சித் துணுக்கு முறை என்ற கதைசொல்லும் உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது, இதுபோன்று இக்கதையில் வரும் வேறு உத்திகளைக் குறிப்பிட்டு எழுதுக.
4. இறுக மூடிய கதவுகள் கதையில் "உள்ளே வந்து உட்காருங்க சார், நான் இதோ வந்துடுறேன். என்று கூறி அந்த அறையை விட்டு நான் வெளியேறினேன்." என்று கதை முடியும் இடத்திலிருந்து கேசவன் அறையைவிட்டு வெளியேறியபின் அவனது அம்மா சுயநினைவு திரும்பி, செல்லப்பாவுடன் உரையாடுவது போல் கற்பனையாகக் கதையை நீட்டி எழுதுக.
5. அவரை... அந்த நல்ல அங்கிளை அப்பாவாய்ப் பண்ணட்டுமா... ஊஹூம் கூடாது என்பதற்குப் பதிலாகச் சரி என்று கூறுவதாகக் கொண்டு கற்பனைக் கதையைத் தொடர்க.

11th Advance Tamil - FINAL.indd 63 14-02-2019 17:28:00

நசுக்கம்

– சோ. தர்மன்

கட்டடங்களை விட்டுத் தூரத்தில் இருந்த சிமெண்ட் களத்தில் எல்லோரும் கூடியிருந்தார்கள். அந்தச் சதுர வடிவ குறைந்த உயரமுள்ள சிமெண்ட் மேடை நிரம்பி வழிந்தது. ஒவ்வொருவர் பக்கத்திலேயும் முதல்நாள் அவர்கள் திரி சொருகி வைத்துவிட்டுப் போன வட்ட வளையங்கள் அடுக்கடுக்காய்க் குமிந்திருந்தன. வட்டவட்டமாய் இருக்கும் அந்தத் தகர வளையங்களுக்குள் மருந்தடைத்து திரி சொருகி வைத்துவிட்டுப் போன பட்டாசுகள், அவற்றை வளையத்திற்குள்ளிருந்து வெளியே எடுத்து களத்தில் காயப்போட வேண்டும். ஃபோர்மென் சங்கரன் சுற்றிச்சுற்றி வந்தார்.

"டேய், கீழ தட்டாத, தூர்மண்ணு உதிந்திடும். பிதுக்கி எடு, யேல, பிரக்கா சொல்றது காதுல ஏறுதா ஏறலியா?"

பிரக்கன் பரக்கப்பரக்கப் பார்த்தான்.

"ஏணேய், வேல்ச்சாமிண்ணே ஃபோர்மேன் அண்ணாச்சி இன்னக்கி காலாங் காத்தாலயே பிதுக்கச் சொல்றாரு"

எல்லோரும் சிரித்துக் குலுங்கினார்கள்.

கருப்பாயி வாயடங்கிப் போனாள்.

"என்னல, களத்தில ஒரே சிரிப்பாணியும் கும்மாளமும். எல்லாத்தையும் உதுத்து காயப் போடலன்னா இன்னக்கி வேலைக்கு வளையம் தரமாட்டான். தூக்குச் சட்டியத் தூக்கிட்டுப் போயிர வேண்டிதான்" சங்கரனின் அதட்டலை அவர்கள் சட்டை செய்யவில்லை.

மருந்து கலந்து வெற்றுக்குழாய்களுக்குள் அடைத்துக் கொடுக்கும் ஃபோர்மேன் கொலம்பான் அங்கு வந்தான். கருத்த அவன் உடம்பில் ஒட்டியிருந்த அலுமினியப் பவுடர் வெயிலில் மினுமினுத்தது.

"ஆரு வெள்ளக்காரத் தொரையா? என்ன… தொரை… வளையம் குத்த ரெடியா இருக்கா?"

"எப்பவும் நான் ரெடிதான்." மேலோரத்தில் டிப்பிங் என்று சொல்லக்கூடிய, திரிகள் செய்யும் வேலை மும்முரமாய் நடந்து கொண்டிருந்தது. நீளமான நூல்களைக் கருமருந்தும் பசையும் கலந்த வாளிக்குள் ஒரு பொடியன் முக்கி முக்கிக் கொடுக்க அதை இழுத்துக் கொண்டேபோய் நீளவசத்தில் கட்டப்பட்டிருக்கும் கம்புகளில் காயப் போட்டான். அவர்களின் முகமெல்லாம்கூட கருமருந்துகளின் கோடுகள். கோமாளி வேசக்காரனைப்போல.

கம்புகளில்தொங்கும்பசையும்கருமருந்தும் கலந்த நூல்கள் காயக்காய விறைப்பேறித் திரிகளாகும். மெல்லிய வெள்ளைத்தாளுக்குள் வைத்துச் சுருட்டி குரோஸ் போடவேண்டும். வெடியின் சைஸ்களுக்குத் தக்கபடி அளந்து அறுத்து மருந்து தொட்டு வெடிக்குள் சொருக வேண்டும். கழிவுத் திரிகள் ரொம்ப வந்தால் சம்பளம் கட். விறைப்புக் குறைவாக இருந்தால் மூணு குரோஸ் கணக்கு கட்.

"என்ன… உதுத்தாச்சா… எல்லாத்தையும் அள்ளி காயப் போடுங்கள ஏ, மிக்கேலு வெத்து வளையங்களைப் பெரக்கி அங்க போடு. குனிஞ்சு போடு, வீசி எறிஞ்ச சாம்பலாகிருவ."

மெதுவாய் முணங்கிக்கொண்டு மிக்கேலு குனிஞ்சு வெத்து வளையங்களை எடுத்தாள். அவளுடைய இரு கைகளிலும் தோள்வரை வளையங்கள் நிறைந்தன. அவள் சல்சல் என்று தட்டி ஆட்டம் போட்டு நடித்துக்காட்டினாள்.

அண்ணாச்சி எல்லாத்தையும் உதுத்து காயப்போட்டாச்சு

வெத்து வளையங்களையும் பெறக்கிக் குமிச்சாச்சு. குத்துறதுக்கு வளையம் குடுங்க.

11th Advance Tamil - FINAL.indd 64 14-02-2019 17:28:00

பச்சையைக் கண்ட வெள்ளாடுகளாய் மேற்காமல் ஓடினார்கள். கருமருந்துக் கலவை அடைத்த திரி சொருகாத வளையங்கள் அம்பாரமாய்க் குமித்து வைக்கப்பட்டிருந்தன. ஃபோர்மேனின் அதட்டல் கட்டிடங்களில் ஒலித்தது.

யே... செயிண்ட் ஆறாயிரம், பிசிலி நாலாயிரம், கோவா நாலாயிரம், துக்கடா எட்டாயிரம், ஸாடா ஆயிரம் கணக்குப் பண்ணி எடுக்கணும்.

ஆளாளுக்கு நூறு எரநூறு என்று எடுத்து அடுக்கினார்கள். இனி ஒவ்வொரு வளையத்தின் மேலும் காவிகலந்த மண் பூசப்பட்டு, அது உலர்ந்த பின்னால் இரும்பு ஊசியால் குத்தி அந்த மண்ணை டியூப்புக்குள் இறக்கவேண்டும். இந்த இரும்பு ஊசி போடுகிற துவாரத்தின் வழியேதான் திரி சொருக வேண்டும். கட்டியான மருந்தில் திரியின் முனையைத் தொட்டு உள் இறக்கவேண்டும்.

அவர்கள் வட்டமாய் உட்கார்ந்து வளையம் குத்திக்கொண்டிருந்தார்கள். வெயில் ஏறிக்கொண்டிருக்க அவர்களைப் பார்ப்பதற்கு தரையில் சிதறிய தானியங்களைப் பொறுக்கும் கோழிகளைப் போலிருந்தது. அவர்களின் விரல்கள் பம்பரமாய்ச் சுழன்றன. குனிந்த தலை நிமிரவில்லை.

யே... அமுக்கிக்குத்து. காவிமண்ணும் அடிவரைக்கி போகணும். ஏலே ஊசிய திருக்கி எடுல. மண்ணு புடுங்கி பிசிறடிக்கக் கூடாது.

அண்ணாச்சி அவன் புதுப்பையன். சரியா குத்தத்தெரியாது.

குத்தறதுக்குச் சொல்லிக் கொடுக்கணுமாக்கும். ஏய், தங்கமாடத்தி அவனுக்குச் சொல்லிக்குடு. சம்முகவடிவு நிய்யும் கொஞ்சம் கவனிச்சுக்கோ.

குத்திமுடித்த வளையங்களைக் களத்தில்போய்க் காயவைத்துவிட்டு வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

அந்தக் களத்தில் ஆரத்தித் தட்டுகளாய் வளையங்கள் நிறைந்துகொண்டே வந்தன. இடுப்பாற்றிக் கொள்வதற்காக அவர்கள் மாறிமாறி உட்கார்ந்து கொண்டார்கள். எல்லாம் குத்திமுடித்தபின் அவர்கள் திரிக்கட்டுகள் வாங்குவதற்காக ஓடினார்கள். நல்ல விறைப்பான கட்டுகளை எடுப்பதற்காகச் சண்டை போட்டார்கள். திரிசுற்றும் சண்முகையா நல்ல விறைப்பான கட்டுகளைத் தனியே கொண்டுவந்து சரோஜாவிடம் காணாமல் நீட்டினான். சிரித்துக்கொண்டே வாங்கிய அவள், அவன் கன்னத்தில் பசையை இழுகிவிட்டு ஓடினாள். சண்முகையாவிற்கு உச்சி குளிர்ந்தது.

செயிண்ட் என்று சொல்லக்கூடிய சிவப்புக் கலரில் இருக்கும் பெரியவெடி, ஸாடா சிவப்புக்கலர் ஊசிவெடி, பிசிலி, வரிவரியாய்ப் பலகலரில் துக்கடா, சிவப்பாய் இருக்கும் சீனிவெடி இவற்றிற்கான திரிவகைகளைத் தரம்பிரித்தார்கள். இனித் திரிசொருக உட்கார்ந்துவிட்டால் எந்திரிக்கக்கூட மனசு வராது. மத்தியானக் கஞ்சியை முடித்துக்கொள்ள தூக்குவாளிகள் இருக்கும் இடம்தேடிப் போனார்கள். கடனுக்கு வடை விற்கும் வடைக்காரப் பாட்டி பெரிய்ய பெட்டியுன் தயாராய் உட்கார்ந்திருந்தாள். பூந்தோட்டத்துக் கிணற்றில் கால்கை கழுவப்போன பயல்களைத் தோட்டத்துக்காரர் விரட்டிக் கொண்டிருந்தார்.

யே... சின்ன சிறுக்கிவில்லைகளா... போறிகளா கால ஒடிக்கவா, மேல பூரா ஒண்ர கோட்ட கருமருந்த சொமந்துகிட்டுக் கழுவ வந்தீட்டகளாக்கும். நீங்க கைவச்ச எடத்தில ஆடுமாடுகூட தண்ணி குடிக்கமாட்டேங்குது. ஓடுங்கல. ஒங்க தொட்டிக்கு.

கரம்பைக் கட்டியின் எறி பிசகிக்கீழே விழுந்து சிதறியது.

ஒருநாளைக்காவது கருமருந்தக் கலந்து கிணத்துல ஊத்துனாத்தான் இந்த பய வசத்துக்கு வருவான். பிரக்கனின் வசவோடு அவர்கள் வெளியேறி நடந்தார்கள். கைக்கழுவ தண்ணீர் தொட்டியில் இல்லை.

அடர்ந்த வேப்பமரத்தின் குளிர்ச்சியில் வட்டமாய் உட்கார்ந்திருந்தார்கள். மூக்கிலும் முகங்களிலும் கைகளிலும் மின்னும்

அலுமினியப் பவுடர் கலந்த கருமருந்து ஒட்டியிருந்ததை யாரும் சட்டை செய்யவில்லை.

நேத்து என்னல, சினிமாவுக்கு வாரமினுட்டு வரல.

படம் நல்லாருந்ததா?

இந்தால இந்த ஊறுகாயக் கடி. நல்லாருக்கு

கூட்டமான கூட்டம். பெரிய வெக்கக்கேடு. படத்துக்கு வரிசையில நிக்கன், வேர்வை மேலெல்லாம் வடியுது. சுத்தி நிக்கிறவன் அவ்வளவு பேரும் எம்மூஞ்சியவே பாக்கிறான். கருமருந்து கொச்சவாட, மொச்சுமொச்சுன்னு மூக்கைத் தொளைக்குதுண்ணு ஒருத்தன் சொல்லவும் எனக்கு வெக்கமாப் போச்சு. பேசாம அங்ஙனயே நாக்கப் புடுங்கிட்டு செத்துரலாம் போலருந்தது.

என்ன செய்ய. நம்மள நம்ம ஆத்தா அந்த நேரத்துல பெத்துப் போட்ருக்கா. இத விட்டாலும் வேற பொசகலும் கெடயாது. விடிஞ்சா ஆரு வேலக்கி கூப்டுவானு ஒக்காந்திட்லருக்கணும்.

இந்தச் சனியன் பிடிச்ச வீச்சம் நமக்கு ஒண்ணுமே தெரிய மாட்டேங்குது. யாராவது வேத்தாள்ட்ட மொகங்குடுக்க முடியல. அவன் முகத்தச் சுளிக்கிறதப் பாத்து வெக்கமாத்தான் இருக்கு.

அவர்கள் திரிகளைப் பசைகலந்த கட்டி மருந்துக் கிண்ணத்தில் முக்கி டியூப்களில் சொருகிக் கொண்டிருந்தார்கள்.

யேலேய்... திரிய அமுக்கிச் சொருகு. புடுங்கிப் பாப்பான். பொசுக்குனு வந்துச்சு கணக்குல நாலு வளையத்த கொறச்சு எழுதிப்புடுவான்.

சங்கரனின் அதட்டல் இனி ஓயாமல் கேக்கும்.

அந்தச் சின்னச்சின்னக் கட்டிடத்தில் ஒவ்வொன்றிலும் நாலுபக்கமும் வாசல். வாசலுக்குப் பக்கத்திலயே தண்ணீர் தொட்டிகள். அந்த அறைகள் ஒவ்வொன்றிலும் சிறிசும் பெரிசுமாய் தீப்பெட்டிக்குள் குச்சிகளாய் நிறைந்து கிடந்தார்கள். புதுப்பையன் கேட்டான்.

"இந்தச் சின்ன ரூம்புக்கு எதுக்கு நாலுபக்கமும் வாசல்."

"அதுவா இன்ஸ்பட்ரு வர்றன்னைக்குப் பாரு தெரியும்."

அந்த ரூமே அதிர எல்லாரும் பலமாய்ச் சிரித்தார்கள். அவனுக்குச் சிய்யென்றிருந்தது. எதுக்குடா கேட்டோமென்று பேசாமல் உட்கார்ந்திருந்தான். முகத்தைச் சுளித்துக்கொண்டு பிரக்கனைப் பரிதாபமாய்ப் பார்த்தான்.

"இது தெரிஞ்சிருந்தா அவன் ஏழாம் வகுப்பில் பெயிலாகிருப்பானா?"

"இங்க வந்து நம்மளோட கருமருந்தைத் திங்க வருவானா?"

"சீ. சும்மாகிட நாயே, ஒனக்கு அனையம் தெரியுமோ. நிய் படிச்சுக் கிழிச்சிறக்கூடாது. எதுக்கு இங்க வந்த."

பிரக்கனின் அதட்டலில் பச்சை டவுசர் வாயடங்கிப் போனான்.

இந்தவொரு சின்ன ரூமுக்குள்ள நாலுபேருதான்ஒக்காந்துவேலபாக்கணும்.அந்த நாலுபேரும் ஒரே எடத்துல ஒக்காரக்கூடாது. ஒவ்வொரு வாசல் பக்கத்திலேயும் தனித்தனியா இருந்துதான் வேல பாக்கணும். ஒரு வளையம் சொருகி முடிச்சாச்னா ஒடனே களத்துல கொண்டுபோயி வச்சிரணும். திரி சொருகுன வளையம் ரூமுக்குள்ள கண்டிப்பா இருக்கக் கூடாது. களத்துல போயி வளையத்தை வச்சிட்டு அல்லது வெளியே போயிட்டு ரூமுக்குள்ள யாருவந்தாலும் வாசல் ஓரத்ல இருக்கிற தண்ணித் தொட்டியில கால முக்கிக் கழுவிட்டுத்தான் உள்ள வரணும்.

"இல்லாட்டா? "

"இல்லாட்டா ஒங் கால்ல ஒட்டியிருக்கிற மண்ணு இந்த சிமிண்டுத் தரையில ஒரசி, ஒட்டியிருக்கிற கருமருந்துல தீப்புடிச்சு

11th Advance Tamil - FINAL.indd 66 14-02-2019 17:28:00

வளையமெல்லாம் வெந்து நீயும் கருகிப்போவ, நானும் கருகிப் போவன். சங்கிலிப்பயல் வெந்து மகிந்து கருகிக் கிடந்தாப்ல."

புதுப்பையன் மிரள மிரளப் பார்த்தான். எல்லோரும் ஏளனமாகச் சிரித்தார்கள். ஒரு வாசல் மட்டுமே லேசாய்த் திறந்திருக்க மூன்று வாசல்களும் பூட்டியிருந்தன. தண்ணித் தொட்டி வரண்டு அசிங்கங்கள் நிரம்பிக் கிடந்தன. தண்ணீரைக் காணோம். சுவரில் தொங்கிய நான்குபேர் மட்டும் என்ற போர்டில் கருமருந்தால் நாலுக்குப் பக்கத்தில் சைபரைப்போட்டு நாற்பதுபேர் மட்டும் என்று எவனோ கிறுக்கியிருந்தான்.

திரிசொருகிய வளையங்கள் களத்தில் நிறைந்து கொண்டே வந்தன. பார்ப்பதற்குக் கரிசலில்தரையைக்கீறிக்கொண்டுதலைநீட்டும் முளை விதைகளைப் போல் இருந்தது.

வாசலில் வந்துநின்ற ஒரு சின்னப்பையன் சரோஜாவிடம் ஒரு பொட்டலத்தைக் கொடுத்தான். மடிப்பை நீக்கியதும் அதில் நான்கு சுசியங்களும் வடைகளும் இருந்ததைப் பார்த்தாள்.

ஆரு குடுத்தா?

சம்முயாண்ணங் குடுத்து ஒங்கிட்ட குடுக்கச் சொல்லுச்சு.

ஆரு திரி சுத்துற சம்மியாவா?

பயல் தலையாட்டிவிட்டு வேகமாய் ஓடினான்.

ஏலேய் வேலுச்சாமி... சரோஜாவுக்கு நல்ல திரி எப்டி வந்ததுன்னு தெரிஞ்சு போச்சா.

அவள் வெட்கத்துடன் மடியில் வைத்தாள்.

யேய்... ஒத்த வளையத்துக்குமேல உள்ள இருக்கக்கூடாது. பாத்துட்டன் பெறவு கணக்குல கொறச்சிருவன். எம்மேல சடைக்கப்படாது. சொருகி முடிச்ச வளையமெல்லாம் ஒடனே களத்துக்குப் போயிரணும்.

சங்கரனின் அதட்டலைக் கேட்டதும் வளையங்களைத் தூக்கிக் கொண்டு எல்லா ரூமிலிருந்தும் பையன்கள் களத்திற்கு ஓடினார்கள்.

யக்கா ரெண்டு வளையங் கெடக்கு... திரி காணல. ஃபோர்மேன்ட்ட கேட்டா கூப்பாடு

போடுவாரு. கொஞ்சம் திரி குடுக்கா. அடுத்த ரூம் தங்கராசு வாயெல்லாம் பல்லாக நின்றான்.

எனக்கு ஒரு வளையம் சொருகிக் குடுத்துட்டு திரி வாங்கிட்டுப்போ.

யக்கா குடுக்கா.

அப்ப அந்த ரெண்டு வளையத்தையும் எடுத்துக்கிட்டு இங்க வா. திரி தரேன். ஃபோர்மேன் பார்த்தா கூப்பாடு போடுவாருக்கா.

நிய் சும்மா பயப்படாம வா.

தங்கராசும் சரோஜாவும் எதுத்து எதுத்து உட்கார்ந்து கொண்டார்கள். தங்கராசு ஒன்பதாம் வகுப்பைப் பாதியில் நிறுத்திவிட்டுத் தன் தம்பியுடன் சேர்ந்து வேலை செய்கிறவன். வயதுக்கு மீறின உயரம். களையான குழந்தை முகம்.

ஒங்க அக்காள பொண்ணு கேட்டு வந்தாகள என்னாச்சு?

அந்தக் கூத்த ஏங் கேக்க. போன மாசம் உருளக்குடியிலிருந்து ஒரு மாப்ள வந்தான். பையனும் நல்ல பையன். பெருங்கொண்ட சம்சாரி. வீட்ல ஒரே பையனாம். காட்டுவேல செய்யுமான்னு கேட்டாக. நாலு ஆளக் கூட்டிக்கிட்டு தனது வேலைக்காவது போகணுமின்னு சொன்னாக. அக்கா ஒரேயடியா தலையக் குலுக்கிட்டா.

அவமேலயும் குத்தமில்ல.சம்சாரிவீட்டுக்கு வாக்கப்பட்டுப் போனா காட்டு வேல செஞ்சுதான் ஆகணும். வெயில்ல நின்னுதான் சாகணும். இந்தத் தீப்பெட்டி ஆபிஸ், வேட்டாவிஸ்ல வேல செஞ்சு சொகங்கண்டுட்டா ஒரு சிறுக்கி கூட வெயில்ல நிக்கமாட்டா. இப்ப வேற எங்கயும் போகவேண்டாம். என்னயப்போயி வெயில்ல நில்லுன்னா நிக்க முடியுமா? கறி எளகும்.

முந்தா நாளும் ஒரு மாப்ள வந்துச்சு.

எந்தூர்லருந்து வந்துச்சு

வரதம்பட்டி. அம்மா வழில கொஞ்சம் சொந்தம். மாப்ள கவுருமெண்ட் வேல பாக்காராம். சூட்டு கீட்டு போட்டு ரொம்ப போடுசா இருந்தாரு.

அப்ப எப்பக் கலியாணம் வச்சிருக்கிக?

எப்பக் கலியாணமா? பொண்ணு புடுச்சுப்போச்சு. எத்தன வரைக்கும் படிச்சிருக்குணு கேட்டாரு. படிக்கலண்ணு சொன்னதுதான். பச்சத்தண்ணிகூட குடிக்கல. நடையக் கட்டிட்டாரு.

வர்ற பயலுக்குப் பூராவும் பொண்ணு புடிக்கும். டீச்சரம்மா மாதிரி இருக்கா. படிச்ச மாப்ள வந்தா பொண்ணு படிச்சிருக்கான்னு கேக்கான். பட்டிக்காட்லருந்து சம்சாரி மாப்ள வந்தா காட்டு வேல செய்யுமான்னு கேக்கான். அங்கிட்டும் இல்லாம இங்கிட்டும் இல்லாம ரெண்டுங் கெட்டான் பொழப்பு, சோடனதான் பெரிய சோடனை. ஒவ்வொருத்தியும் சிமிட்டிட்டு அலையறதப் பாத்தா சினிமா நடிகை தோத்துப்போவா.

சொல்லிவிட்டு சரோஜா சலித்துக் கொண்டாள். சொருகிய வளையங்களைக் காலால் நகட்டிவிட்டு இடுப்பாற்றினாள்.

இங்கயே எவனாவது கெட்னா வெயில் படாம வேல பாக்கலாம். சாகும்மட்டும் ரெண்டுபேரும் கருமருந்தத் தின்னிட்டு சாகவேண்டிதான். நம்ம மிச்சம் வச்சிட்டுப் போற மருந்தத்திங்க நம்ம புள்ளைக வரும்.

வேலையை முடித்தவர்கள் வளையங்களை அடுக்கி வைத்துவிட்டு உப்புச் சோப்பு வாங்க ஓடிப்போய் வரிசையில் நின்றார்கள். தினமும் வேலை முடிந்ததும் துணிகளுக்குப் போடுகின்ற உப்புச்சோப்பு ஒரு துண்டு கிடைக்கும். அதைத் தேய்த்துக் குளித்தால்தான் மேல்பூராவும் ஒட்டியிருக்கின்ற அலுமினியப்பவுடர், சல்பர், கருமருந்து வாடை குறையும். அவர்கள் வரிசையில் இடம்பிடிக்கச் சண்டை போட்டார்கள். அதிலேயே சோப்பு வாங்கியவர்கள் தூக்குவாளியைத் தூக்கிக் கொண்டும் சட்டைதுணிமணிகளைக் கையில் பிடித்துக்கொண்டும் குறிஞ்சாக்குளம்

11th Advance Tamil - FINAL.indd 68 14-02-2019 17:28:00

கண்மாய்க்கு ஓடினார்கள். போனவருடம் இதே மாதிரிதான் வரிசையில் நின்றான் செல்லையா பயல். துடுக்கான பயல். எடுத்தெறிந்து பேசுவதில் படுகில்லாடி. அவன்முறை வந்ததும் சொன்னான்.

சோப்பு முழுக்கட்டி கொடுக்கலாமில்ல. அரைக்கட்டி கைகழுவ மட்டும்தான் சரியாப்போகுது. விடிஞ்சு பாத்தா குளிச்ச ஒடம்பு மினுங்குது. அலுமினியப் பவுடர் போக மாட்டேங்கது.

சொல்லி வாய்மூடவில்லை. அவன் கன்னத்தில் பெரிய கணக்குப்பிள்ளையின் ஐந்து விரல்களும் தடம்பதித்திருந்தன.

ஓஞ்சோலியப் பாருடா நாயி, முழுக்கட்டி, அரைக்கட்டி – ஒனக்கு சோப்பும் கெடையாது. நிய் நாளையிலிருந்து வேலைக்கு வரவேண்டாம்.

சம்பளத்தக் கணக்குப் பாத்துக் கையில குடுங்க. இந்த மடம் இல்லாட்டி சந்தமடம்.

நாளைக்கு ங்கொப்பனக் கூட்டிட்டுவந்து வாங்கிட்டுப்போ

வேல செஞ்சது நானு. எங்கப்பனில்ல.

செல்லையாப் பயல் இப்போது கம்பி எண்ணுகிறான். தட்டப்பாறை மைனர் ஜெயிலில். கம்பெனியிலிருந்து குளோரேட் மூடையைக் களவாண்டு விட்டதாகக் குற்றம். அவன் தங்கச்சி இப்போது வேறு கம்பெனிக்கு நடக்கிறாள். அவள் இப்போது மருந்து களவாணி செல்லையாவின் தங்கச்சியாக மாறிப்போய் விட்டாள்.

பிள்ளைகளை ஏற்றிப்போகும் கம்பெனி பஸ் வாசலில் வந்து நின்றது. அதன் கண்ணாடியில் பட்டவெயில் மஞ்சளாய் மின்னியது. குளித்தும் குளியாமலும் வந்த சிறுவர்களும் சிறுமிகளும் இடம்பிடிக்கச் சண்டை போட்டார்கள். ஆலமரத்தில் அடையும் குருவிகளைப்போல ஒரே சலசலப்பு. பஸ்ஸின் ஹாரன் பலமாய் ஒலித்தது.

புறப்படத் தயாராய் நின்ற பஸ்ஸை நோக்கி கையைக் காட்டியபடியே ஃபோர்மேன் சங்கரன் வேகமாய் ஓடிவந்தார். ஜன்னல்களின் வழியே எல்லாப் பிள்ளைகளும் எட்டிப்பார்த்தார்கள். உறுமிய பஸ் அமைதியானது.

குடோன்லருந்து சின்ன மொதலாளி இப்பத்தான் போன் பண்ணினாரு. பத்தாயிரம் பாக்கெட் அவசரமா வேணுமாம். நாளைக்கிக் காலைல லோடு ஏத்தியாகணுமாம். எக்ஸ்போர்ட் முடிச்சிட்டுப் போங்க ரொக்கக் காசு.

ரொக்கக் காசென்றால் வாரக்கடேசியில் வாங்கும் சம்பளக் கணக்கோடு சேராது. வேலை முடிந்ததும் உடனே கைக்கு வந்துவிடும். ஊர் போவதற்காக பஸ் சார்ஜ் கொடுக்கப்படுவதோடு டீ, காபி, பன், சேவு, பக்கடா, மிக்சர் ஓசியில் கிடைக்கும். கொஞ்சம்பேர் இறங்கிக்கொள்ள பஸ் புறப்பட்டுப்போனது.

அவர்கள் பாக்கெட் ரூமிற்குள் வட்டமாய் உட்கார்ந்தபோது ஒளித்து வைத்திருந்த பெட்ரோமாக்ஸ் லைட்டுகள் பொருத்தப்பட்டன. பல கலர்களில் அம்பாரமாய்க் குமித்து வைக்கப்பட்டிருந்த வெடிகளைச் சுற்றிலும் உட்கார்ந்து எண்ணிஎண்ணிப் பாக்கெட் போடத் தொடங்கினார்கள்.

அண்ணாச்சி மொதலாளிட்டச் சொல்லி ஒரு டியூப்லைட் போடச் சொல்லலாமில்ல. நல்ல வெளிச்சம் தெரியுமில்ல.

சும்மா வாய வச்சுகிட்டு இருடா. மேனேஜர் ரூமுக்கே கரண்ட் கிடையாது. சாயங்காலம் நாலு மணிக்குமேல வாட்ச்மேன் தவிர வேற ஆளே இருக்கக்கூடாதுங்கறாரு இன்ஸ்பெக்டரு.

யேய்... மிக்கேலு, தங்கமாடத்தி உள்ள தள்ளி உக்காருங்க. கதவப்பூராவும் சாத்திருவம். வெளிச்சம் தெரிஞ்சு வேண்டாதபய எவனாவது போன் பண்ணிட்டாப் போச்சு. ஜீப்புக்காரன் வந்தா பூட்டி சீல்வச்சுப்புடுவான். அன்னிக்கி அன்னிக்கே குடோனுக்குப் போயாகணும். இங்க என்னடான்னா லாரிவாடகை குடுக்க

11th Advance Tamil - FINAL.indd 69 14-02-2019 17:28:01

வருத்தப்பட்டுப் பத்துநாள் வெடியும் குமிஞ்சுகிடக்கு. இது ஒரே வாடகையாப் போகுது. இங்கருந்து குடோனுக்குப் போற வாடக மிச்சம். புடுச்சிக்கிட்டா அம்புட்டுதான்.

எண்ணி அடைத்துப் பைகளை மடித்து, பின் அடித்து மடித்த பைகள் வரவர சங்கரன் கேஸ்பெட்டிக்குள் எண்ணிஎண்ணி அடுக்கிக் கொண்டே இருந்தார். அவர் மனசு சந்தோசத்தில் கனத்தது.

அண்ணாச்சி, பின்னு தீர்ந்துபோச்சு. வேற பாக்கெட் ஒடங்க.

எண்ணிமட்டும் வையுங்க. புதுப்பாக்கெட்டு ஒடச்சுக் கொண்டாரன்.

போனவேகத்தில் திரும்பி வந்தவரின் கையில் பின்னுப் பாக்கெட்டைக் காணோம். பதிலுக்கு நாலைந்து மெழுகுவத்திகள் இருந்தன.

பாக்கெட் தீர்ந்து போச்சு. ஸ்டோர்லயும் வேற ஸ்டாக் இல்ல. இதப்பொருத்தி தூர வச்சுகிட்டு பைய்ய நல்லா மடக்கி, ஒரு குலுக்குக் குலுக்கி லேசா வாட்டிட்டா பிளாஸ்டிக் இளவி ஒட்டிக்கிரும். இனி ஆயிரம் பாக்கெட் தான் வேணும். வெடிகள நல்லாக் குலுக்கிக்கோங்க. திரி வெளில நீட்டிட்டிருந்தாப் போச்சு.

கேஸ்பெட்டிகளின்மேல் பெயிண்டால் எழுதுகிறவன் வேகமாய் வந்தான். டப்பென்ற சத்தத்தைத் தொடர்ந்து டப்டப்டப் என்ற பெரிய சத்தம். புகைமூட்டத்தில் பூட்டிய கதவுகளைத் திறக்க முடியவில்லை. வெடிகள் வெடித்த சத்தத்தில் அலறல்களும் கூப்பாடுகளும் குறைந்து முனங்கல்கள் ஆயின.

வெந்து கருகி நீத்துப்போன பல உயிர்கள். விடிந்தபோது வெடிகளோடு வெடிகளாய் எட்டுக் குழந்தை வெடிகள். ஆறு பெரிய வெடிகள். மூன்று கிழட்டு வெடிகள் வெடித்துச் சிதைந்து கருகியிருந்தன. ஐந்து பொம்பிளை வெடிகளைப் பிரித்தறிய அடையாளங்கள் ஏதுமில்லை. கருகிய கட்டைகள் அவைகள்.

படைப்பு முகம்

சோ.தர்மன் (சோ.தர்மராஜ் – 1952): கரிசல் மண்ணின் வேளாண் வாழ்வியலை எழுதும் இவரது படைப்புகளில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான குரல் கூரான அங்கதத்துடன் வெளிப்படுகிறது. நகைச்சுவை உணர்வும் இயல்பான சூழல் சித்திரிப்பும் இவரது தனித்துவம். தூர்வை, கூகை, சூல் ஆகிய நாவல்களும் ஈரம், சோகவனம், வனகுமரன் ஆகிய சிறுகதைத் தொகுப்புகளும் இவரது முக்கியமான படைப்புகள்.

படிப்போம் பகிர்வோம்

1. நசுக்கம் கதை உணர்த்தும் பட்டாசுத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையைத் தொகுத்து எழுதுக.
2. உங்கள் ஊரில் தொழில் சார்ந்து பாதிப்புக்குள்ளாகும் மக்களின் சிக்கல்களை ஆராய்க.
3. தொழிலகங்களில் கடைபிடிக்கவேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் என்னென்ன என்பதை அறிந்து எழுதுக.
4. 'நசுக்கம்' போன்றே சிறுகதை எழுதுவதற்கான, சிக்கல் நிறைந்த களம் இன்று இல்லை? – இக்கூற்றை உடன்பட்டோ மறுத்தோ உங்கள் கருத்தை எழுதுக.
5. 'நசுக்கம்' கதையின் முடிவை நீ விரும்பும் வகையில் மாற்றி எழுதுக.
6. வட்டார வழக்கில் உரையாடல்களைக் கொண்டது 'நசுக்கம்' சிறுகதை என்பதற்கு ஐந்து சான்றுகள் தந்து கருத்துரை தருக.

11th Advance Tamil - FINAL.indd 70 14-02-2019 17:28:01

அயலகத் தமிழ் எழுத்தாளர் சிறுகதை

'பேபி' குட்டி

–கே. பாலமுருகன், மலேசியா

பெரிய மாமா வந்ததும் அதுவரை வீடு கனத்த துயரத்தைக் கெட்டியாகப் பிடித்து வைத்திருந்து திடீரென்று தளரவிட்டதைப் போல உடைந்தது. அப்பா கதறி அழும்போது உடன் யாராலும் அழாமல் இருக்க முடியவில்லை. இதுவரை எதற்குமே சட்டெனஅழாத ஒருவர். அப்படி அழுது கதறும்போது உடல் சிறுத்துக் குழந்தையாகி எல்லோரின் மடியிலும் விழுகிறார்.

மாணிக்கம் பக்கத்து வீட்டுக்காரர். அப்பாவிற்கு நெருக்கமான ஒரே ஆள் அவர்தான். அப்பாவிற்குச் சொல்லும்படியாக நண்பர்கள் அவ்வளவாக இல்லை. அடுத்தவீட்டில் யார் இருக்கிறார்கள் என்பதுகூட அப்பாவிற்குத் தெரியாது.

இரண்டு வயது குழந்தையின் மரணம் யாரையும் சமாதானப்படுத்தக் கூடியதல்ல. வருவோர் போவோர் அனைவரும் புலம்பியபடியே இருந்தனர். ஆகக் கடைசியாக ஒரு புலம்பலையே விட்டுப் போய்க்கொண்டிருந்தனர். வீட்டில் அவன் கடைசிப் பையன். அப்பா எப்படிப் பாட்டிக்குத் தாமதமாகப் பிறந்த கடைசிப் பையனோ, அதேபோலத் தம்பியும் அப்படித் தான். பின்கட்டிலிருந்து முன்வாசலுக்கு ஓடிவரும் சிறிய இடைவெளியில் சட்டென முடிந்து விட்ட வாழ்க்கை.

"சாக வேண்டிய வயசாடா இது...? என்ன விட்டுட்டுப் போய்ட்டியேடா," என அப்பா மீண்டும் தரையை ஓங்கியடித்தபடியே அழுதார்.

பேபி குட்டி தலைவிரித்த கோலமாய் அப்பொழுதுதான் வெளியில் வந்தாள். சிரிப்பே இல்லாத பொக்கை வாய். கண்கள் இரண்டும் உள்ளே சொருகிக் கிடந்தன. பேசுவதை உடனே புரிந்துகொள்ள முடியாது. ஒரு சொல்லை உச்சரிக்கவே நிதானமாக அடுக்குவாள். அவளுடன் உரையாடப் பொறுமை தேவைப்படும். ஆனால், ஓயாமல் வேலை செய்துகொண்டே இருப்பாள். அப்பாவின் அம்மா.

மெலிந்துபோன தேகம். அதன் மேலே எப்பொழுதும் தொங்கும் ஒரு கலர் துண்டு. வெளுத்தக் கைலி. தாடைவரை நீண்டு தொங்கும் காதுகள். ஆனால், தூரத்திலிருந்து வருபவர்களையும் பேசுபவர்களையும் அவளால் உன்னிப்பாகக் கேட்கவும் பார்க்கவும் முடியும். அவள் யாரையும் பொருட்படுத்தியதே இல்லை.

"அடியே பேபி குட்டி... உன் பேரனப் பாத்தியா?" என அவள் வயதை ஒத்த மூக்குத்திக் கிழவி தூரத்திலிருந்து அரற்றிக் கொண்டே ஓடிவந்தாள்.

பேபி குட்டி வீட்டுக்கு வெளியில் வந்து ஓரமாய் வைக்கப்பட்ட துடைப்பைக் கட்டையை எடுத்து வாசலைப் பெருக்கத் தொடங்கினாள். அது பேபி குட்டியின் அன்றாட வேலை. எந்தச் சலனமும் இல்லாமல் ஏற்கனவே சுத்தமாக இருந்த வாசலைப் பெருக்கினாள். அவளுடைய வேலைகளை யாருக்கும் விட்டுக்கொடுக்க முடிந்ததில்லை.

"இந்தக் கெழவிக்கு எத்தன வயசாகுது... போய்ச் சேர வேண்டியதெல்லாம் நல்ல திடக்காத்தரமா இருக்கு...கடவுளுக்கு என்ன கேடு? இந்தச் சின்ன பையனைக் கொண்டு போய்ட்டாரு..." வந்தவர்களில் யாரோ சொன்னது அங்கிருந்தவர்களின் மௌனத்தைக் கலைத்தது.

11th Advance Tamil - FINAL.indd 71 14-02-2019 17:28:01

அவர்களில் சிலர் இப்பொழுது பேபி குட்டியை வைத்த கண் வாங்காமல் கவனித்தனர். ஒரு சிறு கவனம் திரும்புதல் அது. மரணத்திலிருந்து வாழ்வுக்குத் திரும்பும் கணம். அதுவரை சோகமாக இருந்தவர்களும் இப்பொழுது நிமிர்ந்து உட்கார்ந்தனர்.

"பாரேன்...இந்த வயசுலையும் இந்தக் கெழவினாலெ நல்லா ஆரோக்கியமா இருக்க முடியுது..."

"ஆமாம்....கிழவிக்குத் தொண்ணூறுக்கு மேல தாண்டிருச்சி..."

பேபி குட்டி பெருக்குவதை நிறுத்திவிட்டு அங்கே இருந்த நாற்காலிகளை அடுக்கத் தொடங்கினாள். ஒவ்வொரு நாற்காலியையும் அவளால் இயல்பாகத் தூக்கி நகர்த்த முடிந்தது. உடலில் இருந்த முதுமை செயலில் குறைவாகத் தென்பட்டது.

"பாட்டி! அங்க போய் உக்காரு... ஏன் தேவையில்லாத வேல செஞ்சிகிட்டு இருக்க?" பெரியசாமிக்கு உதவியாக வந்தவர் கத்தினார்.

பேபி குட்டி அதனைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. எவ்வளவு சொற்களைக் கோத்துத் திரட்டி பேபி குட்டி காதில் திணித்தாலும் அது அவளுடைய மூளைக்குப் போய்ச் சேராது. அவளுடைய உலகத்தில் இயங்கிக் கொண்டே இருப்பாள். ஏற்கெனவே அடுக்கப்பட்டிருந்த நாற்காலிகளைத் தூக்கிக் கொண்டு போய் வேறு இடத்தில் அத்தனை பொறுப்புடன் அடுக்கத் தொடங்கினாள்.

பேபி குட்டியின் உண்மையான பெயர் குட்டியம்மாள். ஆனால், அப்பொழுதெல்லாம் பெண் குழந்தை பிறந்தால் பேபி என்றும் ஆண் குழந்தை பிறந்தால் 'போய்' என்றும் அடைப்பெயரிட்டு அழைப்பார்கள். அப்படியே அழைத்து அழைத்துத்தான் குட்டியம்மாள் பேபி குட்டியானாள்.

சுந்தரி அத்தை வந்து சேர்ந்த பிறகு வீடு மீண்டும் அலறத் தொடங்கியது. தம்பியை எட்டு மாதங்கள் வளர்த்தவள் அவள்தான். தேம்பித்தேம்பி அழுததில் திடீரென மூர்ச்சையுற்று விழுந்தாள். சிறிதுநேரம் எல்லோரும் பதறிப் போயினர். தண்ணீரை முகத்தில் அடித்து அவளை ஓரமாக உட்கார வைத்தார்கள். முகம் தொங்கிப் போய்க் கிடந்தது.

"யப்பா சொந்தக்காரனுங்க எல்லாம் வந்து எண்ணெய் வைக்கலாம்," எனப் பெரியசாமி சொன்னதும் படுத்திருந்த அத்தை உடனே விழித்தெழுந்து தம்பியின் பெட்டியருகே ஓடினாள்.

அவள் அச்சமயம் ஓடும்போது ஓர் ஆணாக மாறியிருந்தாள். மார்பில் அடித்துக் கொண்டே ஓடினாள். அவள் அப்படிச் செய்பவள் அல்ல. வீட்டில் மகன்கள் இருந்தாலே சத்தமாகப் பேசவோ யாரையும் கத்தி அழைக்கவோ விரும்பாதவள்.

"மகேனு மகேனு ஐயாவு வந்துருடா... அம்மாவெ விட்டுப் போவாதடா," எனப் பெட்டியின் வலப்பக்கத்தில் சரிந்தாள்.

அதுவரை நாற்காலியை அடுக்கிக் கொண்டிருந்த பேபி குட்டிக்கு அத்தையின் அலறல் கேட்டது. அத்தை பேபி குட்டிக்குச் செல்லமகள். பாசமாக வளர்ந்தவள். ஆனால், ஒரு காலக்கட்டத்திற்குப் பிறகு பேபி குட்டியை அவள் அவ்வளவாகக் கண்டு கொள்ளவில்லை. அவ்வப்போது கடமைக்குக் கொஞ்சம் பணம் தருவாள். எப்பொழுதாவது பார்த்துவிட்டுப் போவாள். அதுவும் பேச்சில் கடுப்பு மட்டுமே மிஞ்சும்.

பேபி குட்டி தட்டுத் தடுமாறி அத்தையிடம் போனாள். அவள் பெட்டியைக்கூட கவனிக்கவில்லை. அமர்ந்திருப்பவர்களையும் தரையையும் தட்டித் தடவி அத்தையின் அருகே போய்விட்டாள். மெதுவாக அத்தையின் அருகில் அமர்ந்துகொண்டு அவளுடைய தலையை வருடினாள். விழியோரம் இலேசாகக் கண்ணீர் முட்டிக்கொண்டு கிடந்தது.

"சின்னப்பையன்... இன்னும் உலகத்தையே பாக்காதவன்," எனப் பேபி குட்டியின் பிடியிலிருந்து தன்னை விடுவிக்க முயற்சித்த அத்தை மீண்டும் கதறி அழுதாள். பேபி குட்டி அத்தையின் கையை விடமறுத்தாள்; கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அதில் ஒரு முரட்டுத்தனம் தெரிந்தது.

11th Advance Tamil - FINAL.indd 72 14-02-2019 17:28:01



"கையெ விடும்மா..." அழுகையினூடாக அத்தை பேபி குட்டியின் கைகளை உதறித் தள்ளினாள். பேபி குட்டி சற்றுத் தடுமாறி கைகளை அத்தையிடமிருந்து எடுத்தாள்.

"குமாரு கெழவியெ கூட்டிட்டுப் போ."

குமார் தம்பிக்கு மூத்தவன். பேபி குட்டியைப் பிடித்து மேலே தூக்கினான். அவள் வர மறுத்தவள்போல முரண்டு பிடித்தாள்.

"பாட்டி ஏஞ்சி வாங்க," எனப் பதிலுக்கு அவனும் பலமாக இழுத்தான்.

பேபி குட்டி இருபத்து ஐந்து கிலோகூட இருக்கமாட்டாள். ஏதோ முனங்கியவாறு அவனுடைய இழுப்புக்குப் போனாள். குழந்தைகளின் மரணம் அத்தனை இயல்பானது அல்ல. ஒரு குழந்தையின் மரணத்திற்குமுன் அனைத்து மனங்களும் குழந்தையாகி விடுகின்றன. தம்பி இப்பொழுதுதான் பெட்டிக்குள் ஒளிந்துகொள்ளச் சென்றதைப்போலப் படுத்திருந்தான். அது விளையாட்டு. இன்னும் சிறிதுநேரத்தில் அது முடிந்துவிடும் என அனைவரின் மனங்களும் படபடத்துக் கொண்டிருந்தன.

"டேய் வீட்டு நிம்மதியையே கொண்டு போய்ட்டான்டா," என மீண்டும் அத்தை புலம்பினாள். அவள் குரல் சோர்வுற்றிருந்தது.

தம்பி ஒரேயொரு சிரிப்பில் அனைத்து இறுக்கங்களையும் உடைப்பவன். நம் வேலைகளையும் விட்டுவிட்டு உடனே கவனிக்கக்கூடிய அலட்டலே இல்லாத மெல்லிய சிரிப்பு. குழிவிழும் கன்னங்கள். பிஞ்சுக் கைகள்.

பேபி குட்டிக்கும் அவனுக்கும் நடக்கும் சண்டைதான் வீட்டிலேயே பிரபலமானவை. வீடுமுழுக்க அவனைத் துரத்திக் கொண்டு பேபி குட்டி ஓயாமல் ஓடுவாள். அவளிடமிருந்து ஒளிந்து கொள்வதே தம்பியின் பெரிய தந்திரமாக இருக்கும். பேபி குட்டி கொஞ்சநேரம் உறங்கிவிட்டாலும் அவளின் பொக்கை வாயில் எதையாவது செருகி விடுவான். அவள் திடுதிப்பென்று எழுந்து பார்ப்பாள்.

"நீ என்னிக்காவது என்னைக் கொன்னுருவடா!" என அதையும் முழுமையாக உச்சரிக்க முடியாமல் பேபி குட்டியின் வாய்க்குள்ளேயே கரைந்துவிடும்.

11th Advance Tamil - FINAL.indd 73 14-02-2019 17:28:01

பேபி குட்டியைக் குமார் வீட்டின் ஓர் ஓரத்தில் உட்கார வைத்துவிட்டு மீண்டும் வாசலுக்கு வந்தான். பெட்டியை வாசலில் கிடத்தி யிருந்தார்கள். பிண ஊர்தி வந்ததும் வீடு மீண்டும் பரபரப்பானது. அவ்வளவாகப் பழக்கமில்லாத தூரத்து நண்பர்களும் சொந்த வீட்டின் சோகத்தைப்போல உணர்ந்தனர்.

பேபி குட்டி அவ்விடத்தை விட்டு மீண்டும் வாசலுக்கு வந்தாள். ஆங்காங்கே சிதறிக் கிடந்த சப்பாத்துகளை எடுத்து அடுக்கத் தொடங்கினாள். ஒவ்வொரு சப்பாத்தையும் குனிந்து எடுத்து அடுக்குவதைச் சிலர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"அந்தக் கெழவியெ இழுத்துட்டுப் போய்க் கட்டி வச்சாத்தான் என்ன?" துரைசாமி அப்படிச் சொல்வார் என யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

துரைசாமி அப்பாவின் முதலாளி. இந்த வீட்டில் அதிகம் உரிமையுள்ள மனிதர். எல்லா விழாக்காலங்களிலும் இந்த வீட்டில்தான் இருப்பார். ஒரு முக்கியமான விருந்தாளி என்றே சொல்லலாம். ஒரு வருடத்தில் கைவிட்டு எண்ணக்கூடிய அனைத்துப் பண்டிகைகளின்போதும் தவறாமல் வந்து தன் உறவைப் புதுப்பித்துவிட்டுப் போய்விடுவார். அவருக்கு ஐம்பது வயது இருக்கும். எல்லோரும் அவருக்குக் கொஞ்சம் அடங்கிப் போவர்.

"டேய் குமாரு பாட்டியெ இழுத்துட்டுப் போய் வீட்டுக்குள்ள உடு... சாக வேண்டிய வயசுலே... உசுரை வாங்குது..." என அவர் சொன்னதும் உடனே குமார் எழுந்து நின்றான்.

எல்லோரும் பேபி குட்டியை அசூயையாகப் பார்த்தனர். குமார் மீண்டும் பேபி குட்டியின் கையைப்பிடித்து இழுத்துக் கொண்டு போனான். பேபி குட்டிக்கு வீட்டில் ஒரு மூலை உண்டு. சாமி அறைக்குப் பக்கத்தில் இருக்கும் சிறிய இடைவெளி. எல்லா வேலைகளும் முடிந்த பிறகு அவள் அங்குத்தான் இருப்பாள். வெறுமனே கவனித்துக் கொண்டிருப்பாள். எதுவுமே இல்லாத ஒன்றை அவள் கவனித்துக் கொண்டே இருப்பாள். அவளால் வெகுநேரம் ஓர் இடத்தில் அமரவும் முடியாது.

"பாட்டி இங்கையே இருங்க... போற வரைக்கும் வந்திடாதீங்க, ஒரே தொல்லையா இருக்கு," என அதட்டிவிட்டுக் குமார் வாசலுக்குப் போனான்.

எல்லாச் சடங்கும் முடிந்த பிறகு பெட்டியைத் தூக்கினர். கனத்த மனங்களால் அதைப் பார்க்க இயலவில்லை. எல்லோரும் வாய்விட்டு அழுதனர். அப்பா சாலையிலேயே படுத்துப் புரண்டார்.

வீட்டில் இருந்தவர்கள் எல்லோரும் வெளியில் போனதுடன் பேபி குட்டி எழுந்தாள். மெதுவாக நடந்து சென்று நாற்காலிக்குப் பின்னால் ஒளிந்தாள். பிறகு எழுந்துபோய் அறைக்கதவிற்குப் பின்னால் ஒளிந்தாள். அவள் வழக்கம்போல வீட்டுக்குள் தம்பியைத் துரத்துவதைப்போல ஓடத் தொடங்கினாள்.

படைப்பு முகம்

கே. பாலமுருகன் (1982): மலேசியத் தமிழ் எழுத்தாளர். தற்கால சமூக வாழ்க்கைச் சூழல்களைப் புதிய உத்திகளில் சொல்லி வருபவர். மலேசியத் தமிழிலக்கியச் சூழலில் சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் மூலம் நன்கு அறியப்பட்டவர்.

படிப்போம் பகிர்வோம்

1. 'பேபிகுட்டி' கதை வெளிப்படுத்தும் உறவு நிலை உணர்வுகளைத் தொகுத்தெழுதுக.
2. இன்றைய சூழலில் முதியோரின் நிலை பற்றிய உன் மதிப்பீடு யாது?
3. 'பேபிகுட்டி' கதையில் அமைந்துள்ள மொழிநடை முறைக்குச் சான்று தந்து விளக்குக.

11th Advance Tamil - FINAL.indd 74 14-02-2019 17:28:01

அயலகச் சிறுகதை

பசி

– தாமரைச்செல்வி, இலங்கை

சின்ராசு திண்ணையிலிருந்து இறங்கிவந்து குசினிக்குள் எட்டிப் பார்த்தான். அம்மாவைக் காணவில்லை. காலையில் தேநீருக்காக மூட்டிய அடுப்பு இப்போது அணைந்து போயிருந்தது. அம்மா சாப்பாடு எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. ஆக, இன்றைக்கும் காலையில் குடித்த தேநீருடன் பாடசாலை போக வேண்டியதுதான்.

வயிற்றுக்குள் கிர்ரென்ற இரைச்சல்……

ஏதாவது சாப்பிட முடியும் என்று காத்துக் கொண்டிருந்தவனுக்கு நிலைமை புரிந்துபோகப் பேசாமல்போய் அரைச்சுவரில் வைத்திருந்த புத்தகப் பையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டான்.

இந்தப் பத்து வயதில் குடும்பத்தின் நிலைமையை நன்றாகத் தெரிந்து கொண்டவன் அவன். உழைத்துத் தர, ஆண் துணை இல்லாத குடும்பம். மிகவும் சிறிய வயதில் தந்தையின் நேசத்தை அனுபவித்தது, கனவு மாதிரி இருந்தது. மனத்தின் ஆழத்தில் அந்த அனுபவம் இப்போதும் இனிமையாய்ப் பரவியிருந்தது.

அந்த ஆசியான அப்பா, ஆறு வருஷத்துக்கு முன்பு ஆணையிறவிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லுக்குப் பலியானபோது, அழவும் தெரியாத பருவத்தில் அவன் இருந்தான். அம்மாதான், உழைத்து அவனை வளர்த்துக் கொண்டிருக்கிறாள்.

அநேகமான நேரங்களில், அம்மாவை அழுத முகத்துடன் அவன் பார்க்க நேரிடுகிறது. அம்மா எவ்வளவு பாவம்! அதனாலேயே அவன் அம்மாவிடம் எதையும் கேட்பதில்லை.

சின்ராசு புத்தகப் பையுடன் முற்றத்தில் நின்று சுற்றும்முற்றும் பார்த்தான். மேலே வானத்தில் ஏதோ இரைச்சல் கேட்பது போலிருந்தது. மனம் திடுக்கிட்டுப் போக நிமிர்ந்து பார்த்தான்.

பொம்பர் ஏதும் பறக்கிறதா என்று கலவரமாய் இருந்தது. பொம்பர் என்றாலே மனம் பயத்தில் படபடவென்று அடித்துக் கொள்ளும். நல்ல வேளை … பொம்பர் ஒன்றும் பறக்கவில்லை. தூர எங்கேயோ மோட்டார் சைக்கிள் இரைகிறது போலும்.

அவன் நிம்மதியுடன் அம்மாவைத் தேடினான்.

"அம்மா…. அம்மோய்…."

கிணற்றடிப் பக்கத்திலிருந்து வந்த அம்மாவின் முகம் வாடிப் போயிருந்தது.

"நான் ஸ்கூலுக்குப் போட்டு வாறன் அம்மா …."

"ஓமப்பு. கவனம். பொம்பர் ஏதுவும் வந்தால் பள்ளிக்கூடத்துக்க இருக்கிற பங்கருக்குள்ள ஓடிப் போய் இருக்க வேணும். என்னப்பன்…"

"நான் பிள்ளைக்கு மத்தியானம் சோறு காய்ச்சி வைக்கிறன். வந்தவுடன் சாப்பிடலாம். என்ன…" அவன் ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு தலையாட்டினான்.

"பிள்ளைக்குப் பசிக்குதே…"

அம்மா ஆற்றாமையோடு கேட்டாள்.

"இல்லையம்மா… நான் போயிட்டு வாறன்."

அவன் செருப்புப் போடாத கால்களுடன் தெருவில் இறங்கி நடந்தான்.

அவனுக்குத் தெரியும். அம்மா தன்னைப் போக விட்டுவிட்டு அழுவாள் என்று.

குசினி–சமையலறை

11th Advance Tamil - FINAL.indd 75 14-02-2019 17:28:01

அதற்காகவே தனக்குப் பசி இல்லாதது போலவும் முகத்தில் வாட்டம் இல்லாதது போலவும் காட்டிக் கொண்டான்.

தெருவில் வேகமாக நடக்க அவனால் முடியவில்லை. வயிற்றுக்குள் எதுவோ புரண்டது.

வெறும் வயிறு இரைந்தது.

இப்போது இரண்டு நாள்களாகக் காலையில் எதுவும் சாப்பிடாமல்தான் பாடசாலைக்குப் போகிறான். புல் பிடுங்கிற வேலை. நாற்று நடவு வேலை முடிந்துவிட்ட நேரம். இனி வயல்களில் அரிவு வெட்டு வரும்வரை அம்மா வேலைக்குப் போக இயலாது. வேலை கிடைக்காது.

இனி, அரிவு வெட்டு வரும்வரை இப்படித்தான். அரை வயிறு, கால் வயிறுமாக இருக்க வேண்டும்.

நேற்றாவது பாடசாலைவிட்டு வீட்டுக்கு வந்தபோது, சோறும் சம்பலும் இருந்தது. இன்றைக்கு அதுவும் இருக்குமோ தெரியவில்லை. பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்து சேர மூன்று மணியாகிவிடும். அதுவரை இந்தப் பசியை எப்படிப் பொறுத்துக் கொள்வது என்று அவனுக்கு யோசனையாக இருந்தது.

வயிற்றில் இரைச்சலுடன் பாடங்களையும் கவனிக்க முடியாது. குறைந்தது இரண்டு ஆசிரியர்களிடமாவது இன்றைக்கு அடி வாங்கப் போவது நிச்சயம்.

முடிந்தவரை வேகமாக நடந்தான். பாம்புக் கமத்துக் கோவிலடி கடந்து நடக்கும்போது அவனுடன் படிக்கும் குகன் தன் தமயனின் சைக்கிளில் அவனைக் கடந்தான்.

"சின்ராசு! கெதியாய் வாடா. நேராமாயிடும்."

குகன் சொல்லிவிட்டுப் போனான்.

எவ்வளவு வேகமாய் நடந்து வந்தும், பாடசாலை வாசலை அடைந்த நேரம் இரண்டாவது மணியும் அடித்து வாசல் கேற்றும் மூடப்பட்டுவிட்டது.

வெளியே நின்ற பத்துப் பதினைந்து மாணவர்களுடன், அவனும் பயத்துடன் நின்று கொண்டான்.

அதிபர் வந்து, தாமதமாய் வந்ததுக்குக் காரணம் கேட்டு, ஒவ்வொரு அடி அடித்து உள்ளே விட்டார்.

அவன் மௌனமாகத் தன் கையை நீட்டினான்.

"ஏன் பிந்தி வந்தனி?"

அதிபரின் அதட்டலில் கண் விளிம்பில் நீர் துளிர்த்தது.

"ஒரு கட்டை தூரம் நடந்து வாறன் சேர்."

"அப்ப வெள்ளன வெளிக்கிட்டு வாறதுதானே....."

அம்மா ஏதும் சமைக்கக்கூடுமோ என்று, சாப்பிடுவதற்காகப் பார்த்துக் கொண்டிருந்த காரணத்தைச் சொல்லமுடியவில்லை. பேசமால் நின்றான்.

"இனிமேல் கெதியாய் வர வேணும், ஓடு"

கையில் அடித்த அடி, ஏனோ உறைக்கவில்லை.

"பிரின்சிபல் அடிச்சது நோகுதேடா" என்று குகன் கேட்டபோது, இல்லை என்று சிரிக்க முயன்றான்.

வகுப்பில் பாடங்களைக் கவனிக்க முயற்சி செய்தும் முடியவில்லை. காதை அடைத்துக்கொண்டு வந்தது.

மத்தியானம் இடைவேளை மணி அடித்தது.

அந்த நேரம், அவனைப் பொறுத்தவரை மிகவும் தண்டனைக்குரிய நேரம். எல்லாப் பிள்ளைகளும் தாங்கள் கொண்டு வந்திருந்த சாப்பாட்டுப் பொதிகளை எடுத்துச் சாப்பிடும் நேரம்.

அவன் கடைசி வாங்கில் வேறுபக்கம் பார்த்துக்கொண்டு அமர்ந்திருப்பான்.

சாப்பாடுகளின் பலவகையான வாசனை வந்து, மூக்கை நிறைத்து, அவனது பசி இன்னும் கிளறப்படுகின்ற சோதனையான நேரம்.

இன்றும் அவன் கடைசி வாங்கில் வந்து அமர்ந்து கொண்டான். குகன் தனது சாப்பாட்டுப் பெட்டியுடன் அருகில் வந்து "வாவன் சின்ராசு.... என்னோட சாப்பிடலாம்" என்றான்.

"வேண்டாமடா. எனக்குப் பசிக்கேலை."

குகன் மற்றவர்களுடன் சாப்பிட முன் வாங்கில் போய் அமர்ந்தான். விறாந்தையில் சென்று கொண்டிருந்த புவனா ரீச்சர், "ஏன் சின்ராசு... சாப்பாடு கொண்டு வரேலையே..." என்று கேட்டார்.

"இல்லை ரீச்சர்" என்றபோது, உள்ளே அழுகை வந்தது.

ரீச்சர் போன திசையைப் பார்த்துக் கொண்டிருந்தவன், விறாந்தை ஓரம் ஓடிவந்த நாயின்மீது தன் பார்வையைத் திருப்பினான்.

எங்கே நின்றாலும், இந்த நேரத்திற்கு வகுப்புகளின் வாசலுக்கு இந்த நாய் வந்து விடும். 'வயிறு ஒட்டிய மெலிந்த நாய்; அதுவும் சாப்பிட்டு எத்தனை நாளாயிற்றோ' என்று அவன் கவலையுடன் நினைத்துக் கொண்டான்.

அவன் காலுக்கு அருகில் வந்து நின்று, சாப்பிடும் மாணவர்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது அது.

அப்போது, திடீரென்று வானத்தில் ஒரு பேரிரைச்சல்... அடுத்தடுத்து இரண்டு விமானங்கள் வேகமாய்ச் சுற்றி வந்தன.

"அய்யோ... பிள்ளையள்... எல்லாரும் பங்கருக்குள்ள ஒடுங்கோ..." புவனா ரீச்சரின் குரல் சத்தமாய்க் கேட்டது.

அவ்வளவுதான். அடுத்த வினாடி சூழ்நிலை மாறிப் போனது. மாணவர்கள் பிரித்த சாப்பாடுகளை அப்படியே போட்டுவிட்டு ஓடத் தொடங்கினார்கள்.

ஓவென்ற அலறலும் அம்மா என்ற கதறலுமாகச் சிதறி ஓடினார்கள்.

குண்டு வீச்சு விமானங்களின் ஓசையும் இவர்களின் ஓவென்ற கூப்பாடும் சின்ராசுவை ஒரு நிமிஷம் திகைக்க வைத்தன.

ஓடியவர்கள் கைதவற விட்ட சாப்பாட்டுப் பொதிகள் சிதறி நிலத்தில் விழுந்ததைப் பார்த்ததும், அவன் மனம் பதறியது. அவன் காலடியில் விழுந்த பொதி விரிந்துக் கொள்ள இடியப்பமும்... பொரியலும்...

அந்த மெலிந்த நாய், வகுப்பறைக்குள் நுழைந்து கீழே விழுந்து கிடந்த உணவை அவசர அவசரமாகச் சாப்பிடத் தொடங்கிய நேரம், சின்ராசு தன் காலில் கீழே இருந்த உணவை ஒரு வினாடி தயக்கத்துடன் பார்த்தான்.

அடுத்த வினாடி, கால் மடித்துக் குனிந்து அமர்ந்தபடி, அந்த இடியப்பத்தை எடுத்து வாய்க்குள் திணித்துக் கொண்டான்.

விமானத்தின் இரைச்சலோ... அது மிகவும் சமீபமாகக் குத்தி எழும்பிய ஓசையோ அவனுக்குக் கேட்கவே இல்லை.

படைப்பு முகம்

தாமரைச்செல்வி (1953): போரின் அவலம், போர்ச்சூழல் முதலானவற்றை எதார்த்தமாகச் சித்திரிப்பதில் தனி முத்திரை பதித்தவர். இருநூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், மூன்று குறுநாவல்கள், ஆறு நாவல்கள் என இவரது படைப்பின் பட்டியல் நீள்கிறது. இலங்கை அரசின் சாகித்ய விருது பெற்றவர்.

படிப்போம் பகிர்வோம்

1. 'பசி' கதையில் வரும் சின்ராசுவின் பாத்திரப்படைப்பை ஆராய்க.
2. பசி கதை உணர்த்தும் போர்ச் சூழலை விளக்குக.

தெரியுமா?

சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற சிறுகதைகள்

1970 – அன்பளிப்பு – கு. அழகிரிசாமி

1979 – சக்தி வைத்தியம் – தி. ஜானகிராமன்

1987 – முதலில் இரவு வரும் – ஆதவன் சுந்தரம்

1996 – அப்பாவின் சிநேகிதர் – அசோகமித்திரன்

2008 – மின்சாரப் பூ – மேலாண்மை பொன்னுச்சாமி

2010 – சூடிய பூ சூடற்க – நாஞ்சில் நாடன்

2016 – ஒரு சிறு இசை – வண்ணதாசன்

அறிவோம் தெளிவோம்

சிறுகதை குறித்து எட்கர் ஆலன் போ

அமெரிக்க எழுத்தாளரான எட்கர் ஆலன்போவின் கதைகள் சிறுகதையின் வடிவ மாதிரிக்கு எடுத்துக்காட்டுகளாக அமைந்தவை. சிறுகதை குறித்த அவரின் பார்வை...

"சிறுகதையின் முதல் தொடர், படிப்பவர் கவனத்தை இழுத்துப் பிடிக்கவில்லையாயின், அக்கதை பயனற்றது. பயனற்ற ஒரு சொல்கூட கதையில் இடம்பெறுதல் கூடாது."

11th Advance Tamil - FINAL.indd 78 14-02-2019 17:28:02

இந்தியமொழிச் சிறுகதை

அஷமஞ்சா பாபுவின் நாய்

– சத்யஜித் ரே

ஹஷிமாராவில் உள்ள ஒரு நண்பரின் வீட்டிற்குச் செல்லும்போது, அஷமஞ்சா பாபு தன் நெடுநாளைய அவாவினைத் தீர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் அமைந்தது. பவானிபூர், மோஹினிமோஹன் சாலையில் உள்ள ஒரு சிறிய ஃப்ளாட்டில்தான் அஷமஞ்சா பாபு குடியிருந்தார். லஜ்பத் ராய் தபால் அலுவலகத்தில் குமாஸ்தாவாக வேலை, அலுவலகத்திற்குக் கல்கத்தாவின் நெரிசலான பஸ்ஸிலோ, ட்ரெய்னிலோ சண்டை போடாமல் வீட்டிலிருந்து கால்நடையாகவே ஏழு நிமிடத்தில் போய்விடலாம் என்று அமைந்தது அவர் அதிர்ஷ்டம்தான். எனவே பாபுவின் வாழ்க்கை கவலைகள் இல்லாதது, அவரும் 'வாழ்க்கை தனக்கு இவ்வாறு அமையாதிருந்தால்' என்றெல்லாம் யோசித்து அலட்டிக் கொள்கிறவரில்லை. ஆக மொத்தத்தில் இருப்பதில் சந்தோஷப்பட்டுக் கொள்கிறவர்.

அவரைத் தொந்தரவு செய்து கொண்டிருந்த ஒரே விஷயம், ஒரு துணை இல்லாததுதான். சில நண்பர்கள் மற்றும் சொந்தக்காரர்களோடு வாழ்க்கையைத் தள்ளிக் கொண்டிருக்கும் பிரம்மச்சாரியான அவருக்கு, ஒரு நாய், தனக்குத் துணையாய் இருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. இரண்டுவீடு தள்ளி இருந்த தாசில்தார் வளர்ப்பதுபோல, அல்சேஷன் போன்ற பெரியவகை நாய்கள் அவருக்குத் தேவையில்லை. அவர் ஆசையெல்லாம், காலையும் மாலையும் அவர் பின்னால் சுற்றி வந்துகொண்டு, அவர் வேலைமுடிந்து வீட்டுக்கு வருகையில் வாலை ஆட்டியபடி வரவேற்று, அவர் இடும் கட்டளைகளைச் சிரமேற்கொண்டு செய்யும் ஏதேனும் ஒரு சிறியவகை நாய். பாபுவின் ரகசிய ஆசை என்னவென்றால் அவர் தன் நாயிடம் ஆங்கிலத்தில்தான் பேசவேண்டும் என்பது. 'ஸ்டாண்ட் அப்!', 'சிட் டௌன்', 'ஷேக் ஹேண்ட்ஸ்!' – அவருடைய இக்கட்டளைகளை அது கேட்டு நடந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அஷமஞ்சாபாபு, நாய்கள் ஆங்கில இனத்தைச் சேர்ந்தவை என்று நம்ப விரும்பினார். ஆம், ஒரு ஆங்கில நாய், அதற்கு அவர் எஜமானன். அந்த எண்ணமே அவருக்கு ஆனந்தத்தைக் கொடுத்தது.

மழை தூறலாக விழுந்துகொண்டிருந்த ஒருநாளில், ஹஷிமாராவில் உள்ள சந்தைக்கு ஆரஞ்சுப் பழங்கள் வாங்கச் சென்றிருந்தபோது, சந்தையின் மூலையிலுள்ள குட்டையான இலந்தை மரத்தடியில் பூட்டானைச் சேர்ந்த ஒருவன் கையில் சிகரெட்டோடு அமர்ந்திருந்தான். பக்கத்தில் காலணிகள் வைக்கும் அட்டைப்பெட்டியில் இருந்து நாய்க்குட்டி ஒன்று எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தது.

'காலை வணக்கம்'' என்று ஆங்கிலத்தில் சொன்னான், கண்கள் சிரிக்கும்போது கீறலாக மாறின. பாபுவும் மறுபடி வணக்கம் சொல்ல வேண்டியதாயிற்று.

'பை டாக்? டாக் பை? வெரிகுட் டாக்', பெட்டியில் இருந்த நாயை எடுத்து தரையில் விட்டான், 'வெரி சீப், குட் டாக், ஹேப்பி டாக்'.

நாய்க்குட்டி வெளியே வந்ததும் தன் உடலில் இருந்த மழைத்துளிகளை உலுக்கி உதறிவிட்டு பாபுவைப் பார்த்துத் தன் இரண்டு இஞ்ச் வாலை வேகமாக ஆட்டியது. பாபு அதனருகில் சென்று குனிந்து தன் கைகளை நீட்டியதும் தன் இளஞ்சிவப்பு நாவால் அவர் கைகளை நக்கியது, நட்பான நாய்தான்.

"விலை என்ன? ஹவ் மச்?"

"டென் ருபீஸ்"

சிறிதுநேர விவாதத்திற்குப்பிறகு ஏழு ஐம்பதுக்கு இறங்கிவந்தான். காசைக் கொடுத்ததும் பாபு நாய்க்குட்டியை அதே பெட்டிக்குள் வைத்து, மழைத்துளி படாமலிருக்க மூடி, ஆரஞ்சுப் பழங்களை மறந்து வீட்டை நோக்கி நடந்தார்.

கல்கத்தாவுக்கு வந்ததும், அஷமஞ்சா பாபுவுக்கு நாய்க்குட்டிக்கு ஒருபெயர் வைக்க வேண்டுமென்று தோன்றியது. அது ஒரு ஆங்கிலப் பெயராக இருக்கவேண்டுமென்று நினைத்தார். ஒருநாள் அந்தக்குட்டியைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, திடீரென, அது பழுப்பு நிறத்தில் இருப்பதால் ப்ரௌனி என்பது பொருத்தமான பெயர் என்று அவருக்குத் தோன்றியது. பெயரை முடிவு செய்த கணமே, அதை நாய்க்குட்டியின்மேல் பரீட்சித்துப் பார்த்தார், உடனே அது பிரம்பு முக்காலியில் இருந்து தவ்வி, அவர் அருகில் வந்து வாலாட்டியது. அஷமஞ்சா பாபு இப்போது, "சிட் டவுன்." என்றார், உடனே அது பின்னங்காலில் உட்கார்ந்து வாயைத் திறந்து சின்னதாகக் கொட்டாவி விட்டது. அஷமஞ்சா பாபுவுக்கு, ப்ரௌனி நாய்களுக்கான போட்டி ஒன்றில் புத்திசாலித்தனத்திற்கான முதல் பரிசைத் தட்டிச்செல்வது கண்ணுக்குத் தெரிந்தது.

அவருடைய வேலைக்காரன் பிபினும் நாய்களை விரும்புபவனாக இருந்தது அவரின் அதிர்ஷ்டம். அஷமஞ்சா பாபு வேலைக்குப் போனதும், ப்ரௌனியைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பை அவனாகவே ஏற்றுக்கொண்டான்.

***

அந்தச் சம்பவம் நடந்தது ஹஷிமாராவிலிருந்து வந்த மூன்றாம்மாதம். அதுவொரு சனிக்கிழமை.. அஷமஞ்சா பாபு அப்போதுதான் வேலையிலிருந்து திரும்பிவந்து, பழைய மரநாற்காலி ஒன்றில் உட்கார்ந்திருந்தார். கட்டிலையும் பிரம்பு முக்காலியையும் தவிர அந்த அறையில் இருந்த ஒரே மரச்சாமான் அதுதான்; அது திடீரென அவருக்கடியில் உடைந்து, கைகால்களைப் பரப்பியபடி அவரைத் தரைக்கு அனுப்பியது. உண்மையில் அவருக்குப் பலமான அடி, சொல்லப்போனால் மரக்காலைப்போலத் தன் முழங்கையும் இடம்விட்டு நகர்ந்துவிட்டதோ என்று நினைக்கும்போது அந்த எதிர்பாராத சத்தம் வலியை மறக்கச் செய்துவிட்டது.

அது படுக்கையிலிருந்து வந்தது. ஒரு சிரிப்பொலி அல்லது சரியாகச் சொல்லவேண்டுமென்றால் அதுவொரு இளிப்பு, அது தோன்றிய இடம் சந்தேகமே இல்லாமல் ப்ரௌனி, கட்டிலில் உட்கார்ந்திருந்த அதன் உதடுகள் இன்னமும் வளைந்திருந்தன.

அஷமஞ்சா பாபுவுக்குப் பொதுஅறிவு சற்று விசாலமாக இருந்திருந்தால், நாய்கள் ஒருபோதும் சிரித்ததில்லை என்று தெரிந்திருக்கும். கொஞ்சமேனும் கற்பனைவளம் இருந்திருந்தால் இச்சம்பவம் அவர் தூக்கத்தைப் பறித்திருக்கும். இரண்டுமே அவரிடம் இல்லை என்பதால் அஷமஞ்சா பாபு *All About Dogs* என்ற புத்தகத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்தார். ஒரு மணிநேரம் தேடியும் அந்தப்புத்தகத்தில் சிரிக்கும் நாய் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

ஆனாலும் ப்ரௌனி சிரித்தது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. புத்தகத்தை மூடிவிட்டு ப்ரௌனியைப் பார்த்தார். அவர்களின் கண்கள் சந்தித்துக்கொண்டதும், ப்ரௌனி தன் முன்னங்காலை எடுத்துத் தலையணையில் வைத்து அவரைப்பார்த்து வாலாட்டியது, மூன்றுமாதத்தில் அதன் வால் ஒன்றரை இஞ்ச் வளர்ந்துவிட்டது.

இது நடந்த ஒரு வாரத்திற்குள் இன்னும் இரண்டு நிகழ்ச்சிகளில் ப்ரௌனிக்குச் சிரிப்பதற்கான சந்தர்ப்பம் வாய்த்தது. முதலாவது இரவினில் நடந்தது. ஒன்பதரை மணி வாக்கில். அஷமஞ்சா பாபு அப்போதுதான் ப்ரௌனி படுப்பதற்காக வெள்ளை விரிப்பொன்றைத் தரையில் விரித்திருந்தார். ஒரு கரப்பான்பூச்சி எங்கிருந்தோ பறந்து வந்து சுவரில் அமர்ந்தது. அஷமஞ்சா பாபு தன் செருப்பை எடுத்து அதன்மீது வீசினார். செருப்பு

11th Advance Tamil - FINAL.indd 80 14-02-2019 17:28:02

குறிதவறி மாட்டப்பட்டிருந்த கண்ணாடியில் இறங்கி, அதைக் கீழேயனுப்பி நொறுக்கியது. இம்முறை ப்ரௌனி சிரித்த சிரிப்பு, அவருடைய கண்ணாடி உடைந்ததற்கான இழப்பீட்டைவிட அதிகமானது.

இரண்டாவதுமுறை வந்தது பெருஞ்சிரிப்பல்ல, சின்னதாய் ஒரு எக்கலிப்பு. எதுவும் நடக்கவில்லையே என்று அஷமஞ்சா பாபுவுக்குக் குழப்பமாக இருந்தது. பிறகு ஏன் இந்தச் சிரிப்பு? அவரின் வேலையாள் பிபின் வந்ததும் அதற்கான விடை தெரிந்துவிட்டது. அவரைப் பார்த்ததும் புன்னகையோடு ''உங்கள் காதுக்குப் பக்கத்தில் ஷேவிங் சோப்பு ஒட்டியிருக்கிறது அய்யா'', என்றான். கண்ணாடி உடைந்து போனதால் சன்னல் கண்ணாடியில்தான் அவர் சவரம் செய்ய வேண்டியிருந்தது, கைகளை வைத்துப்பார்த்து பிபின் சொன்னது உண்மை என்று தெரிந்துகொண்டார்.

அற்பமான விஷயங்களுக்குக் கூட ப்ரௌனி சிரிக்கிறது என்பது அஷமஞ்சா பாபுவுக்கு ஆச்சரியமாகப் பட்டது. தபால் அலுவலகத்தில் அவர் மேசையில் அமர்ந்திருந்தபோது, அவர் சிந்தனை மீண்டும் மீண்டும் ப்ரௌனியின் முகத்திலிருந்த சிரிப்பிலும் அந்த எக்கலிப்பின் ஒலியிலுமே இருந்தது.

***

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில், இந்தச் சாகசத்துக்குத்துணையிருக்கும்படி மௌனமாக, துர்க்கையை வேண்டிக்கொண்டு, பேராசிரியர் சாட்டர்ஜியின் வீட்டுக்குக் கிளம்பினார். பேராசிரியர் தான் வாசித்துக்கொண்டிருந்த செய்தித்தாளை வைத்துவிட்டு வந்திருப்பவரைக் கவனித்தார்.

"உன் முகம் பரிச்சயமானதாகத் தெரிகிறது."

"நான் இங்கே பக்கத்தில்தான் இருக்கிறேன்."

11th Advance Tamil - FINAL.indd 81 14-02-2019 17:28:03

"அப்படியா? என்ன விஷயம், சொல்லு."

"உங்கள் வீட்டில் ஒரு நாயைப் பார்த்திருக்கிறேன்: அதனால்தான்..."

"அதனாலென்ன? எங்களிடம் இரண்டு இருக்கிறது ஒன்றல்ல."

"ஓ... என்னிடமும் ஒன்று இருக்கிறது."

"உனக்கு என்ன ஊரிலுள்ள நாய்களை எண்ணும் வேலையா?"

அஷமஞ்சா பாபு அந்தக்கேள்வியில் இருந்த எள்ளலைக் கவனிக்கவில்லை. "நான் தேடிக்கொண்டிருப்பது உங்களிடம் இருக்குமா என்று பார்க்கவந்தேன்," என்றார்.

"என்ன அது?"

"உங்களிடம் நாய்கள் பற்றிய என்சைக்ளோபீடியா இருக்கிறதா?"

"இல்லை. என்னிடம் இல்லை. அது உனக்கெதற்கு?"

"அதிலே பாருங்கள்... என் நாய் சிரிக்கிறது. ஆகவே, நாய்கள் இப்படிச் சிரிப்பது இயற்கையானதுதானா? என்று தெரிந்துகொள்ளவேண்டும். உங்களுடைய நாய்கள் சிரிக்கின்றனவா?"

அறையில் மாட்டியிருந்த கடிகாரம் எட்டு அடித்து ஓயும்வரை பேராசிரியர் நிலைகுத்திய பார்வையில் அஷமஞ்சா பாபுவைப் பார்த்தார். பிறகு "உன் நாய் இரவில் சிரிப்பதுண்டா?" என்று கேட்டார்.

"நிச்சயமாக, ஆமாம், இரவிலும்தான்."

"போதைவஸ்துக்கள் எடுத்துக் கொள்வாயோ?"

அஷமஞ்சா பாபு தனக்குள்ள ஒரே கெட்டபழக்கம் புகைபிடிப்பதுதான் என்று அடங்கிய குரலில் சொன்னார் – நாய் வந்ததிலிருந்து அதையும்கூட வாரத்திற்கு மூன்று பாக்கெட்டிலிருந்து இரண்டாக்கி விட்டதைத் தெரிவித்தார்.

"ஆனாலும் உன் நாய் சிரிக்கிறது என்கிறாய்?"

"அது சிரிப்பதை என் கண்களால் பார்த்தும் காதால் கேட்டுமிருக்கிறேன்."

"கவனி". பேராசிரியர் சாட்டர்ஜி தன் கண்ணாடியைக் கழற்றினார், அதைத் தன் கைக்குட்டையால் துடைத்து, மீண்டும் மாட்டிக்கொண்டு அஷமஞ்சா பாபுவை உன்னிப்பாகப் பார்த்தார். பிறகு வகுப்பில் விரிவுரையாற்றும் தொனியில் உணர்ச்சி முழக்கமிட்டார்:

"இயற்கையின் அடிப்படை விதிகள் குறித்து உனக்கிருக்கும் அறியாமையைக் கண்டு வியக்கிறேன். அனைத்து ஜீவராசிகளிலும் மனிதனே சிரிக்கத் தெரிந்தவன். ஏன் அப்படி இருக்கிறது என்று கேட்காதே, ஏனென்றால் எனக்குத் தெரியாது. கடலில் வாழக்கூடிய டால்பின்களுக்கு நகைச்சுவை உணர்வு உண்டென்று கேள்விப்பட்டிருக்கிறேன். டால்பின்கள் மட்டும் ஒரேயொரு விதிவிலக்காக இருக்கலாம். மனிதர்கள் ஏன் சிரிக்க வேண்டும் என்பதும்தெளிவாகப்புரியவில்லை.எவ்வளவோ தத்துவவாதிகள் ஏனென்று மண்டையை உடைத்துக்கொண்டு யோசித்திருக்கிறார்கள், ஆனால் விடை தெரியவில்லை. உனக்குப் புரிகிறதா?"

அஷமஞ்சா பாபுவுக்குத் தெளிவாகப் புரிந்தது; கூடவே அவர் இப்போது அந்த இடத்தைக்காலி செய்ய வேண்டும் என்பதும் புரிந்தது, ஏனென்றால் பேராசிரியர் மீண்டும் செய்திதாளுக்குப் பின்னால் காணாமல் போயிருந்தார்.

டாக்டர் சுகோமோய் பௌமிக், நகரத்தில் சிறந்த மிருக வைத்தியர். மற்றவர்கள் காதுகொடுத்துக் கேட்காததை நிச்சயம் ஒரு மிருக வைத்தியர் கேட்பார் என்ற நம்பிக்கையில் அஷமஞ்சா பாபு அவரிடம் ப்ரௌனியை அழைத்துச் சென்றார். ப்ரௌனி கடந்த நான்கு

11th Advance Tamil - FINAL.indd 82 14-02-2019 17:28:04

மாதத்தில் பதினேழுமுறை சிரித்திருக்கிறது. அவர் கவனித்தவரை சிரிக்கும்படியாக ஏதாவது சொன்னால் ப்ரௌனி சிரிப்பதில்லை; கோமாளித்தனமான நிகழ்வுகளுக்கு மட்டுமே சிரிக்கிறது. எனவே, அஷமஞ்சா பாபு, ஒருமுறைக்கு இருபது ரூபாய் வாங்கினாலும் பரவாயில்லை என அந்த மிருகவைத்தியரைப் பார்க்கப் போகிறார். நாயின் தனித்தன்மையான குணத்தைச் சொல்லும்முன்பே தோற்றத்தைப் பார்த்தவுடன் பௌமிக்கின் புருவம் உயர்ந்துவிட்டது.

"நாட்டுநாய்களை நிறையப் பார்த்திருக்கிறேன், ஆனால் இதுபோலப் பார்த்ததில்லை." என்றார்.

நாயைத் தூக்கி மேசையின்மீது வைத்தார். ப்ரௌனி தன் காலடியில் இருந்த பித்தளை பேப்பர் வெயிட்டை முகர்ந்து கொண்டிருந்தது.

"என்ன சாப்பிடக் கொடுப்பீர்கள்?"

"நான் சாப்பிடும் எல்லாமும் சாப்பிடுவான் சார், உயர் ஜாதி நாய் இல்லையே!"

அஷமஞ்சா பாபு தான் அங்குவந்ததற்கான உண்மையான காரணத்தைச் சொல்ல ஆயத்தமானார். "நான் வந்து என் நாயிடம் ஒரு முக்கியத்துவம் இருக்கிறது... அதனால்தான் உங்களிடம் கொண்டுவந்தேன்."

"முக்கியத்துவமா?"

"இந்த நாய் சிரிக்கிறது."

"சிரிக்கிறதா...?"

"ஆமாம், சிரிக்கிறது. உங்களையும் என்னையும் போல."

"நம்பமுடியவில்லை! இப்போது சிரிக்கவைக்க முடியுமா, நான் பார்க்க வேண்டும்?"

அஷமஞ்சா பாபு டாக்டரிடம் ப்ரௌனி சிரிக்கச்சொன்னால்சிரிக்காதுஎன்றும்ஏதாவது சிரிக்கும்படியான சம்பவம் நடக்கவேண்டும் என்று விளக்கினார். அதன்பிறகு டாக்டர் பௌமிக்குக்கு, அஷமஞ்சா பாபுவிடம்

பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. "உன் நாய் ஏற்கெனவே போதுமான அளவு விநோதமாயிருக்கிறது; அது சிரிக்கிறது என்று சொல்லி இன்னும் விநோதமாக்க வேண்டாம். என்னுடைய இருபத்தியிரண்டு வருட அனுபவத்தில் சொல்கிறேன், நாய்கள் அழும், பயப்படும், கோபம், வெறுப்பு, நம்பிக்கையின்மை மற்றும் பொறாமையை வெளிப்படுத்தும். நாய்கள் கனவுகூடக் காணும் ஆனால் சிரிக்காது."

இந்தச் சந்திப்புக்குப் பிறகு, அஷமஞ்சா பாபு யாரிடமும் ப்ரௌனியின் சிரிப்புபற்றிப் பேசவேண்டாம் என்று முடிவெடுத்துவிட்டார். யாருக்கும் இந்த விஷயம் தெரியாமல் போனால்தான் என்ன? அவருக்குத் தெரியும். ப்ரௌனி அவருடைய நாய், அவரின் சொத்து. அவர்களின் தனிப்பட்ட உலகத்தில் வெளியாட்களை இழுப்பானேன்?

***

ஆனால்விஷயங்கள் நம்விருப்பத்திற்கேற்ப நடப்பதில்லை. ஒருநாள் ப்ரௌனியின் சிரிப்பு வெளியாள் ஒருவருக்குத் தெரிந்துவிட்டது.

சிலநாட்களாகவே அஷமஞ்சா பாபு, ப்ரௌனியை மதியநேரங்களில் விக்டோரியா மெமோரியல் அருகே நடைக்கு அழைத்துச்செல்லும் பழக்கத்திற்கு ஆளாயிருந்தார். ஒரு ஏப்ரல் நாளில், நடையின் நடுவே, திடீரென்று புயல்காற்று ஆரம்பமானது. அஷமஞ்சா பாபு வானத்தைப் பார்த்து, வீட்டுக்குத் திரும்புவது பாதுகாப்பானதல்ல, எந்தநேரமும் மழை வந்துவிடலாம் என்று கணித்தார். எனவே ப்ரௌனியுடன் பளிங்கு வளைவோடு கூடிய கருப்புநிறக் குதிரைவீரன் சிலையின் கீழ் ஒதுங்குவதற்காக விரைந்தார்.

இதற்கிடையே, மழை பெருந்துளிகளாக விழ ஆரம்பித்ததும் மக்கள் ஒதுங்க இடம் தேடத்தொடங்கினர். வளைவுக்கு

11th Advance Tamil - FINAL.indd 83 14-02-2019 17:28:04

இருபதடி தள்ளி, வெள்ளைச்சட்டையும் ட்ரவுசரும் அணிந்த ஒரு குண்டான மனிதர் தன் குடையை விரித்தபோது திடீரெனக் காற்றின் வேகம்கூடி குடையைத் தலைகீழாக்கியது. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் அஷமஞ்சா பாபு வெடித்துச் சிரிக்க இருந்தார், ஆனால், ப்ரௌனி அவரை முந்திக்கொண்டு சத்தமாகப் புயல்காற்றின் சத்தத்தையும் மீறி வெடிவெடித்ததுபோலச் சிரித்தது அந்தப் பரிதாபமான நபருக்கும் கேட்டுவிட்டது. அம்மனிதர் குடையை மடிப்பதை விட்டுவிட்டு வியப்புடன் ப்ரௌனியைப் பார்க்க ஆரம்பித்தார். ப்ரௌனியால் தனது சிரிப்பை அடக்கமுடியவில்லை.

"சிரிக்கும் நாய்."

"ஆமாம், சிரிக்கும் நாய்." என்றார் அஷமஞ்சா பாபு.

"ஆனால், இது எவ்வளவு விநோதமானது."

தூறல் இப்போது கனமான மழையாகிவிட்டிருந்தது. அஷமஞ்சா பாபுவோடு மழைக்கு ஒதுங்கியிருந்த அக்கனவான் போக்கன்வாலா, பத்தே நிமிடத்தில் ப்ரௌனியைப் பற்றி என்னவெல்லாம் உண்டோ எல்லாமும் தெரிந்து கொண்டுவிட்டார். தான் எப்பேர்ப்பட்ட அதிசயச் சுரங்கத்தை வைத்துக்கொண்டிருக்கிறோம் என்று அஷமஞ்சா பாபுவுக்கே தெரியவில்லை, இதற்கு ஏதாவது செய்யவேண்டும் என்று அவருக்குத் தோன்றியது.

***

சிரிக்கும்நாய் பற்றிய சம்பவத்தைக் கேள்விப்பட்டவர்களில் ஸ்டேட்ஸ்மேன் பத்திரிக்கையின் உயரதிகாரியும் ஒருவர். அஷமஞ்சா பாபுவைப் பேட்டியெடுக்கும்படி நிருபரான ரஜத் சௌத்ரியை அனுப்பினார்.

ஒரு நிருபர் தன்னைச் சந்திக்க நினைத்ததே அஷமஞ்சா பாபுவுக்கு மிகுந்த ஆச்சரியமாய் இருந்தது. அஷமஞ்சா பாபு, நிருபரைத் தனது படுக்கையறைக்குள் அழைத்து வந்தார். அந்த மரநாற்காலி இப்போது சரிசெய்யப்பட்டுப் புதிய கால் பொருத்தப்பட்டிருந்தது. அஷமஞ்சா பாபு நிருபரை அதில் அமரும்படி சொல்லிவிட்டுத் தான் படுக்கையில் அமர்ந்துகொண்டார். ப்ரௌனி, சுவரில் ஏறிக்கொண்டிருந்த எறும்புகளின் வரிசையொன்றைக் கவனித்துக் கொண்டிருந்தது; இப்போது உடனே படுக்கையில் தவ்வி அஷமஞ்சா பாபுவுக்கு அருகே அமர்ந்து கொண்டது.

ரஜத் சௌத்ரி தனது ரெக்கார்டரின் பொத்தானை அழுத்தப் போகும்போது ஒரு எச்சரிக்கையை முன்பே கொடுத்துவிடுவது நல்லது என்று அஷமஞ்சா பாபுவுக்குத் தோன்றியது. எனவே, "அதாவது சார், என்னுடைய நாய் முன்பெல்லாம் அடிக்கடி சிரித்துக் கொண்டிருந்தது, ஆனால், கடந்த சில மாதங்களாகச் சிரிக்கவே இல்லை. ஒருவேளை நீங்கள் அது சிரிப்பதைப் பார்க்கவேண்டுமென வந்திருந்தால் அது உங்களுக்கு ஏமாற்றமாக அமையலாம்," என்றார்.

"அதனாலென்ன, பரவாயில்லை. நான் உங்களிடமிருந்து சில விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் அவ்வளவே. ஆரம்பிக்கும் முன், நீங்கள் உங்கள் நாயை என்னவென்று கூப்பிடுகிறீர்கள்?"

அஷமஞ்சா பாபு மைக்கின் அருகில் செல்வதற்காகக் கழுத்தை நீட்டி, "ப்ரௌனி" என்றார். "ப்ரௌனி..." நிருபரின் கழுகுக்கண்கள் நாய் தன் பெயரைச் சொன்னதும் வாலாட்டுவதைக் கவனித்தன.

"இவனுக்கு என்ன வயதாகிறது?"

"பதிமூன்று மாதம்."

"இந்த நாயை எ-எ-எங்கே கண்டெடுத்தீர்கள்?"

அவர் அப்படித் திக்கியது எதிர்பாராத விதமாக ப்ரௌனியின் அதிசயமான குணத்தை வெளிக்கொண்டு வர உதவியது. அந்தவகையில் போக்கன்வாலாவுக்கு அடுத்து ப்ரௌனியின்

11th Advance Tamil - FINAL.indd 84 14-02-2019 17:28:05

மனிதர்களைப் போன்ற சிரிப்பைக் கண்ணால் பார்த்த வெளிநபர் ரஜத் சௌத்ரிதான்.

அடுத்துவந்த ஞாயிறு காலை, ஸ்டேட்ஸ்மேன் பத்திரிகை சிரிக்கும் நாய் பற்றியும் அதற்குச் சொந்தமானவரின் முகவரியையும் கொடுத்திருந்தது. அஷமஞ்சா பாபு ஸ்டேட்ஸ்மேனைப் படிக்கவில்லை..அவரது அண்டை வீட்டுக்காரரான காளிகிருஷ்ண தத், மீன் மார்க்கெட்டில் வைத்து அதைப்பற்றிச் சொன்னார்.

"நீங்கள் ஒரு நல்ல குணமுள்ள மனிதர்," என்றார் திரு. தத். "இப்படி ஒரு பொக்கிஷத்தை ஒரு வருஷத்திற்கும் மேலாக வீட்டிலேயே வைத்திருக்கிறீர்கள், அதைப்பற்றி யாரிடமும் மூச்சுக்கூட விடவில்லையே? இன்றைக்குச் சாயங்காலம் போல உங்கள் வீட்டுக்கு வந்து உங்கள் நாய்க்கு ஒரு ஹலோ சொல்லியே ஆகவேண்டும்." அஷமஞ்சா பாபுவின் இதயம் கலவரமானது. நிச்சயமாக இதுவொரு பிரச்சினையாக ஆகப்போகிறது என்று அவருக்குத் தெரிந்தது. திரு.தத் போலவே அக்கம்பக்கத்தில் நிறையபேர் ஸ்டேட்ஸ்மேன் வாசிப்பவர்கள்தான், எல்லோரும் அவர் வீட்டுக்கு வந்து அவரது நாய்க்கு ஹலோ சொல்ல விரும்புவார்கள்.

அஷமஞ்சா பாபு உடனடியாகச் சுதாரித்துக் கொண்டு, அன்றைய நாளை வீட்டிலிருந்து தள்ளி இருந்தபடி கழிப்பது என்று முடிவு செய்தார். எனவே, ப்ரௌனியைத் தனது கக்கத்தில் இடுக்கியபடி, வாழ்வில் முதன்முறையாக ஒரு டாக்சியில் ஏறி, நேராக பாலிகஞ்ச் ஸ்டேஷனுக்குச் சென்று அங்கிருந்து போர்ட் கேனிங் செல்லும் ரயிலில் ஏறிக்கொண்டார். பாதிதூரம் சென்றதும் ரயில் பால்சிட் என்ற ஸ்டேஷனில் நின்றது. அந்த இடம் பார்க்கப் பிடித்திருந்ததால் அஷமஞ்சா பாபு அங்கேயே இறங்கிக் கொண்டார். அன்றைய நாள் முழுவதையும் அமைதியான மூங்கில் தோட்டத்திலும் மாந்தோப்பிலும் கழித்தபின் புத்துணர்ச்சியை உணர்ந்தார். ப்ரௌனியும் அந்த இடத்தை நன்றாக ரசிப்பது போலிருந்தது. அதன் இதழ்க்கடையில் தவழ்ந்த மெல்லிய புன்னகை இதற்குமுன் அஷமஞ்சா பாபுவே

பார்த்திராதது. அதுவொரு மாசற்ற புன்னகை, அமைதியின், மனநிறைவின் புன்னகை. சுற்றியும் மரங்களடர்ந்த இதுபோன்ற இடத்தில் இவ்வளவு அமைதியான நடத்தையை ஏழு வயது மனிதக் குழந்தையிடம் எதிர்பார்க்க முடியாது என்று அவருக்குத் தோன்றியது.

***

அஷமஞ்சா பாபு வீட்டிற்குள் நுழையும்போது மணி ஏழைத் தாண்டியிருந்தது. யாரேனும் அழைத்திருந்தார்களா என்று பிபினிடம் கேட்டார். குறைந்தது நாற்பது முறை அவரைத்தேடி வந்தவர்களுக்காகக் கதவைத் திறக்க வேண்டியிருந்தது என்றான். அஷமஞ்சா பாபுவால் தன்னுடைய முன்னெச்சரிக்கைக்காகத் தன்னைத்தானே பாராட்டிக்கொள்ளாமல் இருக்கமுடியவில்லை. ஷூவைக் கழற்றியபடி பிபினிடம் ஒரு டீ கேட்டபோது யாரோ கதவைத் தட்டினார்கள். "அடச் சை!" என்று நொந்து கொண்டார் அஷமஞ்சா பாபு. கதவைத் திறந்ததும் அவர் பார்த்தது ஒரு வெள்ளைக்காரரை. "ராங் நம்பர்." என்று சொல்ல நினைத்து, பின்னால் நின்றிருந்த பெங்காலிக்காரரைப் பார்த்ததும் "யார் வேண்டும்?" என்றார்.

"நீங்கள்தான்," என்றார் இந்தியச் சுற்றுலாத்துறையைச் சேர்ந்த ஷ்யாமோல் நேண்டி, "அதாவது, உங்களுக்குப் பின்னால் நின்று கொண்டிருக்கும் நாய் உங்களுடையது என்றால், இன்றைக்குப் பேப்பரில் எப்படிச் சொல்லியிருந்ததோ அப்படியே இருக்கிறது. நாங்கள் உள்ளே வரலாமா?"

அஷமஞ்சா பாபு அவர்களைத் தனது படுக்கையறைக்குள் வரும்படி பெருந்தன்மையோடு அழைக்க வேண்டியதாயிற்று. அந்த வெளிநாட்டுக்காரர் நாற்காலியில் அமர்ந்து கொண்டார், திரு.

நேண்டி பிரம்பு முக்காலியில் அமர்ந்துகொள்ள, அஷமஞ்சா பாபு தன் கட்டிலில் அமர்ந்து கொண்டார். ப்ரௌனி சற்றே அசௌகரியமாகத் தென்பட்டது, அறையின் வாசற்படிக்கு வெளியிலேயே நின்று கொண்டது; அறைக்குள் இரண்டு அந்நியர்கள் இருப்பதை அது இதற்குமுன் பார்த்ததில்லை என்பதால் இருக்கலாம்.

"ப்ரௌனி! ப்ரௌனி! ப்ரௌனி! ப்ரௌனி!" வெளிநாட்டுக்காரர் அறைக்குள் அதை வரவைப்பதற்காக அதை நோக்கிக் குனிந்து மீண்டும் மீண்டும் கூப்பிட்டுப் பார்த்தார். ப்ரௌனி அந்த அந்நியரை உறுத்துப் பார்த்தபடி நகராமல் நின்றது.

யார் இவர்களெல்லாம்? என்று இயல்பாக அஷமஞ்சா பாபுவுக்குள் எழுந்த கேள்விக்கு திரு. நேண்டி பதிலளித்தார். அந்த வெளிநாட்டுக்காரர் அமெரிக்காவின் குறிப்பிடத்தகுந்த பணக்காரர், இந்தியாவுக்குப் பழைய ரோல்ஸ் ராய்ஸ் கார்களை வாங்குவதற்காக வந்திருக்கிறார்.

அந்த அமெரிக்கர் இப்போது நாற்காலியிலிருந்து எழுந்து குத்துக்காலிட்டு அமர்ந்தபடி நாய்க்கு முன்னால் விதவிதமான முகச்சேட்டைகளைச் செய்து கொண்டிருந்தார்.

மூன்று நிமிட தோல்விகரமான கோமாளித்தனங்களுக்குப்பின் முயற்சியைக் கைவிட்டு அஷமஞ்சா பாபுவைப் பார்த்து, "இதற்கு உடம்பு ஏதும் சரியில்லையா?" என்றார்.

அஷமஞ்சா பாபு இல்லையெனத் தலையசைத்தார்.

"இவன் உண்மையிலேயே சிரிப்பானா?" என்றார் அமெரிக்கர்.

அஷமஞ்சா பாபுவுக்கு அமெரிக்கப் பேச்சு புரியுமோ புரியாதோ என திரு.நேண்டி அவருக்காக மொழிபெயர்த்தார்.

"ப்ரௌனி சிரிக்கும்," என்றார் அஷமஞ்சா பாபு, "ஆனால், அது வேடிக்கையென்று எதையாவது உணர்ந்தால்தான்."

அஷமஞ்சா பாபுவின் பதிலை நேண்டி மொழிபெயர்த்துச் சொன்னபோது அமெரிக்கரின் முகத்தில் செம்மை படர்ந்தது. தெளிவாகத் தெரியாத சூழ்நிலையில், அந்த நாய் சிரிக்கக்கூடியது என்ற நிரூபணம் கிடைக்காத வரையில் அவர் அந்த நாய்க்காகப் பணத்தை வீசியடிக்க விரும்பவில்லை. பின்னால் அவரைத் தர்மசங்கடப்படுத்தக் கூடிய எந்தவொரு நிலையையும் அவர் உருவாக்கிக் கொள்ளத் தயாராக இல்லை. மேலும், தனது வீட்டில் சீனத்திலிருந்து பெரு வரை உள்ள அரிதான பொருட்களும், லத்தீன் மொழி மட்டுமே பேசக்கூடிய கிளியும் வைத்திருக்கிறார். "சிரிக்கும் நாயை வாங்குவதற்காக என்னுடைய செக் புத்தகத்தைக் கையோடு எடுத்து வந்திருக்கிறேன், ஆனால், அது உண்மையிலேயே சிரிக்கும் என்ற ஆதாரம் கிடைக்கவேண்டும்." என்றார்.

பிறகு தான் சொன்னதை நிரூபிக்கும் விதமாக தனது பாக்கெட்டிலிருந்து நீலநிற செக் புத்தகம் ஒன்றை வெளியிலெடுத்துக் காட்டினார். சிட்டி பேங்க் ஆஃப் நியூயார்க் என்று அதன்மேல் எழுதியிருந்தது.

"அதன்பிறகு நீங்கள் காற்றில் மிதப்பீர்கள்," தூண்டும் விதமாகக் கூறினார் திரு.நேண்டி. "அந்த நாயைச் சிரிக்க வைக்கும் விதம் உங்களுக்குத் தெரிந்தால் போதும். இந்தக் கனவான் 20,000 டாலர்கள் தரத் தயாராக இருக்கிறார். அதாவது இரண்டு லட்சம் ரூபாய்கள்."

திரு.நேண்டியின் வார்த்தைகள் அஷமஞ்சா பாபுவின் மனதில் உருவாக்கிய சித்திரங்கள், அவர் ஒரு விசாலமான குளிரூட்டப்பட்ட அறையில் இருக்கிறார், சுழலும் நாற்காலியில் அமர்ந்தபடி, கால்கள் மேசைமீது இருக்க, ஹசுநோ-ஹானாவின்* நறுமணம் அறையை நிறைக்கிறது. ஆனால், அடுத்த நொடி இந்தச் சித்திரம் திடீரென்று எழுந்த ஒரு ஒலியால்

ஊசியால் குத்தப்பட்ட பலூன்போல மறைந்தது. ப்ரௌனி சிரித்துக் கொண்டிருந்தது.

அது இதற்குமுன் சிரித்த எந்தச் சிரிப்பையும் போல் இல்லை. "ஆமாம் இந்த நாய் சிரிக்கிறது."

திரு. மூடி முழங்காலிட்டு அமர்ந்தபடி, பரவசத்தினால் உண்டான பதட்டத்தோடு அந்த அபூர்வமான காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார். செக் புக் மீண்டும் வெளியே வந்தது, அதோடு, அவருடைய தங்க பார்க்கர் பேனாவும் வந்தது.

ப்ரௌனி இன்னமும் சிரித்துக் கொண்டிருந்தது. அஷமஞ்சா பாபுவுக்கு அதன் சிரிப்பிற்கான காரணம் புரியவில்லை, யாரும் திக்கவில்லை, யாரும் தடுமாறி விழவில்லை, யாருடைய குடையும் காற்றில் திரும்பவில்லை, சுவரில் உள்ள எந்தக் கண்ணாடியிலும் செருப்பு விழவில்லை. ஆனால் ஏன் ப்ரௌனி சிரிக்கிறது?

"திரு. மூடி இப்போது தரையிலிருந்து எழுந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டார். "அவர் தன்னுடைய பெயரை எப்படி எழுதுகிறார் என்று கேள்." என்றார்.

திரு.நேண்டி அக்கேள்வியை பெங்காலியில் ஒலிபரப்பிய பின்னரும் அஷமஞ்சா பாபு பதில் கூறவில்லை, காரணம் இப்போதுதான் அவர் ஓர் ஒளியைக் கண்டிருந்தார், அவ்வொளி அவரது இதயத்தை வியப்பினால் நிறைத்திருந்தது. தன்னுடைய பெயரை எப்படி எழுதவேண்டும் என்று சொல்வதற்குப் பதிலாக, பெங்காலியில், "அந்தக் கனவானிடம் சொல்லுங்கள். உண்மையில் அந்த நாய் ஏன் சிரித்தது என்று தெரிந்தால் அவர் தனது செக் புத்தகத்தைத் திறந்திருக்க மாட்டார்." என்றார்.

வறண்ட குரலில் கூர்மையாக "ஏனென்று நீங்கள் சொல்லலாமே?" என்றார் திரு. நேண்டி. ப்ரௌனி ஒருவழியாகச் சிரிப்பதை நிறுத்தியிருந்தது. அஷமஞ்சா பாபு அதைத் தூக்கி, தன் மடியில் வைத்துக்கொண்டு, அதன் கண்ணீரைத் துடைத்துவிட்டுச் சொன்னார், "என்னுடைய நாய் ஏன் சிரிக்கிறதென்றால், இந்தக் கனவான் பணத்தால் எல்லாவற்றையும் வாங்கமுடியும் என்று நம்புகிறார்."

"ஓஹோ," என்றார் திரு. நேண்டி. "அப்படியென்றால் உன்னுடைய நாய் ஒரு தத்துவவாதி, அப்படித்தானே?"

"ஆமாம், சார்."

"அதன் அர்த்தம் அந்த நாயை நீ விற்கமாட்டாய் என்பதா?" நேண்டியின் முகம் இறுகியது.

"மாட்டேன் சார்."

திரு.மூடியிடம் ஷ்யாமோல் நேண்டி நாயின் உரிமையாளருக்கு அதை விற்கும் எண்ணம் இல்லை என்று மட்டும் சொன்னார்.

திரு.மூடி செக் புத்தகத்தை மீண்டும் தனது பாக்கெட்டில் வைத்துக்கொண்டு, முழங்காலில் இருந்த தூசியைத் தட்டிவிட்டு, அறையிலிருந்து வெளியேறும் வழியில் தலையை அசைத்தபடி கூறினார். "இந்த ஆள் பைத்தியமாகத்தான் இருக்கவேண்டும்."

அமெரிக்கரின் கார் சத்தம் தேய்ந்து மறைந்தபிறகு அஷமஞ்சா பாபு ப்ரௌனியின் கண்களைப் பார்த்தபடி கேட்டார், "நீ ஏன் சிரித்தாய் என்பதற்கு நான் சரியான முறையில் விளக்கம் கொடுத்தேன் இல்லையா?"

ப்ரௌனி ஆமோதிப்பாக மெல்லச் சிரித்தது.

***

* ஜப்பானிய பெர்ஃப்யூம். தாமரை மற்றும் அல்லி மலர்களிலிருந்து தயாரிக்கப்படும் புராதனமான வகை வாசனைத் திரவியம்.

வங்காள மூலமும் ஆங்கில மொழியாக்கமும் – சத்யஜித் ரே

தமிழில் – ஸ்ரீதர்ரங்கராஜ்

11th Advance Tamil - FINAL.indd 87 14-02-2019 17:28:06

படைப்பு முகம்

சத்யஜித் ரே (1921–1992): உலகப்புகழ்பெற்ற இந்தியத் திரைப்பட இயக்குநர். இவர் படைத்துள்ள சிறுகதைகளும் புதினங்களும் புகழ்பெற்றவை. குழந்தைகளுக்கான கற்பனை மற்றும் துப்பறியும் கதைகளையும் எழுதியுள்ளார். அறிவியல் புனைகதைகளில் இவருடைய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.



படிப்போம் பகிர்வோம்

1. அசமஞ்சாபாபுவின் நாய் சிறுகதையில் வரும் பின்னோக்கு உத்தியை எழுதுக.
2. பிரௌனி நாய்க்குட்டியின் முதல் மூன்று சிரிப்புகளுக்கும் கடைசி சிரிப்பிற்கும் உள்ள வேற்றுமையை விளக்குக.
3. அசமஞ்சாபாபுவிடம் காசோலையைக் கொடுத்துப் பிரௌனி நாய்க்குட்டியைத் திரு. மூடி பெற்றுச் செல்வதாக நினைத்து, கதையை நிறைவு செய்க.
4. அசமஞ்சாபாபுவின் பாத்திரப்படைப்பைத் திறனாய்வு செய்க..
5. 'அசமஞ்சாபாபுவின் நாய்' கதையின் கருப்பொருளும் சுவையும் குறையாமல் ஒரு பக்க அளவில் சுருக்கி எழுதுக.
6. பணத்திற்காக எதையும் செய்யலாமா? உன் முடிவிற்கான காரணங்களை 'அசமஞ்சாபாபுவின் நாய்' சிறுகதை கொண்டு விளக்குக.

அறிவோம் தெளிவோம்

ரே – இந்திய சினிமாவின் முகம்

உலக அளவில் இந்தியத் திரைப்படக்கலை புகழ்பெற காரணமானவர்களில் முக்கியமானவர் சத்யஜித் ரே. திரைப்பட இயக்குநர், எழுத்தாளர், இசையமைப்பாளர், தயாரிப்பாளர் எனப் பன்முகம்கொண்ட ரே, தன் திரைச் சாதனைகளுக்காக ஆஸ்கர், மகசேசே போன்ற உலகப்புகழ்பெற்ற விருதுகளைப் பெற்றவர். இந்தியாவின் மிக உயரிய விருதான பாரத ரத்னா விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.

'பதேர் பாஞ்சாலி'யில் ஒரு காட்சி

ரேயின் முதல் திரைப்படமான 'பதேர் பாஞ்சாலி' (1955) உலகளாவிய திரைக்கலை வல்லுநர்களால் வியந்து போற்றப்பட்டது .கேன்ஸ் திரைப்பட விழா, சான்ஃப்ரான்சிஸ்கோ திரைப்பட விழா உள்ளிட்ட பல உலகப் பட விழாக்களில் "பதேர் பாஞ்சாலி" திரையிடப்பட்டு விருதுகளைக் குவித்தது. பதேர் பாஞ்சாலிக்குப் பிறகு, தொடர்ந்து சிறந்த படங்களை இயக்கினார். அகந்துக், ஷகா புரொஷகா, ஞானஷத்ரு, சுகுமார் ராய், காரே பைரே, பிக்கூர் டைரி', பாலா, கூப்பி கைன் பாகா பைன், ரவீந்திரநாத் தாகூர், பரஷ் பதர், அபராஜிதோ உள்ளிட்ட 29 திரைப்படங்களையும் 8 ஆவணப்படங்களையும் இயக்கியுள்ளார். இவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களையும் எழுதியுள்ளார். ரே வாழ்ந்த காலத்திலேயே அவரைப் பற்றி 15க்கும் மேற்பட்ட ஆவணப்படங்கள் தயாரிக்கப்பட்டன.

11th Advance Tamil - FINAL.indd 88 14-02-2019 17:28:06

குறுங்கதை

ரப்பர் பந்து

– எஸ்.ராமகிருஷ்ணன்

மரபான கதைசொல்லலில் நவீனப் புனைகதையின் வடிவத்தை இணைத்துக் குறுகிய வடிவில் தரும் முயற்சியே குறுங்கதை.

சி.எல்.பி. பள்ளியின் மைதானத்தில் தனது பன்னிரண்டு வயதில் தொலைத்த பந்தைத் தேடி, அறுபத்து ஏழாவது வயதில் ஊருக்குச் சென்றார் நாராயணன்.

அதைப்பற்றி யாரிடமும் சொல்லவில்லை என்ற போதும் மனது அந்தப் பந்தை எப்படியாவது கண்டுபிடித்துவிட வேண்டும் என்பதில் அக்கறையாக இருந்தது. அந்தப் பந்தை அவர் அடித்தபோது மாலை நான்கு மணியிருக்கும். ரப்பர் பந்து பறந்து வேப்பமரத்தின் பின்னால் போய் விழுந்தது. பின்பு அது எவர் கண்ணிலும் படவேயில்லை. *என்னவாகியிருக்கும்.*

யாராவது பந்தை எடுத்திருப்பார்கள். அல்லது அருகிலுள்ள கிணற்றினுள் விழுந்து கிடந்திருக்கக்கூடும். மரக்கிளையில் சிக்கி நின்றிருக்கவும் சாத்தியமுண்டு. அல்லது வானில் இருந்து அரூபத்தின் கை ஒன்று அந்தப் பந்தைப் பறித்துத் தனதாக்கிக் கொண்டிருக்கவேண்டும்.

இந்த நான்கில் அரூபத்தின் கையைத்தான் அவர் அதிகம் நம்பினார்.

மைதானத்தில் தன்னுடைய பந்தைத்

தொலைக்காத சிறுவர்கள் யாராவது உலகில் இருக்கிறார்களா என்ன?

அவர் தொலைத்த பந்தின் நிறம், அதில் ஒட்டியிருந்த தூசிவரை யாவும் நினைவில் அப்படியே இருந்தது. சி.எல்.பி. மைதானத்தில் புழுதி பறந்து கொண்டிருந்தது. அன்று தன்னோடு விளையாடிக் கொண்டிருந்தவர்களில் எவரையும் இன்றுவரை திரும்பச் சந்திக்கவேயில்லை.

மைதானம் காலியாகக் கிடந்தது. முன்பு பார்த்த மரங்கள் இல்லை. கிணறுகூட மூடப்பட்டு, அந்த இடத்தில் கழிப்பறைக் கட்டடம் ஒன்றிருந்தது.

மைதானத்தின் வெற்றிடம் விளையாட்டினை நினைவுபடுத்தியது.

அவர் பந்து விளையாட்டிலிருந்து விடுபட்டு நாற்பது வருடங்களுக்கும் மேலாகியிருந்தது.

திடீரெனக் காற்றில் கைவீசி ஒரு பந்தை அடித்தார். அது காற்றிலே ஓடி மறைந்தது.

நீண்ட பெருமூச்சின் நடுவே தூரத்துக் காட்சியொன்றைப் பார்த்தார்.

ஊதா நிற யூனிபார்ம் அணிந்த யாரோ ஒரு சிறுவன் தொலைந்த பந்தைத் தேடிக் கொண்டிருந்தான்.

மிக ஆறுதலாக இருந்தது. அவர் சந்தோஷத்துடன் வீடு திரும்பத் தொடங்கினார்.

படைப்பு முகம்

எஸ். ராமகிருஷ்ணன் (1966): நவீனத் தமிழ் இலக்கியத்தின் பிரபலமான எழுத்தாளரான இவர், புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், நாடகங்கள், குழந்தைகளுக்கான ஆக்கங்கள், திரைக்கதை, திரைப்பட உரையாடல்கள் உள்ளிட்ட படைப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதோடு, தமது உரைகள், பத்திகள் மூலமாகச் சிறந்த இலக்கியங்கள், திரைப்படங்கள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தியும் வருகிறார். இக்கதை 'நகுலன் வீட்டில் யாருமில்லை' என்ற தொகுப்பிலிருந்து தரப்பட்டுள்ளது.

படிப்போம் பகிர்வோம்

1. பல ஆண்டுகளுக்குப் பிறகு நீர் படித்த தொடக்கப் பள்ளிக்குச் செல்கிறீர். அப்போது உமக்குத் தோன்றும் எண்ண ஓட்டங்களை எழுதுக.

11th Advance Tamil - FINAL.indd 90 14-02-2019 17:28:07

நுண்கதைகள்

பனித்துளியின் பேச்சு

– ஹெச்.ஜி. ரசூல்

இங்கு நவீனத் தமிழ்க் கதையின் புதிய வடிவமான நுண்கதைகள் தரப்பட்டுள்ளன.

கவிதை, கதை, நாவலுக்குமான வரையறைகளை அழித்துத் தொடக்கம், நடு, முடிவு என்றேதுமில்லா நேரற்ற வரிசை கொண்டவை நுண்கதைகள். இவை வேடிக்கை, விநோதம், பகடி, குறியீடு ஆகிய அம்சங்கள் நிறைந்தவை. மேலும், கவித்துவ மொழியையும் மெய்யியல் உள்ளடக்கத்தையும் கொண்டவை.

அதிகாலை வரவேற்று ஒரு கவிதையை வாசித்தது. பூவின் இதழ்களிலும் புல்லின் நுனியிலும் உட்கார்ந்திருந்த பனித்துளி தன்னில் பிரபஞ்சத்தைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

குழந்தைகள் விளையாட்டுப் போக்கில் ஊதிப் பறத்திவிடும் குமிழியாகவும் அது இல்லை.

இருள் விலகத் தொடங்கியபோது, கர்வத்தோடு அருகே வந்த இளவெயில் சொன்னது.

உன்னை நான் சாப்பிடப் போகிறேன்.

எதுவும் பேசாமல் மவுனம் காத்தது பனித்துளி.

துளியாய் இருந்தபோது என்னைத் தொந்தரவு செய்தாய். ஆவியாகிக் காற்றில் கரைந்துவிட்டேன். இப்போது என்னை நீ என்ன செய்யமுடியும்?

படைப்பு முகம்

ஹெச்.ஜி. ரசூல் (1959 – 2017): பெண்கள் மீதான ஒடுக்குமுறை சார்ந்த கருத்துகளைத் தமது எழுத்துகளால் தகர்த்தெறிந்தவர் இவர். மைலாஞ்சி, பூட்டிய அறை, ஜனகணமன, என் சிறகுகள் போன்றவை இவரது புகழ்பெற்ற படைப்புகள். போர்ஹேயின் வேதாளம் இவரது நுண்கதைத் தொகுப்பு.

படிப்போம் பகிர்வோம்

உமக்குப் பிடித்த கவிதை ஒன்றினை நுண்கதையாக எழுதுக.

11th Advance Tamil - FINAL.indd 91 14-02-2019 17:28:07

ஒற்றைக்குரல்

– இளங்கோ கிருஷ்ணன்

அவன் பாணன். செவியே மனமாய் வாழ்ந்து கொண்டிருப்பவன். ஒலியின் உதடுகள் பேசும் மர்ம மொழியின் வசீகரத்தில் புத்திசொக்கித் திரிபவன். திசையெங்கும் ஒரு வானம்பாடியாய்ச் சுற்றி அலைபவன்.

அலைதலின் வெம்மையில் நாவறள, அவள் வீட்டு வாசலில் போய் நின்றான். தாயே தாகமாய் உள்ளது சிறிது நீர் கொடுங்கள் என்றவன், அவள் உள்ளே செல்லும் போதுதான் அந்த வினோதத்தைக் கவனித்தான்.

திரும்பி வந்தவளிடம் "இரண்டு கால்களையும் நன்றாகவூன்றித்தானே நடக்கிறீர்கள்?" என்று கேட்டான். பிறகு, அவளின் காற்சிலம்புகளை வாங்கிக் காதருகே கொண்டுபோய் ஆட்டியாட்டிச் சோதித்தான்.

அவன் செய்கையின் காரணம் புரியாதவள் அவை மாணிக்கப் பரல்களால் ஆனவை என்றாள்.

அறிவேன் தாயே. இவை மாணிக்க அரிகள் என ஜதி சொல்கிறது. ஆனால், இரண்டிற்கும் ஓசை வேறுபடுகிறது. இரண்டிலுமுள்ள பரல்களில் ஒன்றே ஒன்று மட்டும் ஓசை எழுப்புவதே இல்லை என்று ஆச்சர்யப்பட்டவன் அதை அவளிடமே திருப்பித் தர, கைநழுவியது.

அது தரையில் மோதியபோது அந்த நகரம் ஒருமுறை நடுங்கியது.

படைப்பு முகம்

இளங்கோ கிருஷ்ணன் (1979): காயசண்டிகை, பட்சியின் சரிதம், பஷீருக்கு ஆயிரம் வேலைகள் தெரியும் ஆகிய கவிதை நூல்களின் ஆசிரியர். நுண்கதை வடிவத்தைத் தமிழில் அறிமுகப்படுத்த முயற்சி செய்பவர்களுள் ஒருவர்.

படிப்போம் பகிர்வோம்

1. ஒற்றைக் குரல் நுண்கதை படித்ததும் உன் நினைவில் வருகின்ற தமிழ் இலக்கிய நிகழ்வு பற்றி எழுதுக.
2. ஒற்றைக் குரல் கதையில் வரும் பாணனின் இயல்புகளை எழுதுக.

கண்ணாடி

9BUN9C

பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஜெயகாந்தனின் 'பூ உதிரும்' கதையின்படி கீழ்க்காண்பவை எதனோடு தொடர்புபடுத்தப்படுகின்றன?

1. அரும்புமீசை	-	அ) சுருட்டுப்புகை
2. முறுக்குமீசை	-	ஆ) முதல் உலகப்போர்
3. நரைத்தமீசை	-	இ) இரண்டாவது உலகப்போர்
4. பழுப்பேறியமீசை	-	ஈ) தளர்ந்த உடல்

அ) 1- ஆ, 2- இ, 3- ஈ, 4-அ ஆ) 1-ஆ, 2- அ, 3-ஈ 4- இ

இ) 1- அ, 2- இ, 3- ஈ, 4-ஆ ஈ) 1-இ, 2- ஆ, 3-ஈ 4- அ

2. "உனக்கு ஒரு அப்பா கிடைப்பாருடா கண்ணா" – யார்? யாரிடம் கூறியது?

அ) அம்மா கேசவனிடம் ஆ) மரகதம் சோமநாதனிடம்

இ) பேபிகுட்டி சிறுவனிடம் ஈ) சரோஜா பிரக்கனிடம்

3. 'நசுக்கம்' கதையில், 'அவள் சல்சல் என்று தட்டி ஆட்டம் போட்டு நடித்துக் காட்டினாள்'. இதில் 'அவள்' என்ற சொல் யாரைக் குறிக்கிறது

அ) மிக்கேலு ஆ) சுந்தரி இ) தங்க மாடத்தி ஈ) நீலா

4. பட்டாசுத் தொழிலாளர்களுக்குச் சம்பளக் கணக்கில் சேராது தனியாக வழங்கப்படும் உடனடித் தொகை

அ) போனஸ் ஆ) ரொக்கக் காசு இ) கூடுதல் ஊதியம் ஈ) ஊக்கத் தொகை

5. விளக்கம் கண்டு விடை எழுதுக

'மரபான கதை சொல்லலில் நவீனப் புனைகதையின் வடிவத்தை இணைத்துக் குறுகிய வடிவில் எழுதப்படும் கதை'.______________

6. பொருந்தாததைக் கண்டறிக

அ) பேபிகுட்டி - பாட்டி ஆ) சுந்தரி - அத்தை

இ) குமார்- பக்கத்து வீட்டுக்காரர் ஈ) துரைசாமி - அப்பாவின் நண்பர்

7. ஹசுநோ ஹானா - என்பது

அ) மருத்துவரின் பெயர் ஆ) நறுமணப் பொருளின் பெயர்

இ) ஊரின் பெயர் ஈ) பத்திரிகையின் பெயர்

11th Advance Tamil - FINAL.indd 93 14-02-2019 17:28:07

8. "உனக்கு என்ன ஊரில் உள்ள நாய்களை எண்ணும் வேலையா?" – யார்? யாரிடம் கூறியது?

அ) அஷமஞ்சா பாபு பிபினிடம் ஆ) நேண்டி அஷமஞ்சாபாபுவிடம்

இ) நேண்டி மூடியிடம் ஈ) பேராசிரியர் சாட்டர்ஜி அஷமஞ்சாபாபுவிடம்

9. விளக்கம் கண்டு விடை எழுதுக

தொடக்கம், நடு, முடிவு என்று எதுவுமில்லாத நேரற்ற வரிசை கொண்ட இக்கதைகள் வேடிக்கை, விநோதம், பகடி, குறியீடு ஆகிய அம்சங்கள் நிறைந்தவை. ______________________.

10. பொருந்தும் இணையைக் கண்டறிக

அ) ரப்பர் பந்து – ஹெச்.ஜி. ரசூல் ஆ) பூ உதிரும் – சோ. தர்மன்

இ) நசுக்கம் – ஜெயகாந்தன் ஈ) இறுக மூடிய கதவுகள் – ஆர். சூடாமணி

11. விளக்கம் கண்டு விடை எழுதுக

பெண்கள் மீதான ஒடுக்குமுறை சார்ந்த கருத்துகளைத் தமது எழுத்துகளால் தகர்த்தெறிந்தவர் இவர். மயிலாஞ்சி, பூட்டிய அறை, போன்ற படைப்புகளை எழுதியவர்.__________________.

12. கீழ்க்காணும் தொடர்களைப் படித்து சரியான விடைக்குறிப்பைத் தேர்வு செய்க.

கூற்று (கூ): மருத்துவமனையில் இருக்கும் தன் பாட்டியைப் பார்க்க தன் மகன் அருணை அழைத்துவர வேண்டாம் என்று நீலா கூறினாள்.

காரணம் (கா) : மருத்துவமனையில் இருக்கும் பாட்டி ஆக்சிஜன் குழாய் உள்ளிட்ட கருவிகளோடு இருப்பதைப் பார்த்து அவன் பயந்துவிடுவான்.

அ) கூற்று சரி, காரணம் தவறு.

ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம், கூற்றுக்கான சரியான விளக்கம்.

இ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால், காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

ஈ) காரணம், கூற்று இரண்டும் தவறு.

குறுவினா

1. "இது நெஜ யானைதான், நான்தான் இதற்கு முன்னாலே சரியாப் பாக்கலை" –யார்? யாரிடம் கூறியது?
2. பிளாஸ்டிக் யானையின் தோற்றத்தைச் சார்வாகன் எவ்வாறு விவரிக்கிறார்?
3. எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு வழங்கப்பட்ட இந்திய அரசின் மிக உயர்ந்த இலக்கிய விருதுகள் யாவை?
4. 'இறுக மூடிய கதவுகள்' கதையில் வரும் செல்லப்பாவின் தோற்றத்தை விளக்குக.
5. நசுக்கம் கதையில் பட்டாசுத் தொழிலாளர்கள் வட்டமாய் அமர்ந்து பணிபுரியும் காட்சிக்குச் சொல்லப்படும் உவமை யாது?
6. நசுக்கம் கதையில் வரும் பட்டாசுத் தொழிற்சாலையின் பாதுகாப்புக் குறைபாடுகளைச் சுட்டுக.
7. பேபி குட்டி – பெயர்க் காரணம் தருக.

11th Advance Tamil - FINAL.indd 94 14-02-2019 17:28:07

8. பங்கர், பொம்பர் என்பன யாவை?

9. பசி என்னும் சிறுகதை எந்த நாட்டின் பின்னணியை உணர்த்துகிறது?

10. அஷமஞ்சாபாபுவின் நீண்டநாளைய ஆசை யாது?

11. ப்ரௌனியை நட்பான நாய் என்று அஷமஞ்சாபாபு எண்ணியது ஏன்?

12. ரப்பர் பந்து கதையில் நாராயணன் தான் படித்த பள்ளிக்கு மீண்டும் சென்றதற்கானக் காரணம் என்ன?

சிறுவினா

1. ரங்கநாதன் கண்டுபிடித்த புது யானை விளையாட்டைப் பற்றி எழுதுக.

2. பெரியசாமியின் தோற்றம் குறித்து ஜெயகாந்தன் எவ்வாறு விளக்குகிறார்?

3. சோமநாதன் தான் பூச்சூட்டலுக்கு வரமுடியாமைக்கு எழுதிய காரணம் என்ன?

4. சோமநாதன் அமைத்த பூந்தோட்டம் பற்றி எழுதுக.

5. குழந்தைகளின் உலகம் குறித்து ஆர். சூடாமணி விளக்குவது யாது?

6. மாலையில் பணி முடித்த பட்டாசுத் தொழிலாளர்கள், தங்களைச் சுத்தம் செய்துகொள்ளப் படும் துயரங்களை எழுதுக.

நெடுவினா

1. 'பூ உதிரும்', 'யானையின் சாவு' ஆகிய கதைகளில் வரும் தந்தைப் பாத்திரப் படைப்புகளின் பண்புநலன்களை ஒப்பிடுக.

2. 'பேபிகுட்டி' கதையில் வரும் பாட்டியின் பேரனுடனான பாவனை விளையாட்டையும், 'யானையின் சாவு' கதையில் வரும் சிறுவனின் யானையுடனான பாவனை விளையாட்டையும் வேறுபடுத்தி விளக்குக.

3. 'இறுகமூடிய கதவுகள்' கதையில் வரும் அம்மாவின் தியாகத்தையும், 'பூ உதிரும்' கதையில் வரும் கௌரி என்னும் அம்மாவின் தியாகத்தையும் உன்பார்வையில் மதிப்பிடுக.

4. நசுக்கம் சிறுகதையில் இடம்பெறும் வட்டார மொழி வழக்குகளைத் தொகுத்து எழுதுக.

11th Advance Tamil - FINAL.indd 95 14-02-2019 17:28:07

படிப்போம் பயன்படுத்துவோம்

1) *கீழ்க்காணும் கதையை உம் கற்பனையில் நிறைவு செய்து, பொருத்தமான தலைப்பினை இடுக*

எதையோ கண்டுபிடித்துவிட்டவள் போல் கணவனை அவசரமாக அழைத்தாள் அமுதா, ஐந்து வயது சிறுவனின் அம்மா.

"ஏங்க ! இங்க வாங்களேன், நம்ம பையன் பின் பக்கம் போய் ட்ரெயினைப் பார்க்கும் போதுதான் அப்படி மாறிடுறான். மூஞ்சியைத் தொங்கப் போட்டுக் கிட்டு. மூலையில் போய் உட்கார்ரதுன்னு..."

கடந்த இரண்டு வாரங்களாகவே தங்கள் மகனிடம் ஏற்பட்டிருக்கும் அந்த மாற்றம் கண்டு அவர்கள் மிகுந்த கவலையில் இருந்தனர். ஒரே சோகமாய் முகத்தை வைத்துகொண்டு அறையின் மூலையில் உட்கார்ந்து விடுகிறான்.

மருத்துவரிடம் காண்பித்தால், "ஒன்னும் பிரச்சினை இருக்கிற மாதிரி தெரியலையே! கேக்கிறதை வாங்கிக் கொடுங்க" என்கிறார்.

இப்போதுதான் அவர்களுக்குத் தெரிகிறது அவன் தொடர்வண்டியைப் பார்ப்பது. வீட்டுக்குப் பின்புறம் இருக்கும் தண்டவாளத்தில், காலையில் இரண்டும் மாலையில் இரண்டுமாகப் தொடர்வண்டிகள் செல்கின்றன . அதைப் பார்த்தபின்தான் குழந்தை அப்படி ஆகிறான். "அதிலென்ன இருக்கிறது? எப்போதும் பார்ப்பதுதானே!"

மாலை புகைவண்டி போகும் போது இருவரும் மகனைக் கவனித்தனர்.

தொடர்வண்டியில் உள்ளவர்களைப்பார்த்து அச்சிறுவன் கைகளை அசைக்க , வண்டியிலிருந்து யாருமே பதிலுக்குக் கையசைக்கவில்லை.

----

2) *வழங்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் சிறுகதை ஒன்றினை எழுதுக*

பெருநகரம் - அடுக்குமாடிக் குடியிருப்பில் சொந்த வீடு – கணவன் மனைவி - இரண்டு குழந்தைகள்- காரில் சென்று பெரிய வாணிக வளாகத்தில் பொருட்கள் வாங்குதல் – திரும்பும்போது சாலை ஓரத்தில் முதிய பெண்மணி ஒருவர் மயங்கிக் கிடத்தல் – அருகில் உள்ளவர்கள் தண்ணீர் தெளித்தல் – நடைபாதையில் முதல் நாளிலிருந்து யாரிடமும் எதையும் வாங்கிக்கொள்ள மறுத்துப் பட்டினியாகக் கிடந்தமை - பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்டவர் என அறிதல் – இவர்கள் வற்புறுத்தி உதவுதல்- அடுத்த நாள் தன் சொந்த ஊரில் பல ஆண்டுகளாக ஆதரவற்று வாழும் தன் தாய் தந்தையரைப் பார்க்க அவன் கிளம்புதல். .

3) *ஒரு கதையின் வரிகள் வரிசை மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன. வரிசையைச் சரிசெய்து கதையைப் படிக்கவும்.*

அ) *சிறிது நேரம் படுக்கையிலேயே இருந்துவிட்டு ஒரு முடிவுக்கு வந்தவனாய் எழுந்தான்.*

11th Advance Tamil - FINAL.indd 96 14-02-2019 17:28:07

ஆ) ஒரு கதவை கையால் அழுத்திக்கொண்டு இன்னொரு கதவினை இழுத்துப்பார்த்தான். கதவு திறந்து கொண்டது.

இ) அருணன் காலையில் தூக்கத்திலிருந்து விழித்தவுடன் எழுந்து தன் அறையின் கதவைத் திறக்க முயன்றான்.

ஈ) அலைபேசியில் யாரையாவது அழைக்கலாம் என எண்ணியபோது அதுவும் அறைக்குள் இல்லை. இரவில் அலைபேசியை வெளியே வைத்துவிட்டான் போலும்.

உ) கதவு திறக்கவில்லை. இழுத்தான். திறக்கவில்லை. தட்டிப்பார்த்தான். யாரும் வரவில்லை. வெளிப்பக்கம் தாழிட்டிருக்கிறார்களோ?

ஊ) அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் இப்படிச் செய்தார்கள்?

4) கொடுக்கப்பட்டுள்ள படத்திற்குப் பொருத்தமான கதை ஒன்றினை எழுதுக

5) உங்களின் மனம் கவர்ந்த இரண்டு சிறுகதை ஆசிரியர்களைப் பற்றிய செய்திகளைத் திரட்டி எழுதி வருக.

11th Advance Tamil - FINAL.indd 97 14-02-2019 17:28:07

இணையச்செயல்பாடு

கதையியல்

கதை கதையாம் ! சிறு கதையாம் !

படிகள்

1. கொடுக்கப்பட்டிருக்கும் உரலி/ விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி 'tamilvu' என்னும் இணையப் பக்கத்திற்குச் செல்க.
2. திரையின் இடப்பக்கம் சிறுகதை – ஓர் அறிமுகம், சிறுகதை – தோற்றமும் வளர்ச்சியும், புதுமைப்பித்தனின் சிறுகதைகள் போன்ற தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றுள் ஒன்றைத்தேர்வு செய்ததும், கீழ்ப்பகுதியில் இருக்கும் பாடஅமைப்பு என்பதைச் சொடுக்கி, சிறுகதையின் வரலாற்றை அறிக.

   எடுத்துக்காட்டாக, சிறுகதை – ஓர் அறிமுகம் என்பதில் உள்ள சிறுகதை இலக்கணம், புதினமும் சிறுகதையும், சிறுகதை வரையறை போன்ற உள்தலைப்புகளைப் படிக்கலாம். தன் மதிப்பீடு வினாக்களுக்கும் விடையளிக்கலாம்.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :

படி 1

படி 2

படி 3

கதையியல் இணையப் பக்கத்தின் உரலி

http://www.tamilvu.org/ta/courses-degree-p101-p1011-html-p10111nd-23794

B145_11_ADT_TM

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

11th Advance Tamil - FINAL.indd 98 14-02-2019 17:28:08